
கல்கி
KALKI ஆகஸ்ட் 28, 1955
4 அணா

பிரவேசக் கட்டணம் கிடையாது!

இந்த அரியதான

டால்டா க்விஸ்

போட்டியில் **கலந்துகொள்ளுங்கள்**

முடிவு தேதி : 30 செப்டம்பர் 1955

ரூ. 25002

ஜெயிக்க வேண்டும்!!

(மற்றொரு தொகையான ரூ. 20,001 தருமத்திற்கு அளிக்கப்படும்)

முதல் பரிசு
ரூ. 20,001*

இரண்டாவது பரிசு
ரூ. 5,001



*முதல் பரிசு பெற்றவரோ, அல்லது முதல் பரிசைப் பகிர்ந்தவர்களோ ஒன்று சேர்ந்து ஒரு குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கோ அல்லது வார்டுக்கோ மற்றொரு தொகையான ரூ. 20,001 அளிப்பதற்கான உரிமை உண்டு.

உங்கள் டால்டா வியாபாரியிடமிருந்து ஒரு பிரவேச பாரத்தைப் பெறுங்கள்!

எல்லோரும் கலந்து கொள்ளலாம் (பம்பாய், ஹைதராபாத், சௌராஷ்டிரா, மைசூர் இராஜதானிகளில் உள்ளவர்களைத் தவிர).

HVM. 252-50 TM

மலர் 15 இதழ் 4
கல்கி
மன்மத ஆவணி 12
1955 ஆகஸ்டு 28

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஆகஸ்ட்
26உ
முதல்
சென்னை
சித்ரா
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தமிழ்நாடெங்கும்
ஏ.சி.பிள்ளை அளிக்கும்
வைத்தியா பிலிம்ஸ்
மங்கையர்
திலகம்
டைரக்ஷன்.... பிரசாத்
தயாரிப்பு
ஸ்ரீபாத சங்கர்
ஸ்டுடியோ... வாஹினி



மலர் 15 | இதழ் 4

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵ | ஆவணி 12

பாங்குத் தீர்ப்பு

எட்டு ஆண்டுகளாகப் பல 'டிரைப்யூனல்'களையும் சுப்ரீம் கோர்ட்டையும் எட்டிப் பார்த்ததுடன், இந்திய சர்க்கார் மந்திரிகளிலும் ஒருவரை ராஜிநாமா செய்யும்படி தூண்டிய பாங்குச் சிப்பந்திகள் பிரச்னை சுமுகமாகத் தீருவதற்கு வழி பிறந்து விட்டது!

அப்பிரச்னை சம்பந்தமாக எழுந்த ஆலோசனை, புனராலோசனை, விசாரணை, மறு விசாரணை, வாதங்கள், பிரதி வாதங்கள், எதிர் வாதங்கள் எல்லாவற்றிற்கும் முடிவு ஏற்பட்டு விட்டதென நம்பலாம்.

அகில இந்தியாவிலும் உள்ள பாங்குச் சிப்பந்திகளின் நிலைமை பற்றி விசாரிப்பதற்காகக் கடைசியாக நியமிக்கப்பட்ட கஜேந்திரகட்கார் கமிஷனின் அறிக்கை சென்ற வாரம் வெளியாகியுள்ளது.

மேற்படி பிரச்னையை மேலும் இழுத்தடித்துக் கொண்டு போகக் கூடாது என்ற விவேகத்துடன், இந்திய சர்க்கார் அக்கமிஷனின் சிபார்சுகளைத் தாமதமின்றி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மகிழ்ச்சி தரும் இச்செய்தியைத் தொழிலாளர் இலாகா மந்திரி ஸ்ரீ கந்துபாய் தேசாய் லோக சபையில் அறிவித்ததுடன், கமிஷனின் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான சட்டம் விரைவில் இயற்றப்பட்டுவிடும் என்றும் தெரிவித்தார்.

இரண்டு வருஷங்களுக்கு முன் இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட அப்பீல் டிரைப்யூனல் கூறிய தீர்ப்பை இந்திய சர்க்காரே ஏதேதோ காரணம் கூறி அமுலுக்குக் கொண்டு வராமல் நிறுத்தி வைத்தார்கள்.

அவ்விதம் நிறுத்தி வைத்ததை வன்மையாகக் கண்டித்தே பாரத நாடெங்கும் பாங்குச் சிப்பந்திகள் கிளர்ச்சி செய்யும்படி நேர்ந்தது.

சில சில்லறைத் திருத்தங்களுடன் அந்தத் தீர்ப்பை அமுல் நடத்த வேண்டும் என்று இப்போது கஜேந்திர கட்கார் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது.

* * * *

கஜேந்திர கட்கார் கமிஷன் அறிக்கையில் சில மிக முக்கியமான சிபார்சுகள் அடங்கி யிருக்கின்றன.

அவற்றை பாங்குச் சிப்பந்திகள் மாத்திரமல்ல, நாட்டின் சுபிட்சத்திலும் 'சோஷலிஸ' சமுதாய அமைப்பிலும் அக்கறை கொண்ட சகலரும் கருத்துவேற்றுமையின்றி ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சோஷலிஸ சமுதாய அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பாங்கிகளின் வருமானத்தில் முதலாளிகள், நிர்வாகிகள், சிப்பந்திகள் எல்லாருக்குமே பங்கு கிடைக்கும்படியான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

பாங்குகளின் பங்குதாரர்களுக்கு 'டிவிடெண்ட்' தொகைகளைக் குறைத்தாவது, சிப்பந்திகளுக்கு நியாயமான சம்பளம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

இவை யெல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமானது 1954 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மேற்படி சிபார்சுகள் அமுலுக்கு வர வேண்டும் என்பதுதான்.

இதன் பலனாக, பாங்குச் சிப்பந்திகளுக்குச் சென்ற ஒரு வருஷத்துக்கு மேல் கிடைக்க வேண்டிய உபரித் தொகைகள் கிடைக்க வழி பிறந்திருக்கிறது.

பொதுவாக நாட்டின் சுபிட்சத்துக்கும் குறிப்பாகத் தொழில் துறைகளின் முன்னேற்றத்துக்கும் பாங்குகள் திருப்திகரமாக நடைபெற வேண்டியது அவசியம் ஆகும்.

அவை திருப்திகரமாக இயங்குவதற்குச் சிப்பந்திகளின் உழைப்பும் ஒத்துழைப்பும் அத்தியாவசியம்.

அத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கான சிபார்சுகளைச் செய்துள்ள கஜேந்திர கட்கார் கமிஷனையும், அந்தச் சிபார்சுகளை எவ்வித ஆட்சேபணையுமின்றி ஏற்றுக் கொண்டுள்ள இந்திய சர்க்காரையும் மிகவும் பாராட்டுகிறோம்.

நூற்றாண்டு விழா

சென்ற திங்கட்கிழமையன்று சென்னையில் ஒய். எம். ஸி. ஏ. உலக ஸ்தாபனத்தின் சதாப்த விழா கொண்டாடப்பட்டு, ஒரு பெரிய விருந்தும் நடைபெற்றது. இந்த விழாவுக்குத் தலைமை வகித்த ராஜாஜி தமது பிரசங்கத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை எடுத்துக் காட்டினார். தாழ்ந்த நிலையிலிருப்பவர்களுக்கு உதவி செய்வதற்காகப் பல சமூக நல சங்கங்கள் செய்து வருகிற திருப்பணியானது, சிறிய தொகையினருக்கு, பொறுக்கி எடுத்த மக்களுக்கு உபகாரம் செய்யும் வகையிலிருக்கிறது. ஆனால், அதே சமூக நலத் திருப்பணியைச் சர்க்கார் செய்யும் போது, அது பெரிய அளவில், உரிய காரியக் கிரமங்களை அனுசரித்து அமைகிறது. சர்க்காரினுடைய வெற்றி இந்தத் துறையில் அதிகமாகப் பிரகாசிக்காது. அதற்குக் காரணம் சர்க்கார் எடுத்துக் கொள்ள நேரிடுகிற பாரம் மிகப் பெரிதாக இருப்பதாகும். பாரம் அப்படிப் பெரிதாக இல்லாவிட்டாலும் குறை கூறுவார்கள்.

சில மதப் பிரசார சங்கங்களில் ஒரு சில மக்களைக் கூட்டி வைத்து உதவி செய்கிறார்கள். செய்து, அவர்களுடைய நன்றியையும் அடைகிறார்கள். சர்க்காரும் அதே பணியைச்செய்யும் போது மக்கள் போதிய அளவில் நன்மை ஏற்படவில்லை என்று குறை கூறுகிறார்கள். இது நியாயமில்லை என்றும், சர்க்கார் செய்து வரும் சமூக நலக் காரியங்களை யெல்லாம் பாராட்ட வேண்டும் என்றும் ராஜாஜி கோரினார்.

ஒய். எம். ஸி. ஏ. என்கிற புகழ்பெற்ற சங்கம் மதப் பிரசார சங்கமல்ல. மத பேதமில்லாமல் சமூகத் தொண்டு செய்து வருகிறது அது. ஏசுநாதர் காட்டிய நெறியைப் பின்பற்றி மத மாறுதல் என்கிற பேச்சில்லாமல் சேவை செய்து வருகிற இச் சங்கம், நூறாண்டுகள் வேலை செய்து இவ்வருஷம் ஆகஸ்ட் 22-ம் தேதி நூற்றாண்டு விழாவும் கொண்டாடியிருக்கிறது.

ஏசுநாதர் தமது அந்திம தசையில் செய்த உபதேசமும் பிரார்த்தனையுமே ஒய்.எம்.ஸி.ஏ சங்கத்தின் லட்சியம்.

இந்தப் பிரார்த்தனையிலுள்ள விஷயமே உபநிஷத்திலும் கீதையிலுமுள்ள பிரதான உபதேசம்:

"சுற்றியுள்ள ஜீவன்களுக்குள் உன் உயிரை வைத்து வாழ்வாயாக. உன் உயிரில் மற்ற ஜீவன்களை வைத்து உணர்வாயாக."

உலகத்துக்கு வழி காட்டிய ரிஷிகளும் அவதார புருஷர்களும் ஒரே உண்மையைத் தான் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். பல நாட்டில் பல பெயரிட்டு ஆண்டவனை வழிபடுகிறார்கள். ஆண்டவனுடைய கல்யாண குணங்களுக்குக் கணக்கில்லை. ஒரோரு குணத்தைக் கொண்டு ஒரோரு பெயர் ஏற்படுகிறது. இதனாலேதான் ஆண்டவனுக்கு ஆயிரம் பேர் என்று சொல்வது. இதையே நம்மாழ்வார்,

"கோதில வண்புகழ் கொண்டு சமயிகள்
பேதங்கள் சொல்லிப் பிதற்றும் பிரான்பரன்"

என்று வெகு அழகாகப் பாடினார்.

பேதங்களை நீக்கும் சங்கங்களுக்குள் ஒய்.எம். ஸி. ஏ. சங்கமும் ஒன்றாகி, இன்னும் பல நூற்றாண்டுகள் வெற்றிகரமாகப் பணி புரியுமாக.


கிராமங்களுக்கு வைத்திய வசதி

சென்ற வாரம் புதிய வைத்தியப் பட்டதாரிகள் அடங்கிய கூட்டத்தில் சென்னை சர்க்கார் கல்வி மந்திரி திரு சுப்பிரமணியம் ஒரு அருமையான விஷயத்தைக் குறிப்பிட்டார். அதிகமான கிராமங்களுக்கு வைத்திய வசதி அளிக்கச் சர்க்கார் பெரு முயற்சி செய்து வருவதாகக் கூறினார்.

கிராமப் பகுதிகளில் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் வரையில் டாக்டர்கள் கட்டாய சேவை செய்ய வேண்டும். அதன் பிறகு தான் அவர்கள் நகரங்களுக்கு வர வேண்டும். இத்தகைய நிலைமை சாத்தியமாகும் பொருட்டுச் சென்னை சர்க்கார் ஒரு திட்டத்தைப் பரிசீலனை செய்து வருவதாகக் கூறினார்.

பாரத நாட்டின் ஜீவநாடி கிராமங்கள்தான் என்று அடிக்கடி கூறப்படுகிறது. அப்படியிருந்தும் இந்திய கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் வைத்திய வசதி இல்லாமல் படும் கஷ்டங்களை விவரிக்க இயலாது. அவர்களுக்கு வைத்திய வசதி கிடைப்பதற்குற்ற எதுவும் வரவேற்கத் தக்கதாகும்.

போதிய டாக்டர்கள் இல்லாததால் கிராமங்களில் உள்ள வைத்திய சாலைகள் சரிவர நடைபெறவில்லை என்றும், இனி அத்தகைய நிலைமை நீடிப்பதைச் சர்க்கார் அனுமதிக்க முடியாது என்றும் கல்வி மந்திரி கூறியுள்ளார். கிராமங்களில் டாக்டர்கள் சில வருஷங்கள் கட்டாய சேவை செய்ய வேண்டும் என்ற சர்க்கார் திட்டம் அமுலுக்கு வருவதன் மூலம், அவ்வித அதிருப்தியான நிலைமைக்குப் பரிகாரம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம்.



கடப்பாரையினால் நெம்புவதை விட்டு, ஊசியினால் நெம்பி எறிந்துவிடப் பார்க்கிறார்கள் !

என்ன சேதி?

அன்புப் பரிசு!

இந்தோனீசியாவுக்கும் பாரத நாட்டுக்கும் உள்ள நட்புறவு எத்தகையது என்பது யாவரும் அறிந்ததே. அந்த நட்பை இன்னும் உறுதிப்படுத்தும் வகையில் பாரத சர்க்கார் ஓர் அன்புப் பரிசைச் சென்ற வாரம் இந்தோனீசியாவுக்கு நல்கியது. இந்தோனீசியாவின் பத்தாவது சுதந்திர தின விழாவை யொட்டி, பாரத சர்க்கார் ஒரு விமானத்தை அன்புப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்ட இந்தோனீசிய ஜனாதிபதி ஸோகர்னோ மிக்க உவகையுடன் பாரத சர்க்கார் இப் பரிசு வழங்கியமைக்கு நன்றி கூறியிருக்கிறார். இந்தியா-இந்தோனீசிய நல்லுறவும் நட்பும் மேலும் மேலும் வளர்வதாக!

சர்க்கார் கடன் பத்திரங்கள்

சென்னை ராஜ்ய மக்கள் சென்னை சர்க்கார் கேட்ட ஏழு கோடி ரூபாய்க்கு மேற்படவே கடன் கொடுத்து உதவ முன் வந்த பெரும் பண்பைப் பாராட்டுகிறோம். தேசத்தின் முன்னணித் தலைவர்கள் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டம் நாட்டில் பஞ்சப் பிணியை ஒழித்தது போல், இப்பொழுதும் பணம் கொடுத்தால் நாட்டில் நின்று நிலவி வரும் இன்னும் பல பிரச்னைகள் தீரும். வேலையில்லாக் கொடுமை ஒழியும், ஆலையில்லாத் தொல்லை தீரும் என்பது தெரிந்து மக்கள் ஒத்துழைத்திருப்பதையும் பாராட்டுகிறோம்.

நிபுணர்கள் யோசனை!


ஆலைக் கருவி உற்பத்தி இயந்திர சாலைகளைப் பற்றி நிபுணர்கள் செய்த விமரிசனங்களை மத்திய சர்க்கார் ஒப்புக் கொள்ளவில்லை என்கிற செய்தி பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

நிபுணர்கள் பேச்சே எதற்கும் முடிவு என்னும் வழக்கத்துக்கு இது மாறாக இருக்கிறது. நிபுணர்கள் சொல்வதை என்ஜினீயர்கள் செய்ய வேண்டும். ஆனால் அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது நியாயமாகாது.

பாரதியார் திருநாள்


மகா கவி பாரதியாரின் திருநாளை வழக்கம்போல் இந்த ஆண்டும் சிறந்த முறையில் கொண்டாடப் பாரதியார் சங்கத்தினர் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். அறிஞர்களின் பிரசங்கங்களும், இன்னிசை, நாடகம் முதலிய அம்சங்களுடன் இன்னும் பல புது நிகழ்ச்சிகளும் இவ் வாண்டு விழாவில் நிகழப் போகின்றன என்று அறிகிறோம். இந்தச் சொற்பொழிவுகளோடு பாரதியாருக்குச் செய்யும் ஒரு மகத்தான சேவையாக, இன்னொரு அருமையான ஏற்பாடும் செய்திருக்கிறார்கள்.

பாரதியாருடைய பூரண வடிவமும் எதில் இருக்கிறது? அவருடைய காவிய தரிசனத்தை நாம் எதில் காண்கிறோம்? பாரதியார் என்ற மகா கவிஞன் நிரந்தரமாக வாழ்வது அவர் இயற்றிய பாடல்களிலே



திறமைக்கு மதிப்பு உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் ப்ரூக்பாண்டு தேயிலைக் கம்பெனியின் சேர்மன் ஸ்ரீ ஜி.வி.கே. மூர்த்தி. அவர் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது, சென்னை ப்ரூக்பாண்டு கிளையைச் சேர்ந்தவர்கள் அவருக்குத் தேநீர் விருந்துபசாரம் நடத்தினார்கள். இந்த உபசாரத்துக்குத் தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார், ஸ்ரீ ஜி. வி. கே. மூர்த்தி. அவர் பக்கத்தில் அமர்ந்திருப்பவர், ப்ரூக்பாண்டு சென்னைக் கிளையின் மானேஜர் ஸ்ரீ டி. கே. சந்திரமௌளி.

உலக போலீஸ்காரர்



பம்பாயில் நகரத் தலைவர் வர்த்தகத் தலைவர் ஆலைத் தலைவர் முதலியவர்கள் அளித்த பெரிய உபசாரக் கூட்டத்தில் ராஜாஜி பேசும்போது, நேரு அவர்களுடைய மாஸ்கோ விஜயத்தின் பலனாக யுத்த பீதி வெகுதூரம் அகன்றுவிட்டது என்பதை எடுத்துக் காட்டினார்.

தான். அந்தப் பாடல்களைத் திரும்பத் திரும்பப் பாடி அநுபவிப்பதே அவருடைய வடிவத்தை உணர்வதற்கு அருமையான மார்க்கமாகும். எனவே, பாரதியார் பாடல்கள் தமிழ் நாட்டுச் சிறுவர்கள் சிறுமிகளுக்கிடையில் நன்கு பரவ வேண்டும் என்பதற்காகப் பாரதியார் பாடல் போட்டிகள் வேறு ஆண்டுதோறும் நடத்தி வருகிறார்கள். இந்த ஆண்டும் பாரதியார் சங்கத்தின் ஆதரவில் பாரதியார் பாடல்போட்டி, சென்னை தியாகராய நகரிலுள்ள ஹிந்தி பிரசார சபையில் செப்டம்பர் 4-ம் தேதி நடைபெறும். இந்தப் பாட்டுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள், தங்கள் பெயர், வயது, விலாசம், தங்களுக்குத் தெரிந்த பாரதியார் பாடல்கள் ஐந்தின் தலைப்பு—இவற்றைக் குறிப்பிட்டு ஒரு கடிதமும், பிரவேசக் கட்டணம் ரூபாய் ஒன்றும் பாரதியார் சங்கத்துக்கு அனுப்ப வேண்டும் என்று காரியதரிசி கேட்டுக் கொண்டிருக்கிறார். விலாசம்: திரு ஆக்கூர் அனந்தாச்சாரியார், காரியதரிசி, பாரதியார் சங்கம், 15, கோவிந்து தெரு, தியாகராயநகர், சென்னை — 17.

இலட்சிய மந்திரி யார்?

மத்திய சர்க்கார் உதவி உணவு மந்திரி குஜராத்தில் சில விவசாயிகளிடையே பேசிக் கொண்டிருந்த போது, "யார் லட்சிய மந்திரி?" என்பதைப் பற்றி ஒரு அபூர்வமான விளக்கம் கொடுத்தார்.

"லட்சிய மந்திரியாக விளங்குபவர் ஒட்டகத்தைப்போல் சாப்பிட வேண்டும், எருமையின் தோலைப் போல் தனது தோலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும், கழுதையைப் போல் வேலை செய்ய வேண்டும், நாயைப் போல் தூங்க வேண்டும்."

ஏதோ மிருகப் பண்புகளை அடுக்கிக் கூறியது போலத் தோன்றலாம். ஆனால் இத்தனை மிருகங்களின் நல்ல குணங்களும் ஒன்று சேர்ந்து ஒருவருக்கு அமைந்து விட்டால் அவர் மனிதத்தன்மையின் சிகரமாக விளங்குவார் என்பதில் ஐயமில்லை.

மனிதன் மிருகங்களிடமிருந்து கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய பண்புகள் அனந்தம். இந்தப் பண்புகளையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டே மந்திரி அவர்கள் இப்படி ஒரு உண்மையைக் கூறியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.


KALKI
CHICAGO

பம்பாயில் ராஜாஜி

சென்ற ஆகஸ்டு 13உ. காலை ஆகாய விமானத்தில் தலைவர் ராஜாஜி அவர்கள் பம்பாய்க்குப் பிரயாணமானார்கள். அவருடன் 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்களும் பம்பாய்க்குச் சென்றார்கள். அகில இந்திய ரேடியோவின் ஆண்டு தோறும் நடத்த "பட்டேல் நினைவுச் சொற்பொழிவுகள்" என்ற புதிய நிகழ்ச்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் தொடக்க உரையை ஒரு விழாவாக பம்பாய் கான்வகேஷன் ஹாலில் அகில இந்திய ரேடியோ நிர்வாகிகள் நடத்தினார்கள்.

1. ரேடியோ விழாவில் ராஜாஜி. 2. ராஜாஜி "நல்ல நிர்வாகி" என்ற விஷயம் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். உட்கார்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) பம்பாய் முதலமைச்சர் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் இந்த விழாவின் போது அறிமுகவுரை நிகழ்த்தினார். ராஜாஜி. விழாவுக்குத் தலைமை வகித்த பம்பாய் கவர்னர் ஸ்ரீ ஹரிகிருஷ்ண மஹதாப். ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் விழாவைப் பற்றியும், பட்டேல் நினைவுச் சொற்பொழிவின் நோக்கங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார். 3. பம்பாயில் கதர் கண்காட்சிக்கு ராஜாஜி விஜயம். ராஜாஜியின் அருகில் நிற்பவர் வல்லபாய் பட்டேல் அவர்களின் புதல்வி ஸ்ரீமதி மணிபென். 4. கதர்க் கண்காட்சியைப் பாராட்டிப் பேசுகிறார் ராஜாஜி. அவருக்கு அருகில் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர் முன்னாள் பம்பாய் நிதி மந்திரியும், காதி போர்டின் தலைவருமான ஸ்ரீ வைகுண்ட் தேசாய், அவர் அருகில் ஸ்ரீ வி. ஆர். நரசிம்மன் எம். பி. 5. 'புரோக்ரஸிவ் யூத்ஸ் லீக்'கின் தலைவர் ஸ்ரீ சுப்ரமண்யம் சுதந்திர விழாவுக்குத் தலைமை வகித்த 'கல்கி' ஆசிரியரை வரவேற்கிறார். 6. ராஜாஜிக்கு பம்பாயில் ஜின்னா ஹாலில் வரவேற்பு விருந்துபசாரம் நடைபெறுகிறது. 7. இந்த வரவேற்பில் ராஜாஜிக்கு மாலையிட்டு அன்போடு உபசரிக்கிறார் பம்பாய் காங்கிரஸின் புகழ் பெற்ற தலைவர் ஸ்ரீ எஸ். கே. பாடில். 8. பம்பாய் 'கல்கி' கிளைக் காரியாலயத்துக்கு ராஜாஜி விஜயம் செய்தார். 9. பம்பாய்த் தமிழ்ச் சங்கம் திரு சோமு அவர்களுக்கு அளித்த வரவேற்பு விழா. 10. பம்பாய் விமான நிலையத்தில் ராஜாஜி. 11. தமிழ்ச் சங்கம் ராஜாஜிக்கு அளித்த அமோகமான வரவேற்பு. ஏராளமான மாலைகளின் குவியலையும் படத்தில் காணலாம். 12. பம்பாய்ப் பத்திரிகையாளர் சம்மேளனத்தில், நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பளிச் பளிச்சென்று பதில் சொல்லுகிறார் ராஜாஜி. 13. ராஜ்பவனில் ராஜாஜியும் பம்பாய் கவர்னரும். 14. 'கல்கி' கிளைக் காரியாலயத்தில் 19உ. இரவு கல்கி பிரதிநிதி திரு கண்ணன், ஆசிரியர் திரு சோமுவுக்கு அளித்த உபசரிப்பு.



தமிழ் கூறும் நல்லுலகம்

சமீபத்தில் ஜனாதிபதி ராஜன் பாபு வட நாட்டவர்கள் தென்னிந்திய மொழிகளைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்று வற்புறுத்தினார். இதைக் காரிய சாத்தியமாக்கும் பொறுப்பு வட நாடுகளிலுள்ள தென்னிந்தியர்களின் பொறுப்பே யாகும். "வட நாட்டவர்களுக்காகத் தமிழ் வகுப்பு நடத்தப்படும்" என்று கூறினால் அல்லவோ ஒரு சில வட இந்தியர்களாயினும் தமிழ் கற்க முன் வருவதற்கு ஏதுவாகும்.

இத் துறையில் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் நற்பணி செய்து வருகிறது என்று அறிகிறோம். கல்கத்தா சர்வகலாசாலையில் பயிலும் மாணவ — மாணவியர்களுக்குச் சங்கத்தின் சார்பில் தமிழ் வகுப்புகள் சென்ற ஏழு ஆண்டுகளாக நடந்து வருகிறதாம். இந்த ஆண்டும் மேற்படி வகுப்புகளை நடத்த கல்கத்தா சர்வகலாசாலை ரிஜிஸ்திரார் திரு டி. சக்கரவர்த்தி அவர்களைக் கொண்டு சென்ற 14-8-55 அன்று துவக்க விழா நடத்தி யிருக்கிறார்கள். வகுப்புகளை ஆரம்பித்து வைத்த திரு டி. சக்கரவர்த்தி, சங்கத்தின் தொண்டினைப் பாராட்டியும், தமிழர் அல்லாத மற்றவர்களுக்குத் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை எடுத்துக் கூறியும் கலாசாரப் பரிவர்த்தனை புரியும்படி கேட்டுக் கொண்டார். சங்கத்தின் தலைவர் ஸ்ரீ ஓ. சு. வே. மணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

★

ஜமால்பூர் தமிழ்ச் சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா கடந்த 7—8—55 ஞாயிறன்று ஓய். எம். சி. ஏ. ஹாலில் நடைபெற்றது. திரு சி. ஜி. பாஷ்யம் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது சங்கத்தின் இலட்சியங்களை விவரித்துக் கூறி அங்கத்தினர்களின் கடமைகளைக் குறிப்பிட்டார். துணைச் செயலாளர் திரு கா. முத்தையா சென்ற ஆண்டு அறிக்கையை வாசித்தார். திரு மு. சீனிவாசன் சங்கம் தமிழுலகுக்குச் செய்த, செய்து வருகிற, செய்ய விருக்கிற சேவைகளைப் பற்றித் தம் சொற்பொழிவில் எடுத்துக் கூறினார். அடுத்து, திரு ஏ. சங்கரன், திரு ஜி. சுப்பிரமணியம், திரு சுகவனம் ஆகியோர் பேசினர். பின்னர், நடன நிகழ்ச்சிகளும், அதைத் தொடர்ந்து இன்னிசை விருந்தும் நடைபெற்றன. விழாத் தொடக்கத்தில் தேநீர் விருந்தும் நடந்தது. கடைசியாகத் தலைவர் முடிவுரைக்குப் பின், துணைச் செயலாளர் நன்றியுரை கூற விழா இனிது முடிந்தது.



ஓவியர் சந்திரா நினைவுச் சித்திரப் போட்டி

பரிசு ரூ. 200

நாலு பரிசுகள் - ஒவ்வொன்றும் ரூ. 50

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் சித்திரங்கள், பழைய அல்லது புதிய காவியங்களில் இருந்தோ வேறு ஏதாவது இயற்கைக் காட்சிகளாகவோ இருக்கலாம். சித்திரங்கள் புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும். தனி மனிதர்களின் படத்தை வரைந்து அனுப்பக் கூடாது.
2. ஒருவரே எத்தனை படங்கள் வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். சித்திரங்கள் நல்ல டிராயிங் பேப்பரில் வரைந்திருக்க வேண்டும். கறுப்பு வர்ணத்திலோ அல்லது இரண்டு கலர் வர்ணத்திலோ வரைந்து அனுப்பலாம். சித்திரங்கள் 12" × 8" அளவுள்ளவாவது அல்லது 18" × 7" அளவுள்ளவாவது இருக்க வேண்டும்.
3. சித்திரங்கள் எல்லாம் செப்டம்பர் மீ 30உ க்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர்ந்து விடவேண்டும். சித்திரங்கள் மடங்கி நசுங்கி விடாமல் ஜாக்கிரதையாக அனுப்பி வைக்க வேண்டும்.
4. உறையின் மேல் "சந்திரா நினைவுச் சித்திரப் போட்டி" என்று எழுதி அனுப்ப வேண்டும்.
5. வரும் சித்திரங்களை எக் காரணத்தை முன்னிட்டும், திருப்பி அனுப்ப இயலாது.



83. சேதுபந்தனம்

இதன் மத்தியில் ராவணன் ஒரு பைத்தியக்காரப் பிரயத்தனம் செய்தான். ஒரு சாரனை அனுப்பி சுக்ரீவனைக் கலைக்கப் பார்த்தான். சுகன் என்ற அந்த அரக்கன் ஆகாய மார்க்கமாக வந்து சுக்ரீவனைத் தனியாகக் கண்டு அவனுக்குச் சொன்னான்:

"லங்கேசனான ராவணன் உம்மிடம் அன்பு கூர்ந்து என்னை அனுப்பியிருக்கிறான். நீரும் அரசன், ராவணனும் அரசன். ஊரிலிருந்து துரத்தப்பட்ட இந்த ராமனுடன் நீர் சேர வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. ராமனுடன் சேர்ந்து ராவணனுடைய தீராப் பகையை ஒரு அரசனாகிய நீர் ஏன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்? நீர் ராவணனுக்குத் தம்பியைப் போன்றவர். ராமனுடைய மனைவியை ராவணன் விரும்பி அவன் ஏதேனும் செய்தால் அது உமக்கு என்ன சம்பந்தம்? உமக்கு அதனால் என்ன நஷ்டம்? நீர் சரியாக யோசித்து விவேகமாக நடந்து கொள்வீராக. நீரும் உம்முடைய படையும் கிஷ்கிந்தைக்கு உடனே திரும்பிப் போவதே விவேகம்."

இவ்வாறு சுக்ரீவனைக் கலைக்கப் பார்த்தான் ராவணன்!

சுக்ரீவன் சாரனுக்குச் சொன்னான்: "ஹே நீசனே! போய் உன் அரசனுக்குச் சொல்லு. 'நீ, எனக்கு அண்ணனுமல்ல, தம்பியுமல்ல. நீ துஷ்டன். ராமன் என் நண்பன். அவனுக்கு நீ சத்துருவானாய். ஆனபடியால் எனக்கும் நீ சத்துருவானாய். நீயும் உன் கூட்டமும் சீக்கிரத்தில் அழியப் போகிறீர்கள். மூடனே! ராமனை விரோதம் செய்து கொண்டு எதிர்த்து நீ பிழைக்கப் போவதில்லை. இதைத் தெரிந்து கொள். நீ எங்கே ஓடி மறைந்தாலும் பிழைக்க மாட்டாய்!' இவ்வாறு நான் சொன்னேன் என்று உன் அரசனுக்குச் சொல்."

இவ்வாறு சுக்ரீவன் அந்த சாரனுக்குச் சொல்லியதும் வானரர்கள் அவனைப் பிடித்து இம்சை செய்தார்கள். ராமன் உத்தரவால் அவனைக் கொல்லாமல் விட்டுவிட்டார்கள். அவனும் லங்கைக்கு வேகமாய்த் திரும்பிப் போய் விட்டான்.

விபீஷணன் சரண் புகுந்தவுடன் ராமனுடைய உத்தரவின் பேரில் லக்ஷ்மணனும் சுக்ரீவனும் அங்கேயே விபீஷணனுக்கு லங்கா ராஜ்ய பட்டம் தந்து சமுத்திர ஜலத்தைக் கொண்டு பட்டாபிஷேகமும் செய்து விட்டார்கள். விபீஷணன் ராமனுடன் நட்புப் பிரதிக்ஞை செய்து விட்டான். ராவணனைக் கொல்லாமல் நான் அயோத்திக்குத் திரும்புவதில்லை என்று ராமனும் சபதம் செய்தான்.

பிறகு விபீஷணனும் வானர ராஜனும் லக்ஷ்மணனும் சமுத்திரத்தைத்

தாண்டுவதைப்பற்றி யோசித்தார்கள். முதலில் சமுத்திர ராஜனை வேண்டிக் கொள்வதே மேல் என்று எல்லாரும் தீர்மானித்து ராமனிடம் சொன்னார்கள். 'அதுதான் என் எண்ணமும்' என்று ராமன் சொன்னான். கடற்கரையில் தர்ப்பைப் புல் பரப்பி சாஸ்திர முறைப்படி ராமசந்திரன் சமுத்திரராஜனை உத்தேசித்து உபவாசம் துவக்கினான்.

* * *

மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றி மௌனமாக விரதமிருந்து ராமன் சமுத்திர ராஜனைப் பூஜித்தான். சமுத்திரம் கேட்கவில்லை. பிறகு ராமன் எழுந்து இனி தன்னுடைய சக்தியைப் பிரயோகித்தே இந்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்று தீர்மானித்து வில்லும் மந்திர பூர்வமாக எறிய வேண்டிய பாணங்களும் கொண்டு வரச் சொல்லி லக்ஷ்மணனுக்குச் சொன்னான்.

சமுத்திரத்தின் மேல் பாணப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தான். பூமி அதிர்ந்தது. கடலில் கலக்கம் ஏற்பட்டது. சமுத்திர ராஜனால் அதைத் தாங்க முடியவில்லை. மேரு மலைமேல் உதய சூரியன் ஜொலிப்பதுபோல் சமுத்திரராஜன் பிரசன்னமாகி நின்றான்.

ராமனுக்குக் கைகூப்பி, "ராமசந்திரனே! இயற்கை விதிப்படி நான் நடந்துகொள்ள வேண்டுமல்லவா? தாண்ட முடியாத ஆழமும் நீர் வடிவமும் கொண்டு ஜலத்தில் வசிக்கும் பெரும் பிராணிகளுக்கும் சிறு பிராணிகளுக்கும் வாழுமிடமாக நான் இருக்க வேண்டிய நியமத்தை நான் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? கடந்து செல்ல முடியாதபடி அலைகளுடன் வழியடைத்து நிற்பது என் தருமம். அதை நான் விட்டு விட இயலாது. வானரர்களைக் கொண்டு கற்பாறைகளும் காட்டு மரங்களும் போட்டு அணை கட்டச் சொல்வீர். அதற்கு இடம் தருவேன். வேலைக்குக் குந்தகமின்றியும், போட்ட கல்லும் மரமும் நீரில் தங்கும்படியும் நான் உதவுவேன். இவ்வளவே நான் செய்ய முடியும். வானரர்களில் நளன் இருக்கிறான். விசுவகர்மாவின் புத்திரனான அவன் இந்த அணையைத் திறமையாக நிர்மாணிப்பான். உமக்கு வெற்றி ஆகுக!" என்றான்.

ராமசந்திரன் உத்தரவின் பேரில் சேதுபந்தன காரியம் துவக்கினார்கள். லக்ஷக் கணக்கான வானரர்கள் பெரிய ஆரவாரத்துடன் வேலை செய்து ஐந்து நாட்களில் அணை கட்டி முடிந்தது. இந்த இடத்தில் வால்மீகி முனிவர் அணைக்கட்டு வேலையை விஸ்தாரமாகச் சித்திரித்து விளக்குகிறார். தற்காலத்தில் பெரும் அணைகள் கட்டும் அமக்களமாகவே முனிவரும் சேதுபந்தனத்தைப் பாடியிருக்கிறார். வானரர்கள் காடுகளிலும் மலைகளிலும் சென்று ஆயிரக்கணக்கான மரங்களைப் பிடுங்கிப் பெயர்த்து சமுத்திரக் கரைக்கு இழுத்து வந்து போட்டார்கள். வேறு பெரிய வானரங்கள் மலைகளையும் பெரும் பாறைகளையும் பெயர்த்துத் தூக்கி வந்து போட்டார்கள். மரங்களும் மலைகளும் கடலில் விழும்போது அலைகள் மேலே கிளம்பி ஆகாயத்தை எட்டிக் குதித்தன. நளன் நின்று எல்லா வேலைகளையும் பார்த்து வந்தான். கூட்டம் கூட்டமாக நின்ற வானரர்களிடமிருந்து வானரத் தலைவர்கள் வேலை வாங்கினார்கள். மலை போன்ற கற்களையும் மகா விருக்ஷங்களையும் போட்டு மேலே கட்டைகளும் புல்லும் பரப்பிச் சமன் படுத்தினார்கள். அணை



வேலையின் சப்தம் சமுத்திர ஓசையைச் சிறியதாக்கி விட்டது.

அணை கட்டி முடிந்தது. ஆகாயத்தில் ஸ்வாதி நட்சத்திர வீதியைப் போல் கடலின் மத்தியில் இந்தப் புதுச் சேதுவானது, பிரகாசித்தது. மேலே தேவ கணங்களும் பூமியில் வானரர்களும் வெற்றி கோஷம் செய்தார்கள். "சத்துருவை ஜெயித்து பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாயாக!" என்று ராமனை தேவர்களும் ரிஷிகளும் மங்கள ஆசீர்வாதம் செய்தார்கள்.

ஆஞ்சனேயன் ராமனைத் தன் தோள் மேல் தூக்கிச் சென்றான். அப்படியே அங்கதன் லக்ஷ்மணனை எடுத்துச் சென்றான். வானரப் படை கடலைக் கடந்து விட்டது.

இவ்விடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு வேதாந்த விஷயம் உண்டு. வில் பிடித்து நின்ற ராகவனைக் கைகுவித்து வணங்கி சமுத்திர ராஜன் சொன்னான்:

"அன்புக்குரிய ராமசந்திரனே! பூமியும் வாயுவும் ஆகாசமும் நீரும் நெருப்புமாகிய ஐம்பூதங்களும் தத்தம் சுபாவ நியதியில் நிற்கின்றன. அவைகளுக்கு இடப்பட்ட மாறாத அநாதி நெறியில் அவை செல்கின்றன. காம லோப மயக்கங்களால் அல்லது தண்டனைக்கு பயந்து நான் என் சுபாவதத்தை மாற்றிக் கொள்ள முடியுமா? ஜலமானது திணிந்து கல்லாக முடியுமா? அல்லது என் ஆழத்தை நான் மாற்றி விட்டு நடந்து தாண்டும் ஒரு சிறு நீர் நிலையமாக நிற்க முடியுமா?"

இவ்வாறு சமுத்திர ராஜன் ராமசந்திரனிடம் மிக வினயமாகச் சொல்லிக் கொண்டான்.

முனிவர் சமுத்திர ராஜன் வாய்வழி நம்முடைய சாஸ்திரங்களின் அடிப்படையான தத்துவத்தை விளக்குகிறார். பிரகிருதிக்கும் ஈசுவரனுக்குமுள்ள அநாதி சம்பந்தத்தை விளக்குகிறார். ஆண்டவனுடைய நியதியே பிரகிருதி. பிரபஞ்சம் தானாக நடப்பதற்காக இயற்கை நியதிகளை ஆண்டவன் உண்டாக்கி அமைத்து விட்டான். அப்படியே கர்ம விதியும். பஞ்ச பூதங்களும் உயிரற்ற பொருள்களும் ஜீவன்களும் இந்த சாசுவத நியதிகளின்படியே நடந்துகொள்ளும்.

மற்ற சமயங்களில் ஆண்டவனுடைய உண்மையையும் பிரபாவத்தையும் நிரூபிப்பதற்காக பிரகிருதி விதிகளை மக்கள் காணும்படி இறைவர் என்று எதிர்பாராதபடி மாற்றி வியக்கச் செய்ததாகச் சொல்லுவார்கள். சுபாவத்துக்கு வியதிரேகமான நிகழ்ச்சிகளை வைத்து ஈசுவர நிரூபணம் செய்வார்கள். நம்முடைய சாஸ்திரம் அப்படிச் செய்வதில்லை.



ஒரு மலையைக் கண்ணன் தூக்கினான் என்றால் அது வேறு விஷயம். அதனால் அவன் ஆண்டவன் ஆகி விட்டான் என்று சொல்லவில்லை. ராவணனும் கைலாசத்தைத் தூக்கினான். ராவணன் ஆண்டவன் ஆகி விடவில்லை.

ஹிந்து சாஸ்திரத்தின்படி ஈசுவரனுடைய சங்கற்பமே இயற்கையும், காரண காரியவிதியும், பஞ்சபூதங்களின் மாறாத நியதிகளும், கர்ம விதியும். இது பகவத் கீதை 9-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டு உபதேசிக்கப் படுகிறது. வால்மீகி முனிவர் இதைச் சமுத்திர ராஜன் பேச்சில் சுருக்கமாக வைத்து முடித்தார்.



ராஜலட்சுமி - ராகவன்

வழக்கம்போல் சாப்பிட்டுக் கை கழுவியதும் வாசற் பக்கம் செல்லாமல் சமையலறைக்குத் திரும்பிச் சென்றான் சுந்தரம். சமையலறைக் கதவின் அருகில் மறைந்து நின்று கொண்டு பார்த்தான். கமலி பாத்திரத்தின் அடியில் இருந்த ஒரு பிடி அன்னத்தை மோரை விட்டுக் கரைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். சுந்தரம் சப்தம் போடாமல் தன் அறைக்குச் சென்றான். அவன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போலிருந்தது. நேர்மைக்கும் நாணயத்துக்கும் உலகம் அளிக்கும் பரிசு இதுதான் என்று மனம் இடித்துக் காட்டியது. மனம் தளராமல் லக்ஷியத்தைக் கைவிடாமல் எதிர்ப்புக்களைச் சமாளித்தால் கடைசியில் நேர்மை வெற்றி பெற்றே தீரும் என்று அறிவு புத்தி புகட்டியது. மேஜை மேல் இரண்டு நீண்ட கவர்கள் கிடந்து அவனைப் பார்த்துச் சிரித்தன. நகரத்தின் சிறந்த இரண்டு பத்திரிகாசிரியர்களின் நன்றியையும் வருத்தத்தையும் தாங்கிக் கொண்டு திரும்பி வந்திருந்த அந்தக் கவர்கள் 'நீ எதற்கும் லாயக்கற்றவன்' என்று அவனைக் கேலி செய்வது போல் அவனுக்குத் தோன்றியது.

கமலி அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். கையிலிருந்த பிளாஸ்கை மேஜைமீது வைத்து விட்டுக் கணவனைப் பார்த்து. ''இதோ காப்பி வைத்திருக்கிறேன். நான் போய் விட்டு மூன்று மணிக்குத் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றாள். அவள் உருவம் மறையும் வரையில் வாசற்பக்கம் உள்ள ஜன்னலால் அவளையே நோக்கிக் கொண்டிருந்த சுந்தரத்தின் இதயத்திலிருந்து ஒரு ஆழ்ந்த நெடுமூச்சுக் கிளம்பியது. நாற்காலியில் சாய்ந்து கொண்டு வருங் காலத்தைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கலானான்.

• • •

சுந்தரம் பி. ஏ., பி. டி. ஒரு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தான். அவனது இனிய சுபாவமும், பாடம் போதிக்கும் திறமையும் மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. அவனது கருத்துக்கு இனிய மனைவியாகக் கமலியும் அமைந்தாள். அழகிய நீரோடை போலவும், இனிய சங்கீதம் போலவும் அமைதியாகவும் இன்பமாகவும் காலம் சென்று கொண்டிருந்தது. அதைக் கெடுக்கும் சூறாவளிபோலக் கவுன்ஸிலர் வந்து சேர்ந்தார்.

முழுவருடப் பரீட்சைக்குச் சில நாட்கள் இருக்கையில் தலைமை ஆசிரியர் சுந்தரத்தைக் கூப்பிட்டு அனுப்பினார். சுந்தரம் அவரது அறைக்குச் சென்றதும் அவர் கதவைச் சாத்தித் தாழிட்டார். ''இதோ, பாருங்கள் சுந்தரம்! வரப் போகும் பரீட்சையில் ஆங்கில விடைத் தாள்களும், கணித விடைத் தாள்களும் உங்களிடம் தான் திருத்துவதற்கு வரப் போகின்றன. ஐந்தாவது படிவத்தில் படிக்கும் வேணு கோபாலனுக்கு முப்பது மார்க்குக் குறைவாகப் போடு. அதே வகுப்பில் படிக்கும் நாராயணனுக்கு எப்படியாவது நாற்பதுக்கு மேல் போட்டு விடு'' என்றார்.

நாராயணனின் தந்தையான கங்காதரம் பிள்ளை முனிசிபல் கவுன்சிலர். அவருக்

கும் வேணுகோபாலனின் தந்தையான நடேசப் பிள்ளைக்கும் மனஸ்தாபம். ஆகையால் எப்படியாவது தன் விரோதியின் மகனைத் தேர்ச்சி பெறாமல் செய்துவிட வேண்டும் என்று அவர் தலைமை ஆசிரியரை அணுகியிருந்தார். வெள்ளையப்பனைத் தாராளமாக நீட்டவே, தலைமை ஆசிரியரும் அந்தத் திட்டத்துக்கு ஒப்புக் கொண்டார்.

தலைமை ஆசிரியர் கூறியதைக் கேட்ட சுந்தரம் திடுக்கிட்டான். ஏனெனில் வேணுகோபாலன் மிகுந்த கெட்டிக்காரன். வகுப்பில் முதல் மார்க் எப்பொழுதும் அவனுக்குத்தான் கிடைக்கும். நாராயணனே அதற்கு நேரிடையானவன். ஒருவனுக்குக் குறைத்தும் இன்னொருவனுக்குக் கூட்டியும் போடுவது சிரமம் என்பதைத் தவிர சுந்தரத்தின் மனச்சாட்சியும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆகவே அவன் கண்டிப்பாக மறுத்துவிட்டான். அதற்கு மேல் எழுந்த தகராறின் விளைவாக அவன் ராஜிநாமா செய்துவிட்டான்.

தலைமை ஆசிரியரோ அவன் சரியாகப் பாடம் போதிப்பதில்லை என்றும், மாணவர்களின் வியாச புத்தகங்களைச் சரியாகத் திருத்துவது கிடையாது என்றும், குறித்த நேரத்தில் பள்ளிக்கூடத்துக்கு வருவது கிடையாது என்றும் பல புகார்களை அவன் மீது சுமத்தி எங்கும் ஒலிபெருக்கினார். இதனாலும், செல்வாக்குள்ள கவுன்சிலரின் முயற்சியினாலும் சுந்தரத்துக்கு வேறு ஒன்றும் வேலை கிடைக்காமற் போயிற்று. பல தடவைகள் முயன்றும் வேலை கிடைக்காமல் போகவே அவன் நம்பிக்கையை இழந்தான். சிறந்த எழுத்தாளனாக வேண்டுமென்று அவன் மனத்தளத்தின் அடியில் அமுங்கிக் கிடந்த ஓர் ஆசை இப்பொழுது விழித்துக் கொண்டு மெல்லத் தலை தூக்க ஆரம்பித்தது. இரவு பகலாகக் கண் விழித்துத் தன் உணர்ச்சிகளைக் கொட்டிக் கதைகள் எழுதி, பல பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்தான். அவை அவனிடமே திரும்பி வந்து சேர்ந்தன. அவன் மனம் சோர்வடைந்தது. இதற்கிடையில் கமலியின் ஒன்றிரண்டு நகைகளையும் விற்றுச் சாப்பிட்டாயிற்று. மிகுந்த பொறுமைசாலியான கமலி நான்கைந்து பெண்களுக்குப் பாட்டுச்சொல்லிக் கொடுப்பதாக ஏற்பாடு செய்து கொண்டாள். சுந்தரத்துக்கு இந்த ஏற்பாடு பிடிக்காவிடினும், கமலி வற்புறுத்தி அவனைச் சம்மதிக்க வைத்துவிட்டாள்.

கமலியைப் பார்க்கும்போது சுந்தரத்தின் மனம் விம்மியது. அவனுக்காக அவள் எத்தனை சிரமப்படுகிறாள்! தான் கூடச் சாப்பிடாமல் அவனைப் பராமரிக்க முற்படும் அவளது இயல்பு அவனை உருக்கியது. இன்னும் எத்தனை நாளைக்கு அவளை இப்படி வாட்டுவது! சுந்தரத்துக்குத் தன் வாழ்க்கையே ஒரு பாரமாகத் தோன்றியது. கொண்ட மனைவியைக் காப்பாற்றக் கூட வழியில்லாமல், அவள் பட்டினி கிடக்கப் பார்த்துக் கொண்டு வேதனைப் படுவதைவிட வீட்டை விட்டு வெளியேறி விடுவது சிறந்தது என்று தீர்மானித்தான். தான் எங்கேயாவது கண்மறைவாகப் போய்விட்டால் கமலி பிறந்தகத்துக்குச் சென்று சுகமாக இருப்பாள் அல்லவா என்று எண்ணலானான்.

வானம் இருட்டிக் கொண்டு வந்தது. அவனது உள்ளக் குமுறலைப் போல் வானமும் குமுறி இடித்தது. மின்னல் கண்ணைப் பறித்தது. அவன் ஒன்றும் கவனிக்காமல் நடந்து கொண்டே இருந்தான். யாரோ அவன் வழியை மறிப்பது போல் தோன்றவே நின்று கவனித்தான். ஒரு குருட்டுப் பிச்சைக்காரி ஒரு எட்டு வயதுச் சிறுமியின் கையைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். தன் பையில் கையை விட்டு அதிலிருந்த ஒரே

காலணாவை அவனிடம் கொடுத்து விட்டு மேலே நடந்தான்.

பொழுது நன்றாக அஸ்தமித்து விட்டது. வானமே பொத்துக் கொண்டது போல் மழை கொட்டத் தொடங்கியது. ஏற்கெனவே கிருஷ்ண பக்ஷத்து இரவு. அதிலும் மழை இருட்டு வேறு சேர்ந்து கொள்ளவே திக்குத் திசையே தெரியவில்லை. சுந்தரம் அங்கு ஒரு மண்டபம் போல் காணப்பட்ட இடத்தில் ஒதுங்கினான். சுற்றிலும் ஒரே இருட்டு. சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கு ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. ஒரு சிறிய வெளிச்சமும் தோன்றியது. அது என்னவென்று பார்ப்பதற்காக அந்த மண்டபத்தின் உள்ளே போனான் சுந்தரம். 'மினுக் மினுக்' என்று ஒரு அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் அது ஒரு பிள்ளையார் கோயில் என்று அறிந்து கொண்டான். மாலையில் அவன் கண்ட குருட்டுக் கிழவியும் சிறுமியும் பிள்ளையாருக்கு அருகில் கை குவித்த வண்ணம் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அருகில் ஒரு கொட்டாங்கச்சியில் கொஞ்சம் எண்ணெய் இருந்தது. அவர்கள்தான் அந்த அகல் விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார்கள் என்பது நன்கு தெரிந்தது. சுந்தரம் அக் கிழவியிடம் மெள்ளப் பேச்சுக் கொடுத்தான்.

அக் கிழவி சொன்னாள்: "ஐயா, என்னுடைய பேத்தி இவள். தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே இவள் தகப்பன் கப்பலேறிப் போய் விட்டான். அன்றிலிருந்து இதுவரை அவனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. என்னுடைய மருமகளான இவளுடைய தாய் இவளைப் பெற்றவுடனேயே இறந்து விட்டாள். என்னுடைய மற்ற இரண்டு பிள்ளைகளும் காலரா கண்டு இறந்து விட்டனர். எனக்கும் கண் பார்வை போய் விட்டது. வேறு ஒன்றும் செய்ய முடியாமற் போகவே பிச்சை எடுத்து வயிறு வளர்க்கிறேன். எப்படியும் என் மகன் என்றாவது ஒரு நாள் திரும்பி வந்து விடுவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவன் நல்லபடியாகத் திரும்பி வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிள்ளையாருக்குத் தினம் விளக்கேற்றுகிறோம். எனக்கு எவ்வளவு வரும்படி கிடைத்தாலும் சரி. தினம் ஓரணாவுக்கு எண்ணெய் வாங்கி வந்து விளக்கேற்றி விடுவோம். இந்தப் பாழடைந்த கோயிலை வேறு யாரும் கவனிப்பதும் கிடையாது. எப்படியாவது இந்தப் பெண்ணை அவள் தகப்பன் வரும் வரையில் காப்பாற்றிவிட வேண்டும் என்று பார்க்கிறேன்" என்று கூறி முடித்தாள். அதற்குள் மழையும் நின்றிருக்கவே, பாட்டியும் பேத்தியும் மற்றுமொரு முறை கும்பிட்டு விட்டு ஒருவருக்கொருவர் துணையாக இருட்டில் சென்று மறைந்தனர்.

சுந்தரம் வெகு நேரம் அந்த அகல் விளக்கையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அது அப்போது சாதாரண அகல் விளக்காக அவனுக்குத் தோன்றவில்லை. அக்கிழவி, சிறுமி ஆகிய இருவர்களின் அசையாத நம்பிக்கையே சுடர் விட்டுப் பிரகாசிப்பது போல் தோன்றியது. கேவலம் ஒரு குருட்டுப் பிச்சைக்காரிக்குள்ள நம்பிக்கையும் மன உறுதியும் கூடத் தனக்கு இல்லாமற் போய் விட்டதே என்று எண்ணும்போது அவன் உடல் அவமானத்தால் குன்றியது. விளக்கின் ஜோதியில் கமலியின் சாந்தம் தவழும் முகம் தோன்றியது. கடல் போன்ற அவளது கருநீலக் கண்கள் நம்பிக்கையுடன் பொறுமையாக முயற்சி செய்து கொண்டே இருந்தால் கடவுள் துணை புரிவார் என்று உபதேசித்தன.

சுந்தரம் துள்ளி எழுந்தான். தனக்கு மன உறுதியளித்த அந்த அகல் விளக்கையும் பிள்ளையாரையும் கைகுவித்து வணங்கி விட்டு வீட்டை நோக்கி விரைந்தான்.

"அகல் விளக்கு" என்ற புனை பெயரில் அவன் எழுதிய சிறுகதை அகில உலகப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. அதை முதலாக வைத்துக் கொண்டு அவன் ஆரம்பித்த 'அகல் விளக்கு' என்ற பத்திரிகை இப்பொழுது நான்கு பாஷைகளில் வெளியிடப்பட்டு அகில உலகப் புகழ் பெற்று விளங்குகிறது.


அட்டைப்பட விளக்கம்

ரவிசந்திரிகா – நாகசாந்தி

இவ்வாரம் ரவிசந்திரிகா தொடர் கதையில் தோன்றும் மலைப்பளிஞரின் தலைவன் சொக்கப்பனையும், அவன் மகள் மலைநாட்டுக் கன்னி சொக்கியையும், நாகருக்கு அவர்கள் பூஜை செய்ய முனைவதையும், மலைக்காட்சியின் பின்னணியிலே மூவர்ண அட்டைப்படமாகத் தருகிறோம். ஓவியர் மணியம்.



உறுதியாகத் தையுங்கள்!
மயில் பிராண்டு
PEACOCK
KHATAU MILLS
PALKHI
பல்கி பிராண்டு
தையல் நூல்
தி கட்டாவ்
மகான்ஜி ஸ்பின்னிங் &
வீவிங் கம்பெனி லிமிடெட்.
மில்ஸ்: பைகுலா, பம்பாய்.



தமிழ் நாட்டில் பிறந்த இளைஞன் ஒருவன் காலேஜில் இரண்டு ஆண்டுகள் படித்துவிட்டு 'இண்டர்மீடியட்' என்னும் இடை வகுப்பில் தேறி விடுகிறான். பிறகு இன்ஜினீயரிங் காலேஜுக்கு இடம் பிடிக்கப் போகிறான். இவனைப் போல் 'இண்டர்மீடியட்' தேறிய மாணாக்கர்களும் இன்ஜினீயரிங் கலாசாலையில் இடம் பிடிக்கும் போராட்டத்தில் அதி தீவிரமாக இறங்கி யிருப்பார்கள். இவர்களோடு போட்டி போடுவதற்கு பி. ஏ. பாஸ் செய்த மாணாக்கர்கள் பலரும் வந்து விடுவார்கள்.

ஆனால் இண்டர்மீடியட் படித்த மாணாக்கனா யிருந்தாலும் சரி, பி. ஏ., பரீட்சை தேறிய மாணாக்கனா யிருந்தாலும் சரி, இன்ஜினீயரிங் கல்லூரியில் அவ்வளவு சுலபமாக 'ஒரு இடம்' பெற்று விடமுடியாது.

ரூர்க்கி பல்கலைக் கழகத்தில் மாணவர்களைச் சேர்க்கும் முறையே வேறு.

மொத்த மாணவர்களில் முக்கால் பங்கு உத்தரப் பிரதேச மாணவர்கள். அதில் பத்துப் பங்கு ஹரிஜன மாணவர்கள். பெண்கள் மூவர். இன்னும் ஆப்பிரிக்கா, மலேயா, நேப்பாளம், ஆசியா முதலிய நாடுகளுக்காக இருபத்தைந்து மாணவர்கள். இவ்வாறு மாணவர்களுக்குக் கல்லூரியில் இடம் ஒதுக்கி யிருக்கிறது.


கல்லூரியில் சேர்வதற்கு ஒரு பிரவேசப் பரீட்சை வைத்திருக்கிறார்கள். அதில் தேறிய மாணவர்கள்தான் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் பெரிய மனிதர்களின் சிபார்சுக்கு மதிப்பு இல்லாமல் இருக்கிறது. இதுவரையில் பெண்மணிகள் யாரும் மாணவியாக வரவில்லை.

கல்லூரி அக்டோபர் மாதம் முதல் தேதி ஆரம்பமாகி ஜூன் முப்பதாம் தேதி முடிவடைகிறது. நான்கு மாதம் விடுமுறை. ஆனால் விடுமுறையில் மாணவர்கள் ஊர் திரும்பி உல்லாசமாகத் திரிய முடியாது. தேசம் பூராவும் எங்கெல்லாம் இன்ஜினீயரிங் சம்பந்தமான வேலைகள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் சென்று நேர்முகமாக அவைகளைப் பார்த்துப் பயின்று பயன் அடைய வேணும்.

கல்லூரி அக்டோபர் மாதம் திறந்தாலும் மாணவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னதாகவே அதாவது செப்டம்பர் மாதத்திலேயே கல்லூரிக்கு வந்து விடவேண்டும். அந்த ஒரு மாதத்தில் கல்லூரியில் உள்ள பலதரப்பட்ட தொழிற்சாலைகளைப் பார்த்து அதில் என்ன என்ன இயந்திரங்கள் இருக்கின்றன, எந்த எந்த இடத்தில் இருக்கின்றன என்று விவரங்களைக் கற்றுக் கொள்வதுடன், அவைகளில் நேர்முகமாகப் பயிற்சியும் பெறுகிறார்கள்.

வெளியூரில் இருந்து வரும் மாணவர்கள் கட்டாயம் கல்லூரி மாணவர் விடுதியில் தான் தங்க வேண்டும். விடுதிக்கு மாதம் எழுபது ரூபாய்தான் ஆகிறதாம். மாணவர்கள் படிப்பு, உடல் உழைத்து வேலை செய்தல் முதலியவைகளுடன் ஏதாவது ஒரு விளையாட்டிலும் கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு ஒரு நாடகக் கழகம் இருக்கிறது. அதில் மாணவர்கள் நாடகங்கள் நடத்துகிறார்கள். சினிமா தியேட்டர் ஒன்றும் உண்டு. அதில் இன்ஜினீயரிங் சம்பந்தமான பல படங்கள் காட்டப்பட்டு வருகின்றன. பாடபுத்தகங்களின் மூலமாகத் தெரிந்து கொண்ட பல இன்ஜினீயரிங் நுணுக்கங்களைப் படங்களின் மூலமாகவும் பார்த்துப் பயன் பெறுகிறார்கள். "சிங்கம்" என்ற பெயரில் இன்ஜினீயரிங் சம்பந்தமான பத்திரிகை ஒன்று நடத்துகிறார்கள். அதில் உலகத்து இன்ஜினீயரிங் நிபுணர்கள் எழுதிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரசுரமாகின்றன. இந்தப் பத்திரிகையை ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கியே ஆகவேணும்.

மாணவர்கள் கட்டாயமாக என். ஸி. ஸி. என்ற தேசிய ராணுவத்தில் சேரவேண்டும். இவ்வாறு பல முறைகள் அமைத்து அதன் மூலமாக மாணவர்களின் ஒழுக்க உணர்ச்சியை மிக ஜாக்கிரதையாகக் காத்து வருகிறார்கள். கல்லூரிக்குள் மாணவர்கள் யாரும் யாருக்கும் கடன் கொடுக்கக்கூடாது; கடன் வாங்கவும் கூடாது. கல்லூரி சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர வேறு பொது விவகாரங்களில் மாணவர்கள் கட்டாயமாக ஈடுபடக் கூடாது.



படிப்பதற்கு ஒரு இடம்

இவை போன்ற பல சட்ட திட்டங்களால் மாணவர்களின் ஒழுக்கம் காப்பாற்றப்பட்டு, அவர்கள் சிந்தனை தாங்கள் மேற்கொண்ட கல்வியில் நன்ருகத் தொழில்படும்படி செய்திருக்கிருர்கள். ரூர்க்கி சர்வகலாசாலை இது வரையில் எத்தனையோ உலகம் போற்றும் மேதாவிகளைத் தந்திருக்கிறது. ஒழுக்கம், கட்டுப்பாடு, உடல் உழைத்து வேலை செய்தல் ஆகியவைகள்தான் ரூர்க்கி பல்கலைக் கழகத்தில் முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றன.

ரூர்க்கி பல்கலைக் கழகத்துக்கு மத்திய சர்க்கார் அளிக்கும் உதவித் தொகையைப் பார்த்தால் இந்தியாவில் உள்ள எல்லா மாகாணத்து மாணவர்களும் தடங்கல் இல்லாமல் சேர வசதி இருக்க வேண்டும். ஆனல் அதற்கு யார் வழி செய்யப் போகிருர்கள்!

இந்தப் பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவன் மூன்று ஆண்டுகள் படித்தால் போதுமானது. மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே அவனுக்கு வேண்டிய கல்வி போதித்துப் பட்டம் கொடுத்து விடுகிருர்கள். மூன்று ஆண்டுகளுக்குள் இன்ஜினீயரிங் கல்வி போதிக்க முடியாது, நாலு ஆண்டுகள் வேண்டும் என்று நாம் சர்ச்சையில் ஈடுபட்டு மாணவர்களின் பொன்னன காலத்தை வீணுக்கிக் கொண்டு வருகிருேம். ஆனல் ரூர்க்கியில் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே மாணவர்களுக்கு இன்ஜினீயரிங் கல்வியைக் கற்றுக் கொடுத்து அனுப்பி வைக்கிருர்கள். மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே ரூர்க்கி சர்வகலாசாலை மாணவன் மிகச் சிறந்த இன்ஜினீயரிங் நிபுணனுகி விடுகிருன். அங்குள்ள கல்வி முறையால் அவன் உள்ளமும் விரிந்து அவன் வாழ்வின் நோக்கமே விசாலமாகி விடுகிறது என்பதில் ஐயமில்லை. அவனைச் சாதாரணக் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஏட்டுப் படிப்பு மாணவனேடு ஒப்பிட்டுக் கூற முடியாது. அவன் புது உலகத்தை உருவாக்கும் உழைப்பாளி மனிதன்!

இந்த விவரங்களை யெல்லாம் ரூர்க்கி சர்வகலாசாலை உப அத்யட்சகர் சொன்னர்.

ரூர்க்கியில் எங்கே பார்த்தாலும், இடறி விழுந்த இடத்தில் எல்லாம் இன்ஜினீயர்கள் அல்லது கைத்தொழில் நிபுணர்களாகவே இருக்கிருர்கள். ரூர்க்கியிலே ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அங்கு எல்லா வேலைகளையும் சின்னஞ் சிறு இயந்திரங்களின் உதவியைக் கொண்டு கையினலேயே செய்கிருர்கள். என்ன செய்கிருர்கள்! இன்ஜினீயரிங் தொழிலுக்கு வேண்டிய எல்லா நவீன இயந்திர சாமான்களையும் செய்கிருர்கள். ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் விலையுள்ள அபூர்வமான கருவிகளை எல்லாம் செய்கிருர்கள். அவைகளைப் பார்த்தால் மேல் நாட்டில் தயாரித்த சாமான்கள் போலவே சுத்தமாகவும், உறுதியாகவும் இருக்கின்றன.

"ரூர்க்கியில் மாபெரும் கைத்தொழில் என்ன?" என்று கேட்டால், "இன்ஜினீயரிங் கலைக்கு வேண்டிய நவீன இயந்திரக் கருவிகள் தான்" என்று பதில் கிடைக்கும்.

அதற்கு ஏற்றாற் போலவே திரு கோசலா கையில் ஒரு 'ஸ்கேலை' வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தோம்.

"இந்த ஸ்கேலினல் மாணவர்களை அளந்து விடுவீர்களோ!" என்ருர் ஒரு நிருபர்.

"அதெல்லாம் மாணவர்களை நாங்கள் அளக்க வேண்டியதில்லை. அவர்கள் தான் எல்லாரையும் எல்லாவற்றையும் அளந்து வருகிருர்களே" என்ருர்.




"அப்படியானுல் எங்களை அளக்கப் போகிறீர்களோ!" என்றேன்.

"உங்களையும் நான் அளக்க வேண்டியதில்லை. நீங்கள்தான் எமையெல்லாம் அளந்து விடுவீர்களே!" என்ருர்.

"பின்னே ஸ்கேல் எதற்காக!"

"இது மிக உயர்ந்த ஸ்கேல். இந்த ஸ்கேல், இது போன்ற இதர இன்ஜினீயரிங் கலைக்கு வேண்டிய பல நவீன விஞ்ஞானக் கருவிகள் எல்லாம் ஒரு காலத்தில் மேல் நாட்டிலிருந்து



மேலே: கட்டட ஆராய்ச்சிக் கழகத்தில் உள்ள ஒரு ஆராய்ச்சிக் கூடம். ஒவ்வொரு ஊரிலும் ஒரு மாதிரி சூரிய வெளிச்சம் விழுகிற தல்லவா? அதற்கு ஏற்றாற் போல் எந்த எந்த ஊரில் எப்படி எப்படி வீடுகள் கட்டவேண்டும் என்பதை ஆராய்கிறார்கள். கீழே: கட்டட ஆராய்ச்சிக் கழகத்தின் பிரம்மாண்டமான கட்டடம்.

வந்தன. இப்பொழுது இங்கே ரூர்க்கியிலேயே தயாராகின்றன" என்றார்.

"அப்படியா!" என்று யாரும் அதிசயிக்க வில்லை. காரணம் அங்கு உள்ள எல்லாமே அதிசயமாக இருந்ததால் எதைக் கண்டு அதி சயப்படுவது என்று திகைப்பாக இருந்தது.

உழைப்பின் உயர்வு

அவருடன் இன்னும் பல விஷயங்களைப் பற்றி விசாரித்தோம். "உழைப்பின்றி ஒன்றுமே கைகூடாது!" என்பதுதான் அந்தக் கலாசாலையின் அஸ்திவாரம். அந்த வாசகத்தைத் தான் கல்லூரியின் முன் வாசலில் சமஸ்கிருத எழுத்தில் எழுதியிருக்கிறார்கள். திரு ஏ. என். கோசலாவின் சித்தாந்தமும் அதுதான். உழைப்புச் சக்தியின் மீது அவருக்கு அவ்வளவு மோகம்; அதன் காரணமாகப் பலர் மீது சொல்ல முடியாத கோபம். உழைப்பைக் குறைத்துச் சொல்லும் ஏட்டுப் படிப்பாளிகள் மீது கோபம். கலாசாலையின் வளர்ச்சிக்கு உடனுக்குடன் உதவி செய்யாத சர்க்கார் மீது கோபம். அப்படி உதவி செய்ய முடியாமல் சர்க்கார் இலாக்காவில் இருந்து முட்டுக் கட்டை போடுகிறவர்கள் மீது கோபம். எதிர் பார்த்த அளவு அவருடன் ஒத்துழைக்காத இதர கலாசாலை அதிகாரிகளின்மீது கோபம். இந்தக் கோபத்தின் காரணமாக எல்லாக் காரியங்களையும் தாமே நேரில் கவனித்து வருகிறார். கல்லூரி சம்பந்தமாக இந்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதினால், கடிதத்துடன் அவரும் நேரில் சென்று சம்பந்தப் பட்டவர்களைப் பார்த்து அவர்கள் மனத்தை மாற்றிக் காரியத்தைச் சாதித்துக்கொண்டு வருவாராம்.

இதைப்பற்றிப் பிறகு விசாரித்ததில் அவரும் இந்திய சர்க்காரில் பல ஆண்டுகள் வேலைசெய்து வந்திருப்பதால் சர்க்காரின் 'சிவப்பு நாடா' முறையின் சௌகர்யம் களை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் சிரமத்தைப் பாராமல் கடிதத்துடன் அவரும் தில்லிக்குச் சென்று விடுகிறார் என்ற விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

"நம் நாட்டு மாணவர்கள் இன்ஜினியரிங் அறிவை உபயோகித்து உழைக்கத் தெரிந்து கொண்டு விட்டால், பாரத நாட்டில் நாற்பது கோடி என்ன, நானூறு கோடி மக்கள்கூட பசிபட்டினி இல்லாமல் சௌகரியமாக வாழ முடியும். அதற்கு வேண்டிய இயற்கை வசதியும் இன்னும் பல வளமும் நாட்டில் நிறைந்து இருக்கின்றன. அதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்" என்றார் திரு அஜுதியாநாத் கோசலா.

"தொழிற் கல்வி" "தொழிற் கல்வி" என்று எத்தனையோ நாளாக எழுதியும் படித்தும் கேட்டும் வந்திருந்த எனக்கு ரூர்க்கியில் உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கும் புதிய முறையையே பார்த்ததாகத் தோன்றியது. நான் பார்த்தது சிறு பகுதிதான். எனினும் அந்தச் சிறு பகுதியைப் பார்த்ததிலிருந்தே, உழைப்புடன் கூடிய தொழிற் கல்வி எவ்வளவு ஆனந்தம் நிறைந்த அற்புதமான கல்வி என்பதை உணர முடிந்தது. இம்முறையில் பயின்றவர்களால் நாடு எவ்வளவோ வழிகளில் முன்னேற முடியும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுதல் சாத்தியமாக இருந்தது.


கடைசியாக, திரு கோசலாவிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வெளிவந்ததும் எங்களுடன் வந்த இந்திய சர்க்கார் தகவல் அதிகாரி "இங்கு இன்னும் ஒரு ஆராய்ச்சிக் கழகம் இருக்கிறது. அதாவது கட்டட ஆராய்ச்சிக் கழகம். அந்த அதிசயமான ஸ்தாபனத்தையும் பார்த்து வைப்போம்" என்று அழைத்தார். நேயர்களே! நீங்களும் வாருங்கள், அந்த அபூர்வமான ஆராய்ச்சிக் கழகத்தைப் பார்த்து வருவோம்.

கட்டட ஆராய்ச்சிக் கழகம்

அன்று பிற்பகல் சர்வகலாசாலைக்கு ஒரு மைலுக்கு அப்பால் உள்ள கட்டட ஆராய்ச்சிக் கழகத்துக்குச் சென்றோம்.

பத்து ஏக்கரா நிலத்தில் இந்த ஆராய்ச்சிக் கழகம் இருக்கிறது. அதை யொட்டி இன்னும் ஐம்பது ஏக்கர் நிலமும் வாங்கிச் சேர்த்திருக்கிறார்கள். முதலில் கட்டட ஆராய்ச்சிக் கழகத்தின் பிரம்மாண்டமான மாளிகையைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினோம்.

அடாடா! எவ்வளவு பெரிய கட்டடம். நவீன மோஸ்தரில் அமைக்கப்பட்ட அழகான


எல்லோருக்கும் தெரியும் —
தோட்டத்திலிருந்து கடைகளுக்கு துரிதமாக அனுப்பப்படுவதாலேயே ப்ரூக் பாண்ட் தேயிலை புத்தம் புதியதாக இருக்கிறது
ஒவ்வொரு ப்ரூக் பாண்ட் பாக்கெட்டிலிருந்தும் உங்களுக்கு அதிகப்படியான ருசியான தேயிலை கிடைக்கிறது
ஒவ்வொரு நாளும் 5 கோடி கோப்பைகளுக்கு அதிகமாகவே ப்ரூக் பாண்ட் தேயிலை அருந்தப்படுகிறது
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !
Darjeeling
Brooke Bond Tea
Blend
Brooke Bond Tea

கட்டடம். கட்டடத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் மாணவர்கள் பலவிதமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இடத்தில் ரஸாயன ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. இன்னொரு இடத்தில் கைத்தொழில் வேலைகளைக் கற்றுக்கொண்டிருந்தனர். மற்றப் பகுதியில் உலகத்தில் உள்ள எல்லாவிதமான மண், கல், இன்னும் பலவிதமான பூதத்துவப் பொருள்கள் கொண்ட பெரிய கண் காட்சிக் கூடம். அந்தக் கண்காட்சிக் கூடத்தில் இடை இடையே உட்கார்ந்து பார்ப்பதற்கு வேண்டிய சுக ஆசனங்கள் இருக்கின்றன. அங்குள்ள பொருள்களின் தன்மைகளையும் உபயோகங்களையும் விளக்கிக் கூறுவதற்கு வேண்டிய ஆசான்கள் இருக்கிறார்கள்.

இவைகளை யெல்லாம் தாண்டிச் சென்றால் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் ஒரே சமயத்தில் அமர்ந்து இருக்கும்படியான பெரிய மண்டபம் இருக்கிறது. அந்த மண்டபத்தின் மத்தியில் காந்தி மகானின் சித்திரத்தை வைத்திருக்கிறார்கள். அசைப்பில் பார்த்தால் காந்திமகான் உயிருடன் அந்த மண்டபத்து மேடைக்கு வேகமாக நடந்து வருவதுபோன்ற பிரமை ஏற்படுகிறது. மயிர் கூச்சம் உண்டாகி விடுகிறது.

மண்டபத்தை விட்டு வெளியில் வருவதற்கே மனமில்லாமல் வந்தோம். அந்த மண்டபத்தில் அடிக்கடி பெரிய மகாநாடுகள் கூடுமாம். உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும் பெரிய பெரிய கட்டட ஆராய்ச்சி நிபுணர்கள் வருவார்கள். அவர்களைக் கொண்டு பல சொற்பொழிவுகளைச் செய்யச் சொல்லி மேல் நாட்டில் உள்ள கட்டடக் கலையின் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வார்கள்.

மண்டபத்தைப் போலவே மனத்தைக் கவரும் சினிமாக் கொட்டகை ஒன்றும் இருக்கிறது. அதில் கட்டட சம்பந்தமான, மண் ஆராய்ச்சி சம்பந்தமான படங்களைப் போட்டு மாணவர்களுக்குக் காண்பிப்பார்களாம். எங்களுக்கு ஒரு படம் போட்டுக் காண்பித்தார்கள். மைக்கா வகையைச் சேர்ந்த ஒருவகை மண். அதைப் பூமியில் இருந்து எடுத்து அதில் பல ரஸாயன வித்தைகளைச் செய்து 'மைக்கா' என்ற பொருளாக மாற்றி விடுகிறார்கள். அது மனிதன் வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ வகையில் உதவி புரிகிறது. இந்த வகை மண் மிகவும் அபூர்வமானது. முன்பெல்லாம் தென் ஆப்பிரிக்காவில் மட்டும் கிடைத்ததாம். இப்பொழுது இந்தியாவில் பல இடங்களில் கிடைக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்தவுடனேயே பல விஷயங்களைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆகா ! சினிமாவைக் கொண்டு எவ்வளவு சுலபமாக விளங்க முடியாத விஷயங்களை விளக்கி விடலாம், கல்வி போதித்து விடலாம் என்ற உண்மையை உணர்ந்தோம் !

வறுமை தீர வழி !

இன்னும் கொஞ்சம் அப்பால் சென்று ஆங்காங்கே கட்டியிருந்த பெருங் கட்டடங்கள், சிறு வீடுகள், மண் குடில்கள், மதில் சுவர்கள், பாலங்கள், 'ஆர்ச்'வளைவுகள் முதலியவற்றைப் பார்த்து விட்டு வந்தோம்.

அவற்றையெல்லாம் பார்த்து விட்டு வரும் போது அந்த ஆராய்ச்சிக் கழகத் தலைவர் கட்டட ஆராய்ச்சிக் கழகத்தின் அவசியத்தைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார் :


"அன்னிய ஆட்சியுடன் போரிட்டு வெற்றி பெற்று விட்டோம்; இனி வறுமை அரக்கனுடன் கடும் போர் நடத்த வேண்டும்!" என்று ஜவாஹர்லால்நேரு அடிக்கடி கூறுகிறார் அல்லவா ! நாட்டின் வறுமையை ஒழிப்பதற்காக நடத்தும் ஆராய்ச்சிக் கழகம்தான் இது.

தேசம் விடுதலை அடைந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், தேசத்தின் பொருளாதாரம் பற்றி எவ்வளவோ பேசப்பட்டிருந்தாலும், நம் கிராமங்களில் குடிகொண்டிருக்கும் கொடிய வறுமை நிலை அப்படியேதான் இருந்து வருகிறது என்பதை அவர்கள் சுகாதாரமற்ற குடிசைகள், இடிந்து போன கூரை வீடுகள் காண்பித்துக் கொண்டிருக்கின்றன.

கிராமங்களைப் பார்த்ததும் "ஐயோ! இது தானா சுதந்திரம் பெற்ற நாடு" என்று இரக்கம் உண்டாகிறது. இந்தியாவின் வறுமைக்குக் கிராமங்களில் நாம் காணும் ஓட்டைக் குடிசை வீடுகள் சாட்சி கூறுகின்றன.

அந்த நிலைமையை மாற்றி அங்கு கிடைக்கும் சாமான்களைக் கொண்டே கிராமங்களில் நவநாகரிகமான சுகாதார வசதியான வீடுகளைக் குறைந்த செலவில் அமைப்பதற்கான ஆராய்ச்சிகள்தான் இங்கு நடக்கின்றன.

1943-ம் ஆண்டு இந்தக் கழகத்தை ஆரம்பிக்க முயற்சி செய்தார்கள். 1944-ல் கட்டட ஆராய்ச்சிக் கழகத்துக்கு வேண்டிய பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். இந்தக் கழகத்தை இந்தியாவில் எங்கு அமைப்பது என்று ஆராய்ந்தார்கள். ரூர்கி தான் சரியான இடம் என்பதை நிபுணர்கள் கண்டார்கள். 1951-ம் ஆண்டு இந்தக் கழகத்துக்கான கட்டடத்துக்கு அஸ்திவாரம் இடப்பட்டது.



இந்தக் கழகத்துக்கு அஸ்திவாரம் இட்டவர் நமது கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா அவர்கள் தான். இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த அதிசயமான கட்டடத்தைக் கட்டி முடித்து விட்டார்கள். உடனே கட்டட ஆராய்ச்சி வேலையும் தொடங்கி விட்டார்கள்.

பாரத நாட்டின் இயற்கை நிலை அதிசயமானது. சில இடங்களில் மணல், சில இடங்களில் மண், அல்லது சதுப்பு நிலம். வேறு சில இடங்களில் கருங்கல் பாறை, களிமண் இப்படிப் பலப்பல விதங்களில் வீடுகள் கட்ட முடியாத நிலையில் பூமி இருக்கிறது. அந்த மாதிரி பூமியை எப்படி நல்லமுறையில் மாற்றுவது ! அந்த அந்த இடங்களில் அந்த இடங்களுக்குப் பக்கத்தில் என்ன என்ன கிடைக்

கிறதோ அதைக் கொண்டே குறைந்த செலவில் சுகாதார முறையில் வீடு கட்டுவது எப்படி!

மூங்கில் நம் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கிறது. அதை வீடுகளுக்கு எப்படி உபயோகிப்பது! வீடு கட்டுவதற்கான சாமான்களை அதிகச் செலவில்லாமல் எப்படிச் சேகரிப்பது! சேகரித்த சாமான்களைக் கொண்டு எப்படிச் சிக்கனமாக வீடு கட்டுவது! என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

சேறு, செங்கல், ஓடு, சுண்ணாம்பு, சிமிண்ட், மூங்கில் முதலிய பொருள்களைக் கொண்டு பலம் பொருந்திய வீடுகள் அமைக்கும் பல முறைகளையும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

பூமியை எல்லா விதமான சீதோஷ்ண நிலைக்கும் ஏற்றபடி எப்படிச் சமன் செய்வது! செங்கற்களை எப்படிப் பலப் படுத்துவது! குழாய் ஓடுகள் எப்படிச் செய்வது! களி மண்ணைக் கொண்டு கான்கிரீட் போட்டுப் பலமான வீடுகள் எப்படிக் கட்டுவது! இரும்புக் கம்பிகளுக்குப் பதிலாக மூங்கிலைக் கொண்டே எங்ஙனம் கான்கிரீட் போடுவது முதலிய பல விதமான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. சுதந்திரநாட்டின் அரிய முன்னேற்றத்துக்கான திட்டங்களில் இது முக்கியமான திட்டம்.

குறைந்த செலவில் வீடு கட்டுவதுடன் அந்த வீட்டுக்குள் சத்தம் புகாமல், வெயிலின் கொடுமையை உள்ளே விடாமல், குளிரைத் தடுத்து நிறுத்தும்படி வீடுகளை எப்படிக் கட்ட வேண்டும் என்ற விஞ்ஞான முறைகள் எல்லாம் ஆராய்ந்து முடிவு கட்டி மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

அங்கு மாணவர்கள் சேறு குழைத்து, செங்கல் செய்து, சூளை போடுகிறார்கள். கல் சுமந்து வீடு கட்டுகிறார்கள். எல்லாவற்றையும் நேர்முகமாகப் பயின்று வருகிறார்கள். கூடவே அந்த வேலையை எப்படிக் குறைந்த செலவில் செய்யலாம் என்றும் ஆராய்ந்து வருகிறார்கள்.

“விஞ்ஞானத்தை உபயோகப் படுத்தா விட்டால் நம் நாட்டை விட்டு வறுமை தொலையாது. விஞ்ஞானத்தின் மூலமாகத்தான் நாடு முன்னேற முடியும். பழைய காலத்தில் ஒரு தனி மனிதன் தன் இஷ்டப்படி எல்லாம் ஏராளமான பொருள்களைச் செலவு செய்து சுகாதாரமில்லாமல் வீடு கட்டிய முறையை நாம் அனுஷ்டிக்க முடியுமா! விஞ்ஞானத்தின் துணைகொண்டு உலகத்தோடு ஓங்கி வளரவேண்டும். வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சியை எதிர்ப்பவர்கள் தேசத்துரோகிகள்” என்று அங்கு ஒரு இடத்தில் பண்டித ஜவாஹர்லால் எழுதி வைத்திருந்ததை எங்களுக்குக் காட்டி விட்டு ஆராய்ச்சிக் கழகத் தலைவர் அங்கு புதிதாகக் கண்டு பிடித்துக் கட்டியிருக்கும் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

சுமார் ஆயிரத்து இருநூறு சதுர அடியில் கச்சிதமான அழகு நிறைந்த வீடு கட்டியிருந்தது. நாலு விசாலமான அறைகளும், சமையல் அறை, குளிக்கும் அறை முதலியவைகளுடன் கூடிய வசதியான வீடு. நாலாயிரம் ரூபாய்க்குள்ளாகவே முடிந்து விட்டதாம். இந்த வீட்டைக் கட்டியிருக்கும் முறை அதிசயமானது. ஜன்னல்கள், நிலை வாசற்படிகள், அதன் கதவுகள் எல்லாம் சிமிண்டையும் மரத்தூளையும் கலந்து அமைத்திருக்கிறார்கள். மரமும் இரும்பும் இல்லாமலே கட்டியிருக்கிறார்கள். குப்பை செத்தைகள், மரத்தூள், சிமிண்ட், செங்கல் முதலியவைகளைக் கொண்டே கட்டியிருக்கிறார்கள். வெயில், குளிர், முதலியவைகள் தாக்காமலும், நல்ல காற்றோட்டமும் உள்ளதாக இருக்கிறது.

சென்னை நகரம் போன்ற இடங்களில் ஒண்டுக் குடித்தனத்தில் அவதிப்படுபவர்களுக்கு இது போன்ற வீடு கிடைத்து விட்டால் மோட்ச வீடே கிடைத்து விட்டது போல மகிழ்ந்து போவார்கள்.

இதுபோல் இன்னும் எத்தனையோ மாதிரி வீடுகளும் அங்கு கட்டப்பட்டிருக்கின்றன. ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்க்குள்ளாகவே அருமையான வீடு கட்டியிருக்கிறார்கள். இந்தக் கட்டட ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சிகள் மூலம் குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு வழியிருக்கிறது. ஆராய்ச்சி செய்து குறைந்த செலவில் வீடு கட்டும் முறையைக் கண்டு பிடிப்பதுடன் மட்டும் நிற்காமல், அதைக் காரியத்திலும் இந்திய சர்க்கார் நிறைவேற்றி வைக்குமானால் இன்னும் ஐந்து வருஷம் அல்லது பத்து வருஷ காலத்துக்குள் தேசத்தின் தோற்றமே மாறுதல் அடையும்; வறுமையின் சின்னமான குடிசை வீடுகள் மறையும்; வறுமையின் சின்னங்கள் மறையும்போது அதே முயற்சியானது தேசத்தில் சுபிட்சத்தை உண்டாகும்.

கிராமங்களில் உள்ள அசுத்தங்கள் ஒழியும்; மக்கள் தூய்மையாக வாழப் பயிற்சி பெறுவார்கள். அதனால் அவர்களுடைய ஆரோக்கியமும் ஓங்கிப் பெருகும்.

இப்பேர்ப்பட்ட அற்புதமான திட்டத்தை ஆராய்ச்சி மூலம் நடத்தி வரும் கட்டட ஆராய்ச்சிக் கழகம் போல் உலகில் பத்தே கழகங்கள்தான் இருக்கின்றன. இது பதினோராவது கழகம். இந்தக் கழகத்தின் மூலம் நம் நாடு எவ்வளவோ வகையில் முன்னேறுவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டு வந்தோம்.

மொத்தத்தில் ரூர்க்கி சர்வ கலாசாலையையும், கட்டட ஆராய்ச்சிக் கழகத்தையும் பார்த்தால் கலாசாலை அல்லது ஆராய்ச்சிக்கூடம் என்ற எண்ணமே உண்டாகவில்லை. ஓரே உழைப்புடன் கூடிய உற்சாகமான தொழில் மயமாகவே இருக்கிறது. கல்வியை இடைவிடா உழைப்பாகத் தொழில் மயமாகச் செய்திருக்கிறார்கள். ஆகா! அங்கே படிக்கும் மாணவர்களின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

அடுத்தாற் போல், இந்தியாவின் பெருமை மிக்க நதியான கங்கை நதி இருக்கிறதல்லவா!

“ இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரேது வேறே?”

என்று பாரதியார் பாடிக் குறித்தாரே அந்தக் கங்கைக்கும், அதிலிருந்து புதிதாக வெட்டியிருக்கும் கங்கைக் கால்வாய்க்கும் நேயர்களை அழைத்துப் போக விரும்புகிறேன். கங்கைக் கால்வாயின் கரையில் அமைந்திருக்கும் புண்ணிய ஸ்தலமான ஹரித்வாரம் நகரத்தையும், அதற்கும் அப்பால் கங்கைக் கால்வாயில் நிர்மாணித்திருக்கும் அருவி மின்சார நிலையங்களையும், ஜலசேதன ஆராய்ச்சிக் கழகத்தையும் பார்க்கலாம்.

இதோ பிரயாணத்துக்குப் பஸ் வந்து நிற்கிறது. ஏறிக் கொள்ளுங்கள். (தொடரும்)

தக்ஷிண ரயில்வே & இண்டக்ரல் கோச் பாக்டரி

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்
ரயில்வே இயந்திர சாதனங்களின்

காட்சிக் கூடம்

○●○

இடம் மாற்றப்பட்டிருக்கிறது

பெரம்பூர் இண்டக்ரல் கோச் பாக்டரியின் கான்டீன் ஹாலில் அமைக்கப்பட்டிருந்த வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ரயில்வே இயந்திர சாதனங்களின் காட்சி ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை மூடப் படும். மீண்டும் 1-9-55 முதல் காரேஜ் ஒர்க்ஷாப் ரயில்வே ஸ்டேஷன் பாலத்தின் அருகிலும், ஒர்க்ஷாப் மெயின் கேட்டுக்கு எதிர்த்தாற்போலுமிருக்கும் **ஆர்மரி கட்டடத்தில்** இக் காட்சிக் கூடம் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்படும்.

இந்தக் காட்சிக் கூடம் 1-9-55 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் 1 மணி வரையிலும் மாலை 2 மணி முதல் 5 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் 10 மணி முதல் 1 மணி வரையிலும் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்படும். ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற விடுமுறை நாட்களிலும் காட்சிக் கூடம் மூடப்படும்.

கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ்
தக்ஷிண ரயில்வே, சென்னை - 23

போர்ட்டர் ரஹ்மான்



எஸ்.பி.மல்லாரி

அன்று சென்ட்ரல் ஸ்டேஷனில் மூஸ்லீம்களின் கூட்டம் நிறைந்திருந்தது. காரணம் ஹஜ்ஜுக்காகப் பிரயாணம் செய்ய அன்று எழெட்டுப் பிரமுகர்கள் பம்பாய் எக்ஸ்பிரஸில் பிரயாணமானார்கள். அவர்களின் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், இப்படிப் பலர், வெள்ளைத் தொப்பியும், துருக்கி தொப்பியும், கிராப்புத் தலையுமாக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். பல ஹாஜியார்கள், வருங்கால ஹாஜியார்களை வழி அனுப்ப வேண்டியது தங்கள் கடமை என்று உணர்ந்தவர்கள்போல, காட்சி யளித்தார்கள். ஐந்து பெருங் கடமைகளில் ஒன்றை உள்ளத் திருப்தியுடன் செயலாற்ற முற்படும் இளைஞர்களுக்கு, தங்கள் துவாஆவும் அன்பும் வழித்துணையாக இருக்க வேண்டுமென்று, மகிழ்வுடன் ரோஜாப்பூ மாலைகளையும் இட்டார்கள். பயணம் போகும் புண்ணியவான்களும் பெருமிதத்துடனும், பெருமையுடனும் அந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டார்கள். மலர்ந்த முகத்துடன் சூழ்ந்து நின்ற எல்லாரையும் பார்த்தார்கள்.

கடைசியில் கார்டு விசில் ஊதினார். அவர் ஒரு மூஸ்லீமோ, ஹிந்துவோ தெரியவில்லை. ஆனால், கைகாட்டிபோல, ஒரு யந்திரம்போல அவர் வேலை செய்தார். ஒலி மூலம் அவர் "ஸிக்னல் கிளியர்" என்று டிரைவருக்கு ஞாபகமூட்ட. ரயிலும் தன்னால் முடிந்தவரை கனைத்துக் கொண்டு, ரயில் கிளம்பியது.

"அல்லாஹு அக்பர்!" என்ற கோஷம், ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள ஆஸ்பத்திரிவரை எதிரொலித்தது. இவ்வளவு நேரம் திடமுள்ளவர்கள் போல பாவனை செய்து கொண்டிருந்த ஹஜ்ஜுப் பிரயாணிகளின் கண்கள் கலங்கின. பிரிவை நினைத்தோ என்னவோ! அவர்கள், இறைவன் கட்டளையிட்டுள்ள ஒரு நல்ல காரியத்துக்காகப் பிரயாணமாகிறார்கள் என்பது அவர்கள் வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகளுக்குத் தெரியும். இருந்தாலும் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டபோது கலங்கிய கண்களுடன்தான் வந்தார்கள்! அதை நினைத்து, இப்போது அவர் இமைகள் மீண்டும் பனித்தனவோ, அல்லது இது ஆனந்த பாஷ்பமோ என்னவோ!

ரயில் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. ஏதோ நினைத்துக் கொண்டவன்போல அப்போதுதான் அங்கே வந்த ஒரு போர்ட்டர் ஓடோடிச் சென்று ஹஜ்ஜு பிரயாணி ஒருவரின் இரண்டு கைகளையும் ஜன்னலுக்கு வெளியே ஆவலோடு பிடித்து, "ஸல்லல்லாஹு"வோ என்னவோ ஓதிக் கொண்டான். அவனை, ஹஜ்ஜு பிரயாணம் செய்யும் நல்ல நிலையில் ரஹ்மான் வைக்கவில்லை. அந்தப் பெரிய இடத்துக்குப் போகும் நபரைத் தொடும் பேறையாவது அல்லாஹ் அளித்திருந்தான்.

★

போர்ட்டர் உடையில் அந்த ரஹ்மான் வீட்டுக்கு வந்தான். அந்த உடையில் அவனை ஒரு மூஸ்லீம் என்று யாரும் சொல்ல முடியாது. ஜாதிமத வித்தியாசம் — இதனால் ஏற்படும் பூசல்கள் இவைகள் எல்லாம் மறைந்து வரும் இந்த நாளில், இந்த உடை ஒருவகையில் நல்ல சேவை செய்துதான் வருகிறது. ஆனால், அதற்காக அந்த உடைக்குள் உள்ள நபரின் மனிதப் பண்பையும் பழைய உயர்ந்த நாகரிகப் பண்பாட்டையும், மாற்றி விடுகிறதே! — வெறும் உடைக்காக மட்டும் மதிப்பு ஏற்பட்டு விடுகிறதே! ரஹ்மான் விஷயத்தில், இந்த உடையால் ஒருவிதமான வறட்டுக் கௌரவம் ஏற்படுவதற்கும் வழியில்லை. அவன் கேவலம் போர்ட்டர்தானே. ஒரு 'ஆபீஸ'ராகவும் இல்லை; ஆபீஸரைப்போல எண்ணிக் கொள்ளும் பெரிய மனுஷனாகவும் இல்லை! தான் ஒரு சாதாரண போர்ட்டர் என்பதையும், தன் பிள்ளையையும் மனப்பூர்வமாக உணர்ந்தான்!

"ஸ்ஸ்...... ம் ...... நம்ம எண்ணம் நிறைவேறப் போவுதா! நானும் ஒரு பயணம் மக்காவுக்குப் போய் வரத்தான் போறேனா!......" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

இது அந்தக் கிழவியின் காதில் விழுந்து விட்டது. தன் பொக்கை வாயைத் திறந்து கலகலவென, தன்னால் முடிந்த வரையில் சிரித்தாள்.

"என்ன பாவா, மக்காஷரீபுக்குப் போய் வரணும்னு ஆசைப்படுறே!" என்று சிரித்த வாறே கேட்டாள்.

"ஆமா நானி!......இந்தக் கட்டை ஒரு தடவையாவது அங்கே போய் வந்தாத்தான் மனசு சமாதானப்படும். இல்லேன்னா......"

நானி குறுக்கிட்டாள்.

"இந்தாப்பா ரஹ்மான்! அல்லாஹ்வின் கடமைங்க அஞ்சு. நாலு, எல்லா மூஸ்லீம்களையும் கட்டுப்படுத்துறது. இந்த அஞ்சாவது



குமாரி இந்திரா

லேடி, பொறியியற் கல்லூரியின் 'தமிழ்க்கழகம்' இவ்வாண்டு 11-8-55 அன்று ஆரம்பமாயிற்று. அந்த ஆரம்ப வைபவத்தில் சென்னை ராஜதானி கல்லூரியின் ஹானர்ஸ் வகுப்பு மாணவி குமாரி இந்திராவின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. 'வேலவனை அழைத்து வாடி', 'நடனமாடினார்' முதலிய பாடல்களுக்குக் குமாரி இந்திரா நடனமாடி அபிநயமும் செய்தார்.

ஹஜ் யாத்திரை, பணவசதியும், ஆரோக்கிய வசதியும் உள்ளவங்களுக்குத் தானே !......"

ரஹ்மான் ஏதோ சொல்ல நினைத்தான். சரியான காரணமாகத் தோன்றவில்லை. வாயை மூடிக் கொண்டான்.

"ம்......ஒரு குவளை தண்ணி கொடப்பா... குடிச்சுட்டு, நான் இந்த மருக்கொளுந்தை விக்கப் போறேன் !" என்றாள் அந்தக் கிழவி, தன் மோகனச் சிரிப்புடன் !

"இந்த நாவிக்கு இந்த மருக்கொளுந்தை வித்து, என்னதான் கிடைக்குதோ......"

நாவி என்னமோ சொன்னாள். அதற்குள் தண்ணீர் கொண்டுவர ரஹ்மான் உள்ளே சென்று விட்டான். வீட்டில் யாருமில்லை, கல்யாணமாகாத கட்டை. குடும்பம் நடத்த ஆசைதான். ஆனால், போதிய வருமானம் வேண்டாமா ! ஏதோ போர்ட்டர் தொழிலில் கிடைக்கும் அற்ப சொற்பத்தை வைத்துக் கொண்டு ஒருவேளை ஹோட்டலில் சாப்பிடுவான்; ஒருவேளை ஆமாக்கு சோறுக்குவான்.

நாவி தண்ணீரைக் குடித்து விட்டுச் சிறிது ஆயாசம் தீர்ந்தவளாய், "மருக்கொளுந்து வாங்கலியா, மருக்கொளுந்து !" என்று ராகம் போட்டுப் பாடியவாறே தன் வியாபாரத்தைக் கவனிக்கச் சென்று விட்டாள். அந்த வயதிலும், தான் சம்பாதித்துச் சாப்பிடலாம் என்ற தைரியம் அந்தக் கிழவிக்கு.

★

தான் கிழிந்த பாயை விரித்து, அந்த அழுக்கான தலைகாணி பாயையும் போட்டு, ரஹ்மான் படுத்தான். ஏதோ படுக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஆனால் அவன் சிந்தனை எல்லாம் ஹஜ் யாத்திரை பற்றியே !......

"மருக் கொளுந்து வாங்கலியா, மருக்கொளுந்து !"—நாவியின் குரல் எங்கோ கேட்டது. அந்தக் கிழவி மீண்டும் திரும்பி அந்த வீதி வழியே வந்து கொண்டிருந்தாள் போலும் ! அந்த நாவிக்குத்தான் மனத்தில் எவ்வளவு தெம்பு இருக்க வேண்டும் ! கேவலம் மருக்கொழுந்தை விற்று...... அதில் வரும் லாபத்தைக் கொண்டு...... அது சரி, அவளிடம் யார் மருக்கொழுந்து வாங்குவார்கள் ! மருக்கொழுந்தும் ஒரு புஷ்பமா !

இதே கேள்வியையும் அவன் நாவியிடம் பல சமயம் கேட்டிருக்கிறான். "ஏன் நாவி ! மருக்கொழுந்து விக்கிறே ! ரோஜாப்பூ, மல்லி இப்படி ஏதாச்சும் வித்தாலும், நல்லா விக்குமே !" என்று இரண்டு மூன்று தடவைகள் கேட்டிருக்கிறான். அந்தக் கிழவி எதற்கும் மங்காத தன் சாந்தமான சிரிப்பு அலைகளை அள்ளிக் கொட்டி, ஒரே சமாதானம் தான் சொல்லுவாள் :

"நாம் மனசார உழைக்கிறோம். இன்னைக்கு இல்லேன்னா, நாளைக்கு ஆண்டவன் தர்றான். பகட்டு வியாபாரத்தைக் கண்டு மனுஷங்க மயங்கிடலாம். ஆனா, ஆண்டவன் இதைக் கண்டு மயங்க மாட்டான் !"

ஏதோ குறைபட்ட உள்ளத்தோடு, ரஹ்மான் பாயில் படுத்தான்; புரண்டு படுத்தான்; ஆனால் நல்ல தூக்கமில்லை. ஒருவேளை அரைத் தூக்கம் என்று சொல்லலாம். ஏதோ ஹஜ் யாத்திரை, மருக்கொழுந்து நாவி, ஹஜ்ஜுக்குச் சென்ற நல்லவர்கள்... இப்படி அவன் மனப் பகைப்புலனில் பல காட்சிகள் மங்கிய வாறு தோன்றி மறைந்தன.

நாவி சொல்லும் அந்த ஆண்டவன் யார் ! அவன் படைப்பில், உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களுக்கு மட்டுந்தானா ஹஜ் போக வசதி, மருக் கொழுந்தை விட மல்லி, முல்லை, ரோஜா சம்பங்கி என்ற மலர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பது போல ! மனிதக் கூட்டம் போல, புஷ்பங்களிலும் வேறுபாடு உண்டா ! தீண்டாமையை ஒழித்து விட்டதாகச் சொல்லிக் கொள்கிறோம். அடிக்கிறார்களே. அந்தத் தீண்டாமை ஆண்டவனின் உயர்ந்த சிருஷ்டியான மலர்களிலும் உண்டா ! ஆனால் மருக்கொழுந்து ஒரு மலரில்லையே! தழைக்கு மலரின் ஸ்தானம் கிடைக்க முடியுமா !—போர்ட்டர் ரஹ்மான் போன்றவர்கள் ஹஜ் யாத்திரை போய் வருவதற்கு இயலுமா !

★

உலகை மறந்து, அதிலுள்ள வெறுக்கத் தக்க வேறுபாடுகள் அத்தனையும் களைந்து, அற்பத்தனங்களை யெல்லாம் ஒதுக்கி, ஆனந்தமாக மெய்ம்மறந்தான்......

ஆ! அது யார்!

ஒரு அழகான உருவம். ஆணோ, பெண்ணோ தெரியவில்லை. தேவதைகள் என்று சொல்லுகிறார்களே, அதுவோ என்னவோ!

ஒரு மலர்ச் சிரிப்புடன் அந்த உருவம். மல்லிகை போன்ற உருவம்—அதே துல்லியமான தூய வெண்மை! தொடர்ந்து வேறு சில உருவங்களும் வந்தன. ரோஜா, அல்லி, தாமரை, சாமந்தி, இருவாக்ஷி, முல்லை......எல்லோரும் அந்தந்த மலர்களைப் போலவே உருவம் பெற்று, அதே நிறத்துடனும், சுகந்தத்துடனும் வந்தார்கள். எங்கும் தூய்மை! எங்கும் நிர்மலம்! எங்கும் தெய்வீகத்தன்மை.

எல்லோரும் ரஹ்மானைச் சூழ்ந்து கொண்டார்கள். அவன் மனத்திலிருந்த பளுவை அகற்றவேண்டுமென்ற அக்கறை அவர்களுக்கு!

"மருக்கொழுந்தை நீ கேவலமாக நினைத்தாயல்லவா!" என்று ஆரம்பித்தது பன்னீர்ப்பூ உருவம்.

"பச்சை நிறத்தில் மலர் இல்லாத குறையைத் தீர்ப்பவன் கொழுந்து தானே!" என்று பெருமையுடன் சொன்னது ரோஜா!

"கொழுந்து என் பக்கத்திலிருந்தால்தான் எனக்குப் பெருமை. அவன் வாசத்துக்கு முன் நான் எந்த மூலை!"—இது மல்லிகை.

பிறகு எல்லோரும் நடனம் ஆடினார்கள். மருக்கொழுந்தும் அந்த நடனத்தில் இடம் பெற்றது.

புஷ்ப நடனம்தான் என்ன கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது! இந்தக் கதம்பத்தில் வெட்டி வேருக்கும் இடம் கிடைத்ததைப் பிரத்தியேகமாகக் குறிப்பிட வேண்டும். மருக்கொழுந்தைத் தீண்டாதவன் என்று மனித இனம் ஒதுக்கினால், மலர் உலகில், வெட்டி வேருக்கும் சரிசமமான ஸ்தானம்!

★

ரஹ்மான் திடுக்கிட்டு விழித்தான். என்ன ஆனந்தமான கனவு! தான் ஹஜ்ஜுக்குப் போகவில்லை. தனக்குப் பாக்கியமில்லை என்று கருதியதின் பலனோ இந்த மலர்க் கனவு! 'உலகில் எல்லா மனிதர்களுக்கும் சம ஸ்தானம்தான்; அதை எல்லோரும் உணர வேண்டும்' என்பதை ரஹ்மான் உணரவேண்டுமென்றோ இப்படி......

ரஹ்மான் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டான்: "இப்போ இல்லேன்னு, ஒரு நாள் நான் மக்காஷரீபுக்குப் போகாமலா இருந்திடப் போறேன்!" என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டான்!

வெட்டி வேருக்கும், மருக்கொழுந்துக்கும் மலர்கள் மரியாதை கொடுத்துச் சம அந்தஸ்தில் கொண்டு வந்ததுபோல, மானிடர்களில் எத்தனை பேர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் என்று கருதப்படும் தங்கள் தோழர்களை முன்னுக்குக் கொண்டு வர விரும்புவார்கள்! தற்சமயம் உள்ள சமூகக் கதம்பத்தில் கனகாம்பரமும், நீலாம்பரமுந் தானே மின்னுகின்றன! மருக்கொழுந்துக்கும், ரஹ்மான்களுக்கும் இடம் கிடைக்குமா!

டி. கே. சி. யின் கடிதங்கள்

சென்னை
23—1—44

Madame-de-Stael என்று கல்வியும் செல்வமும் நிறைந்த மாதொருத்தி பாரிஸ் நகரத்தில் இருந்தாள். Dr. Johnson காலத்தில்தான் இருந்தாள். ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் அவள் புகழ் பரவியிருந்தது. ஐரோப்பாவிலுள்ள பெரும் புலவர்கள் எல்லாரும் அவள் வீட்டில் மாதக்கணக்காய்த் தங்குவார்கள். இங்கிலாந்திலிருந்து Gibbon (Decline and Fall of the Roman Empire எழுதியவர்) போயிருந்தார்–கேட்பானேன். பேராசிரியர் கூட்டம். பெரிய விருந்து. அந்த நிலயத்திலிருந்து உயர்ந்த பண்பாடு பிறந்தது. இங்கிலாந்துக்கும் பண்பாட்டின் லாபம் கிட்டியது. இதையெல்லாம் பற்றி நான் அடிக்கடி பகற்கனவு காண்பதுண்டு. அவ்வளவும் நினைவுக்கு வந்தது. தங்கள் அரண்மனையில் தங்கியபோது. பண்பாடு, இடம், பொருள், ஏவல் எல்லாம் வேண்டிய மட்டில் இருக்கிறது. புலவர்களைக் கூட்டுவதுதான் கஷ்டமாய் இருக்கிறது!

எப்படியோ நம்மவர்களுக்குக் கலை உணர்ச்சி வறண்டு போய்விட்டது. பெரிய கொம்பன் யானையைக் கண்டால் தந்தத்தின் முனையில் மண் ஒட்டிக் கொண்டிருக்கிறதே என்று சொல்லுவார்கள். ரோஜாமாலை வாசனை வீசுகிறது என்றால், மாலைக்குள் முள்ளிருக்கிறதே என்பார்கள். மேனகையைப் பார்க்கச் சொன்னால், 'ஐயோ, மீசை துளிக்கூட இல்லையே' என்று கையை நெரிப்பார்கள்! இதெல்லாம் விஸ்வியாச வார்த்தையாக ஒலிக்கலாம். ஆனால், ஸ்காலர்களைச் சுட்டிச் சொல்லும்போது தன்மை நவிற்சி அணிதான்!

மிக்க அன்புள்ள
டி. கே. சிதம்பரநாதன்

பூதான சரித்திரத்திலே

நான்கு ஆண்டுகள்!

சுரேஷ் ராம்

2

காந்தி பிறந்த நாளாகிய அக்டோபர் இரண்டாம் தேதி (1951ம் ஆண்டு) வினோபா ஸாகர் என்ற ஊரில் இருந்தார். அது மத்திய பிரதேசத்தில் உள்ளது. அங்கு ஒரு சர்வ கலாசாலை இருக்கிறது. அங்கு அன்று நடை பெற்ற தொழிலாளர்கள் கூட்டத்தில், 1957-ம் வருஷத்துக்குள் ஐந்து கோடி ஏக்கர் நிலம் தானமாகத் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று கூறினார் வினோபா. அப்பொழுது குறிப்பிட்ட சில கருத்துக்களைக் கேளுங்கள்.

"என்னுடைய வயிறு சிறிதேயானாலும் தரித்திர நாராயணனின் வயிறு மிகப் பெரிது. ஆகவே, என்னை யாராவது 'உங்களுக்கு எவ்வளவு நிலம் வேண்டும்' என்று கேட்டால், 'ஐந்து கோடி ஏக்கரா நிலம் வேண்டும்' என்கிறேன். ஆம், தரிசு நிலமல்ல, உழுது பண்படுத்திப் பயிரிடக்கூடிய நிலம்தான். ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் இருந்தால், என்னை ஆறாவது பிள்ளையாகக் கருதி ஒரு பங்கு கொடுங்கள் என்கிறேன். நான்கு பிள்ளைகளே இருந்தால் என்னை ஐந்தாவது பிள்ளையாகக் கருதுங்கள். இவ்வகையில், தேசத்தில் பயிரிடக்கூடிய மொத்த நிலத்திலிருந்து ஐந்தில் ஒரு பகுதியே கேட்கிறேன்!" என்றார். அத்துடன் நின்றால் தேவலை. அந்த ஜனங்களிடம் முழங்கால் மண்டியிட்டு அவர் பின்வருமாறு கூறிக் கேட்டார்:

"தரித்திர நாராயணனின் பூஜைக்கு உங்களால் இயன்றதைக் கொடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது தான் உண்மை வேள்வி. உண்மைத் தியாகம். உங்களில் ஒவ்வொருவரையும் இப்பெரும் பணியை நிறைவேற்றச் சற்று உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இதுவரை சரித்திரத்தில் கண்டும் கேட்டுமிராத பெரும் மாறுதலைத் தேசத்தில் இவ்வியக்கம் உண்டாக்கி விடும். இங்கே இருந்த வாக்கிலேயே எதிர்காலத்தில் அமையப் போகும் அருமையான சமுதாயத்தின் அற்புதக் காட்சியை இப்போது என் கண் முன் காணுகிறேன்."

* * *

இவ்விதம், மத்திய பிரதேசம், விந்திய பிரதேசம், மத்திய பாரதத்தில் சில பகுதிகள், ராஜஸ்தானம், உத்தரப் பிரதேசம்— ஆகிய பகுதிகள் வழியாகச் சென்று நவம்பர் 13 (1951) ம் தேதி வினோபா புது தில்லியை அடைந்தார். வினோபா தமது ஆச்ரமம் வைத்திருக்கும் அந்த பௌனாரிலிருந்து தில்லி வந்து சேர அறுபத்திரண்டு நாட்கள் பிடித்தன. இந்த அறுபத்திரண்டு நாட்களில் 19,436 ஏக்கர் நிலம் வினோபா பெற்றார்.

வாமனாவதாரம் எடுத்த ஆண்டவன் மூன்றடி மண் கேட்டு உலகத்தையே அளந்தார். வினோபா அடிகளும் தம்மை ஒரு வாமனன் என்று தில்லிப் பொதுமக்களிடம் அறிமுகப் படுத்திக் கொண்டார். ஏனெனில் அவரும் மூன்று விஷயங்கள் மக்களைக் கேட்டார்:

"நானும் பாரத நாட்டு மகா ஜனங்களிடம் மூன்று விஷயங்கள் யாசிக்கிறேன். முதலில் அவர்கள் உடைமையாகப் பெற்றுள்ள நிலத்தில் ஒரு பகுதியைத் தியாகம் புரியச் சொல்லுகிறேன். இரண்டாவதாக அவர்கள் பிறர் சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடைசியாக அந்தத் தொண்டு வாழ்க்கையில் ஈடுபட்டுத் தங்கள் உடைமை யாவற்றையும் தியாகம் புரிந்துவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தப் பாதையில்தான் மக்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன்."

தில்லி அடைந்த பிற்பாடு, மூன்று நாட்கள் சேர்ந்தாற் போல் திட்டக் கமிஷன் தலைவர், அங்கத்தினர்கள், பிரதம மந்திரி நேரு முதலியவர்கள் வினோபாவைச் சந்தித்துப் பேசினார்கள். பிறகு வினோபா தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

"இந்த மூன்று நாளைய சர்ச்சையிலும் என்னுடைய கருத்துக்களை அவர்களுக்குக் கூறினேன். என் யோசனைகளைப் பரிசீலிப்பதாக அவர்கள் கூறினார்கள். அவர்கள் உள்ளத்தில் தேச நலனில் அக்கறையிருக்கிறது. என்றாலும் அதை அடைவதற்காக அவர்கள் கடைப்பிடிக்கும் வழிக்கும் என் வழிக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது!"

வினோபா பதினொரு நாட்கள் தில்லியில் தங்கினார். அந்தப் பதினொரு நாட்களும் காந்தி மகான் சமாதிக்குப் பக்கத்திலே ஒரு குடிசையில் இருந்து வந்தார். அங்கிருந்து நவம்பர் 24-ம் தேதி விடியற்காலை, பொழுது புலருவதற்குமுன்னே உத்தரப் பிரதேசத்தில் கால்நடை யாத்திரையாகப் புறப்பட்டார். தேசத்திலுள்ள பண்பட்ட நிலங்களில் ஆறில் ஒரு பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்த வினோபா இப்போது உத்தரப் பிரதேசத்திலேயே ஒரு கோடி ஏக்கர் நிலம் பெற விரும்புவதாகத் தெரிவித்தார். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த நிர்மாண ஊழியர்கள் ஏற்கெனவே, வினோபா தில்லியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது, மதுராவில் வினோபாவின் முன்னிலையில் கூடி (நவம்பர் 1-ம் தேதி) ஐந்து லட்சம் ஏக்கர் முதல் தவணையில் தருவதாகத் தெரிவித்திருந்தார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் அல்மோரா ஜில்லாவைத் தவிர மற்ற எல்லா ஜில்லாக்களிலும் ஒன்றன்பின் ஒன்றாக வினோபா அடிகள் யாத்திரை செய்தார்.

1952-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13, 14, 15,16 தேதிகளில் சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம் நடைபெற்றது. இதை முன்னிட்டு அங்கு சேவாபுரி ஆசிரமத்தில் வினோபா அடிகள் ஒரு வாரத்துக்கு மேல் தங்கினார். இந்தச் சம்மேளனம் பூதான இயக்கத்தின் சரித்திரத்திலேயே மிக முக்கியமான கட்டமாகும். ஏனெனில் இங்குதான் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த நிர்மாண ஊழியர்கள் இரண்டு வருஷத்துக்குள் 25 லட்சம் ஏக்கர் நிலம் வினோபாவுக்கு அளிப்பதாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர். ஆம்! வினோபா அடிகள், ஐந்து கோடி ஏக்கர் நிலம் கேட்டார் அல்லவா! அதன் முதல் தவணையாக 25 லட்சம் ஏக்கர் தருவதாக உறுதி பூண்டனர். ஒவ்வொரு ராஜ்யமும் இவ்வளவு தரவேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டது. நிர்மாண ஊழியர்கள் எப்படி வேலை செய்ய வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது. சர்வோதய லட்சியம் இந்தச் சம்மேளனத்தில் ஒரு நிர்ணயமான உருவமே பெற்றது என்று சொல்ல வேண்டும்.

உத்தரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னௌவுக்கு மே 8-ம் தேதி வினோபா போய்ச் சேர்ந்தார். அன்று தான் புத்த ஜயந்தி. அதாவது புத்தர் பிறந்த நாள். அப் புனித நாளன்று வினோபா கூறினார்:

"நிலம் படைத்தவர்களை நிலம் கொடுக்குமாறு கேட்கிறேன்....அது மட்டுமல்ல, நாளாக நாளாக ஒரு எண்ணம் என் மனதில் உறுதிப் பட்டுக் கொண்டு வருகிறது. அதாவது பகவான் புத்தர் தொடங்கிய காரியத்தை நான் எவ்வளவோ பலவீனனாக இருந்தும், என் மூலமாக ஆண்டவன் முடித்துக் கொள்ளப் பார்க்கிறான் என்பதே.

"ஆம், பகவான் புத்தர் தொடங்கிய தர்ம சக்கரத்தை நான் தொடர்ந்து சுழற்ற வேண்டும் என்பதே ஆண்டவன் எனக்கும் பணித்த வேலையாக இருக்கிறது. இதையும் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். சிங்கத்தின் கர்ஜனை மற்ற சத்தங்களை யெல்லாம் அடக்கி விடுவதுபோல், என் குரல் எவ்வளவு அதிகாரத்துடன் தொனிக்க ஆரம்பித்து விட்டது! அதன் பயனாக நிலம் எனக்குவந்து விட்டது. அது மட்டுமல்ல, அவை நிலமில்லாதவர்களுக்கும் போகவும் போய் விட்டது.

"இந்த யுகத்தின் அறைகூவல், தேசத்தின் செல்வத்தை, உலகத்தின் செல்வத்தை யாவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது. இன்றில்லாவிட்டால் நாளை நிச்சயமாக இந்த நிலை ஏற்படத்தான் போகிறது. இந்த மாறுதல் சாந்தமாகவும் சமாதான முறையிலும் நிச்சயம் ஏற்படுத்தலாம். இதில் எனக்கு எள்ளத்தனையும் சந்தேகமில்லை. அந்த சமுதாயத்தை என் கண் முன்னால் நன்கு காண்கிறேன். அதனால்தான் இவ்வளவு உறுதியோடு பேசுகிறேன். அதனால்தான், இன்னும் தூங்கிக் கொண்டிராதீர்கள், எழுந்திருங்கள் என்று கூறுகிறேன். துளஸிதாஸர், 'பொழுது புலர்கிறது: மரங்களில் பட்சி ஜாலங்கள் சந்தோஷமாக சப்திக்கின்றன. ஏழைகளுக்கு தானம் செய்ய வேண்டிய சமயம் வந்து

விட்டது. ராமா, இனியும் தூங்காதே, எழுந்திரு!" என்றார். இதேமாதிரிதான் நானும் உங்களை எழுப்புகிறேன்; எழுந்திருங்கள்."

வினோபா உத்தரப் பிரதேசத்தில் நாற்பத்தெட்டு ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு, 1952ம் வருஷம் ஜூலை மாதம் நாலாம் தேதி மீண்டும் காசிக்கு வந்து சேர்ந்தார். எழுபது நாட்கள், மழைக் காலம் தீரும் வரை காசி வித்யாபீடத்தில் தங்கியிருந்தார். அங்குதான் "சுத்த பாரதம்" என்ற இயக்கத்தையும் தொடங்கினார். காசி நகரம் எவ்வளவு புனித க்ஷேத்திரமோ அவ்வளவுக்கு அசுத்தம் படிந்த நகரம். மக்களுக்குச் சுகாதார உணர்ச்சியூட்டும் "சுத்த பாரதம்" என்ற இயக்கத்தைத் தொடங்கினார். அந்த ஆண்டு செப்டம்பர் 11-ம் தேதி வினோபா அடிகளின் ஐம்பத்தொன்பதாவது பிறந்த நாள் வந்தது. அன்று பாரதத்தின் நிலப் பிரச்னை தீர்ந்தாலொழியத் தம் ஆசிரமத்துக்குத் திரும்புவதில்லை என்ற பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்.

உத்தரப்பிரதேசத்தில் வினோபாஜி 257 ஊர்களில் தங்கினார். 3750 மைல்கள் நடந்தார். 2,95,028 ஏக்கர் நிலம் பெற்றார். உத்தரப் பிரதேசத்தில் மணிப்பூர் ஜில்லாவிலுள்ள மான்கிரோத் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 1952 ஜூலையில் தங்கள் கிராமம் முழுமையுமே தானமாக வழங்கினார்கள். அந்த சமயத்தில் தேசமெங்கிலும் சேர்த்து நாலு லட்சம் ஏக்கர் நிலம் பூதானத்துக்குக் கிடைத்திருந்தது.

1952-ம் வருஷம் செப்டம்பர் 14-ம் தேதி உத்தரப் பிரதேசத்திலிருந்து கரமநாச நதியைக் கடந்து பீஹாரில் அடியெடுத்து வைத்தார். அந்த ராஜ்யத்தின் எல்லையில் அடியெடுத்து வைத்ததுமே, "தீர்த்த யாத்திரை செய்வது போதும், க்ஷேத்திராடனம் புரிவது போதும் நானும் பூதான யாத்திரைக்குக் கிளம்பி விட்டேன். பீஹாரிலுள்ள நிலப் பிரச்னை நான் இங்கு இருக்கும் பொழுதே தீர்க்கப்பட்டு விட வேண்டும் என்பதே என் விருப்பம். நிலப் பிரச்னையை அன்பினாலும் சமாதான முறையிலும் தீர்த்து விட்டோமானால் அஹிம்சா முறைக்குப் பெரும் கீர்த்தியைத் தேடிக் கொடுத்தவர்களாவோம். பின்னர் இந்த முறையினால் எந்தப் பிரச்னைதான் தீர்க்க முடியாது! எதைத்தான் அடைய முடியாது!" என்று கூறினார்.

அக்டோபர் 23-ம் தேதி, பீஹாரில் நிலப் பிரச்னையைத் தீர்க்காமல் வேறு ராஜ்யத்துக்குப் போவதில்லை என்று தம் திடமான முடிவை வெளியிட்டார். அடுத்த நாள் மக்கள் முன்னிலையில் சம்பத்திதானம் என்னும் கொள்கையை மக்கள் முன் வைத்தார்.

"பூதான வேலை முன்னேற முன்னேற நாம் இன்னும் ஒரு அடி முன் சென்று மக்களின் சொத்துக்களிலும் பங்கு கேட்க வேண்டும் என்பது அவசியமாகி விட்டது. இல்லையெனில் பூதான இயக்கத்தின் கொள்கையை அடைய முடியாது போலிருக்கிறது. அதனால்தான் நான் மக்களிடமிருந்து அவர்கள் பணத்திலும் பொருளிலும்கூட ஒரு பங்கைக் கேட்பது என்று தீர்மானித்தேன். இப்பொழுது நான் உங்கள் சொத்தில் ஆறில் ஒரு பங்கு கேட்கிறேன். இனி, நீங்கள் எவ்வளவு கொடுக்க விரும்புகிறீர்களோ அதைக் கொடுங்கள்."

வினோபா கயா ஜில்லாவுக்குள் அக்டோபர் 28-ம் தேதி அடியெடுத்து வைத்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு புத்த பகவானுடைய இந்த ஜில்லாவிலிருந்து ஒரு லட்சம் ஏக்கர் நிலம் வேண்டும் என்று கூறினார். பிறகு இதைப் பற்றி விளக்கிக் கூறினார்:

"இது புத்த பகவான் கடுமையான தவங்கள் புரிந்த புனிதமான இடம். இங்கே கோடிக் கணக்கான ஹிந்துக்கள் தங்கள் முன்னோர்களுக்குச் சிராத்தம் செய்யும் இடம். இந்தப் பவித்திரமான க்ஷேத்திரவாசிகளை முதல் தவணையாக ஒரு லட்சம் ஏக்கர் கொடுக்கும்படி கேட்க வேண்டும் என்று தீர்மானித்தேன். இதை நிர்மாண ஊழியர்களிடம் கூறினேன். அவர்களும் நான் கூறியதை ஒப்புக் கொண்டார்கள். அந்த லட்சியத்தோடு வேலை செய்யவும் இணங்கினார்."

இப்படி கயா ஜில்லாவில் பூதான வேலை தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டது.

1952-ல் டிசம்பர் 13-ம் தேதி மான்பூர் ஜில்லாவுக்குச் சென்றார். அப்பொழுது ரொம்பவும் பலவீனமாக இருந்தார். 14-ம் தேதி சாந்தில் என்ற ஊருக்கு வந்தார். அப்பொழுது அவர் நிலைமை இன்னும் மோசமாகிப் போய், ஒரு அடிகூட மேலே எடுத்து வைக்க முடியாது என்று ஆகி விட்டது. ஆகவே, சாந்திலில் பல மாதங்கள் வினோபா தங்க நேர்ந்தது. ராமன் இருக்குமிடம் அயோத்தி என்றபடி, வினோபா இருக்குமிடத்தில் சர்வோதய சம்மேளனம் என்று முடிவு செய்யப்பட்டு, ஐந்தாவது சர்வோதய சம்மேளனம் அங்கு கூட்டப்பட்டது.

(இன்னும் வரும்)

பல்டாக்டர் அங்கீகரித்த இவ்வழியில் பற்சிதைவைத் தடுக்க முயலுங்கள்

௨-நிமிஷ கால்கேட் பழக்கத்தை 4,000க்குமேல் பல் டாக்டர்கள் அங்கீ கரிக்கின்றனர்





✔ இனிய சுவாசம்!

✔ ஒளிவீசும் பற்கள்!

✔ சொத்தை குறைகிறது!

...ஆம், இம்மூன்றையும் பெற கால்கேட் டூத் பவுடரை, வழக்கமாக உபயோகியுங்கள்!

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பிரஷ் கொண்டு 2-நிமிஷம் தேய்க்கவும்.
- பல்லின் முன்புறம், பின்புறம் நுனிபாகம் மூன்றையும் தேய்க்கவும்.
- எப்பொழுதும் ஈறிலிருந்து எதிர்த் திசையில் தேய்க்கவும்.

ஜயண்ட் சைஸ் லாபகரம்

கால்கேட் டூத் பவுடர்

TPG/15



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா. பி. சேதுப்பிள்ளை

33. காஞ்சிமா நகரம் (தொடர்ச்சி)

காஞ்சிமா நகரம் தெய்வகம் மணக்கும் திரு நகரம். எம்மருங்கும் கோயில்களும், கோட்டங்களும் நிறைந்து, இறையொளி வீசும் இந் நகரில் "கச்சி ஏகம்பா!" என்று கை கூப்பித் தொழுவாரும், "கஞ்சி வரதப்பா!" என்று கசிந்துருகி நிற்பாரும் எண்ணிறந்தவர். கண்ணுக்கினிய பூஞ் சோலையின் இடையே, ஒரு மாவின் கீழ்க் கோயில் கொண்ட மங்கை பங்கனை "ஏகம்பத்துறை எந்தாய் போற்றி! பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி!" என்று அருந்தமிழ் மலரால் அருச்சனை செய்தார் மாணிக்க வாசகர். அப் பெருமானைக் கண்ட திருநாவுக்கரசர்,

"இறையவன்காண் எழிலாரும்
பொழிலார் கச்சி
ஏகம்பன்காண், அவன்என்
எண்ணத் தானே"

[எழில்-அழகு, பொழில்-சோலை]

என்று பாமாலை அணிந்து பணிந்தார்.

இத்தகைய பெருமை வாய்ந்த கச்சி ஏகம்பத்தின் முன்னின்று கதறி அழுதார் ஒரு திருத் தொண்டர். "கருணையே உருவாய கச்சி ஏகம்பா! உன் அருமைத் திருமேனியைக் காணக் கண் இல்லையே! கண்கள் மூன்றுடைய கச்சியப்பா! உன் அடியவனாகிய என்னைக் கண்ணறையன் என்று மண்ணுலகம் பழிக்கின்றதே! தன் நிகரில்லாத் தலைவனே! இது உனக்குத் தகுமோ? பேதையேன் அறியாமல் செய்த பிழையெல்லாம் பொறுத்து அருள் புரிவாய்! கண்ணொளி தந்து எளியேனைக் காத்தருள்வாய்!" என்று மனம் உருகித் தொழுது நின்றார்.

அந் நிலையில் இறைவன் அருளால் அவர் கண்ணில் ஒளி பிறந்தது. கச்சி ஏகம்பரது கருணைத் திருமேனி தெரிந்தது. மெய்யரும்பி, விதிர் விதிர்த்து ஆடினார்; பாடினார் திருத் தொண்டர்.


"ஆலம் தான்உகந்து அமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம் தான்பெரி தும்உடை யானை
சிந்திப் பார்அவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே"


[ஆலம்-நஞ்சு, கம்பன்-ஏகம்பன்]

என்று கண் அளித்த பெருமானது கருணையை வியந்து பாடினார். இவ்வாறு கச்சி ஏகம்பத்தில் கண் பெற்றுப் பாடியவர் தேவாரம் அருளிய மூவருள் ஒருவர்; அந்தமிழ் அழகர்; சுந்தரமூர்த்தி.

திரு ஏகம்பத்தின் அருகே முருக வேள் உறையும் குமர கோட்டமும் காமாட்சியம்மை அறம் வளர்க்கும் காமக் கோட்டமும் உண்டு. காசி விசாலாட்சியையும், மதுரை மீனாட்சியையும், காஞ்சிக் காமாட்சியையும் கருணையின் திருவுருவமாகக் கருதி, என்றும் வழிபடும் பெருமை சான்றது தமிழ் நாடு. இந் நாட்டிலே பிறந்து, தேமதுரக் கவி பாடும் திறம்

ஹாஸ்யக் களஞ்சியம்







சாமா

பெற்ற மெய்யடியார் ஒருவர் காமாட்சியம்மையின் கருணையைப் பாடுகின்றார்.

" ஐயன்அளந்த படியிரு
  நாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும்
  போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாடலை
  யும்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இதுவோ
  உன்தன் மெய்யருளே "

என்று தன் ஆற்றாமையை அறிவிக்கின்றார். " அண்ட மெல்லாம் வாழ அறம் புரியும் அன்னையே ! நின் தொண்டனாகிய என்னை இப்படித் திண்டாட விடலாமோ? கருணை பொழியும் நின் திருமுகத்தைக் கண்ட கண்களால் கடுமுகம் உடைய கசடரைக் காண வைத்தாயே ! என் வறுமையால் அன்றோ பொல்லாதவனை நல்லான் என்றேன் ; போர் முகம் அறியாதவனைப் புலியே என்றேன். செம்மையான தமிழின் சீர் அழித்தேன் ! அம்மையே ! இதுவும் நின் அருளோ ?" என்று முறையிடுகின்றார்.

காஞ்சிமா நகர்ப் பூஞ்சோலையில் மலர் பறிக்கும் பொழுதும், வாச மலர்க் கொடிகளில் ஊசலாடும் பொழுதும் மாசற்ற மனம் உடைய மங்கையர் ஈசன் புகழ் பாடி இன்புறுவர். "திருமுறைகள் வாழ்க; திருமறைகள் வாழ்க ; சிவநெறியும் செந்தமிழும் செழித்து வாழ்க ; இவையெல்லாம் வாழும் வண்ணம் ஏகம்பநாதனைப் பாடுவோம் ; பாடிப் பொன் ஊசல் ஆடுவோம் என்பர் இளம் பாவையர்.


" தேவாரம் முதலியஐந் துறுப்பும் வாழ
  சிறந்தமறை ஆகமங்கள் செழித்து வாழ
நாவாத சித்தாந்த சைவம் வாழ
  சந்தவரைச் செந்தமிழ்நூல் தழைத்துவாழ
நாவாரும் புகழ்க்கச்சி நகரில் காம
  நயனியோடும் உறைஇறைசீர் நன்கு பாடி
பூவாரும் மலர்விழியீர் ! ஆடீர் ஊசல்
  புத்தமுதம் நிகர்மொழியீர் ! ஆடீர் ஊசல்"


[ஐந்து உறுப்பு-தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம்; சந்தவரை-பொதியமலை, காமநயனி-காமாட்சி]

என்பது ஒரு ஊஞ்சற் பாட்டு.

கச்சியம்பதியிலே திருமால் கோயில்கள் பல உண்டு. அப் பெருமான் நின்ற திருக்கோலமும், இருந்த திருக்கோலமும், பள்ளி கொண்ட கோலமும் கண்டு மகிழ்ந்த அடியார் ஒருவர்,

" ஆடவர்கள் எவ்வாறு
  அகன்றொழிவார், வெஃகாவும்
பாடகமும் ஊரகமும்
  பஞ்சரமா — நீடியமால்







நின்றான் இருந்தான்
கிடந்தான் இதுவன்றே
மன்னர் மதிற்கச்சி மாண்பு"

என்று வியந்து பாடினார்.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு தென்னாட்டை ஆண்டனர் பல்லவ மன்னர்கள். அன்னார் ஆட்சி புரிந்த போது கச்சிமாநகரம் உச்ச நிலை அடைந்தது. கலைமகளும் திருமகளும் அங்கு கலந்து உறைவாராயினர். இக் காட்சியைக் கண்ட திருநாவுக்கரசர் "கல்வியே கரையிலாத காஞ்சி மாநகரம்" என்று கட்டுரைத்தார். வள்ளன்மை வாய்ந்த தென்னியர் அத் திருநகரில் வாழ்பவர் என்று புகழ்ந்துரைத்தார் சம்பந்தர்.

செல்வம் நிறைந்த அத் தலைநகரில் திருக்கோயில்கள் பல எழுந்தன. கயிலாச நாதருக்கு ஒரு கற்கோயில் கட்டினான் ராஜசிம்மன் என்னும் பல்லவ மன்னன்.

"காடவர் கோமான் கச்சிக்
கற்றளி எடுத்து முற்ற
மாடெல்லாம் சிவனுக் காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்"

[காடவர்-பல்லவர், கற்றளி-கற்கோயில், மாடு-செல்வம்]

என்று திருத்தொண்டர் புராணம் தெரிவிக்கின்றது. கயிலாய மலையில் இயற்கையாக அமைந்துள்ள திருக் கோயிலின் அமைப்பும் அங்கமும் காடவர்கோன் எடுத்த கற்கோயிலில் காணப்படுகின்றன என்று அறிந்தோர் கூறுவர்.

பரமேசுரன் என்னும் பெயருடைய பல்லவ அரசன் கச்சியம்பதியில் திருமாலுக்கு ஓர் ஆலயம் எடுத்தான்; பரமேச்சுர விண்ணகரம் என்று அதற்குப் பெயர் இட்டான். அம்மன்னன் காலத்தில் வாழ்ந்த திரு மங்கை ஆழ்வார் பரமேச்சுர விண்ணகரத்தைப் பாடியருளினார்.

"வெண்குடை நீழல்செங் கோல்நடப்பவிடை
வெல்கொடி வேற்படை முன்உயர்த்த
பண்புடைப் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே"

என்பது அவர் பாடிய திருப்பாசுரம். இப்போது வைகுண்டப் பெருமாள் கோயில் என்று அவ்விண்ணகரம் வழங்கப் பெறுகின்றது. இவ்வாறு பல்லவ மன்னர் பல்லாற்றானும் காஞ்சிபுரத்தைப் பேணி வளர்த்தமையாலேயே "பாரூர், பல்லவனூர், மதிற் காஞ்சி மாநகர்" என்று தேவாரம் பாடிற்று.

டூமெக்ஸ்

பால் உணவு

எளிதில் கரையக்

கூடியதா?

ஆமாம். டூமெக்ஸ் பால் உணவு சுலப
மாக எளிதில் தண்ணீரில் கட்டிதட்டாமல்
கரைவதை நீங்களே காணலாம்.
ஏனெனில் இது வெகு சன்னமான
பவுடராக தயாரிக்கப்பட்டிருப்பதால்
உங்கள் குழந்தை இதை வெகு சுலபமாக
ஜீரணித்துக்கொள்ளும். இதனால்
குழந்தையின் வயிற்றில் புளிப்பு தட்டு
வதில்லை. குழந்தையும் டூமெக்ஸ் பால்
உணவை சாப்பிடுவதில் பிடிவாதமின்றி
விரும்பி சாப்பிடுகிறது.

டூமெக்ஸ்
பால் உணவு

உங்கள் குழந்தைகளுக்கு டூமெக்ஸ் பால் உணவைக்
கொடுத்து அவர்களது வளர்ச்சியைக் கவனியுங்கள்



அத்தியாயம் 43

தந்தையின் அன்பு

நாம் சில சமயம் ரொம்ப எதிர்பார்க்கும் விஷயங்கள் பெருத்த ஏமாற்றமாக முடிகின்றன. அதிலும் எங்கே நாம் எதிர்பார்த்தபடி கண்டிப்பாய் நடக்குமென்றுதோன்றுகிறதோ, அங்குதான் ஏமாற்றமும் அதிகமாக ஏற்படுகிறது.

அதேமாதிரி நாம் சிறிதும் எதிர்பாராத சில காரியங்கள், திடீரென்று நடக்கின்றன. சில சமயம் நடக்கும் காரியங்களைப் பின்னால் யோசித்துப் பார்த்தால் நிஜம் மாதிரியே இருக்காது.

அன்று ஈசுவரமூர்த்தியின் வீட்டில் நான் தன்னந் தனியாக நின்று "அம்பிகே! பராசக்தி" என்று கூப்பிட்டேனே தவிர உள்ளத்தின் அடிவாரத்தில் யாரும் எனனைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பிக்கையில்லை. ஆற்றில் முழுகும் தருணத்தில் இருப்பவன் துரும்பைப் பிடித்துக் கொண்டு, கரையேறுவதற்கு நினைப்பது போல் தான் "அம்பிகே, பராசக்தி" என்று கூப்பிட்டேன்.

நான் கண்களைத் திறந்தபோது என்னால் அதை நம்பக்கூட முடியவில்லை. அம்பிகையே ஒரு மனித உருவில் என்னைக் காப்பாற்ற வந்திருக்கிறான் என்று தோன்றியது. அந்தச் சமயத்தில் என்னை அவர் காப்பாற்றியிருக்கா விட்டால் என்னென்ன நடந்திருக்குமோ? யார் கண்டது?

நான் செயலிழந்து திக் பிரமை அடைந்து நின்று கொண்டிருக்கும் போதே, அவர்கள் ஒருவரையொருவர் குத்திக் கொண்டார்கள். உதைத்துக் கொண்டார்கள்.

சண்டை போட்டுக்கொண்டே அந்தப் புதிய மனிதர், "நீ போய் வாசலில் நிற்கும் சாம்பல் நிறக் காரில் ஏறிக் கொள். உன்னை வீட்டில் சேர்த்து விடும்" என்றார்.

மணியம்

நான் ஒரே தாவலில் ஓடிச் சென்று வாசலில் நின்ற சாம்பல் நிறக் காரில் ஏறிக் கொண்டேன். ஏறும்போதே வாசலில் வேறு இருவர் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். கார் உடனே புறப்பட்டது. அதன் பிறகு தான் எனக்கு நான் செய்த காரியத்தைப் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டது. 'அந்தப் புதிய மனிதர் யாராக இருக்கும்? ஐயையோ! இந்தக் காரும் இவ்வளவு வேகமாகப் போகிறதே. நான் செய்தது சரிதானா? அம்பிகே! தேவி! நான் காரின் கதவைத்திறந்து குதித்து விடுகிறேன். உயிர்போய் விடட்டும்!' என்று நினைத்துக் கொண்டே கதவைத் திறக்க முயன்றேன். 'கடக்' என்று சத்தம் கேட்டதும் காரின் வேகம் குறைந்தது.

"அம்மா! தங்களைப் பத்திரமாக வீடு சேர்க்கும்படி 'பகத்சிங்' கட்டளை இட்டிருக்கிறார். தயவுசெய்து தைரியமாக இருங்கள். நான் உங்களை மிக ஜாக்கிரதையாக வீட்டில் சேர்த்து விட்டுத் திரும்பி அவருக்கு உதவி செய்ய வர வேண்டும். அவரை இங்கு விட்டுப் போக எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது" என்றார் வண்டி ஓட்டிக் கொண்டிருந்தவர்.



"பகத் சிங்கா?"

"ஆமாம்! அம்மா! தாங்கள் கவலைப் படாதீர்கள். அவருக்கும் ஒன்றும் ஆபத்து வராது."

என் நெஞ்சம் இப்போது ஆனந்தத்தால் விம்மியது. துயரக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறிற்று. என்னைக் கவனிக்கவும் ஒருவர் இந்த உலகத்தில் இருக்கிறார். என் தந்தை என்னைக் காப்பாற்றச் சமயத்தில் வந்தாரா? என்ன அதிசயம்! கடவுளே அவரை அனுப்பி யிருக்கிறார். ஆனால் அவருக்கு எப்படி இந்த விஷயம் தெரிந்தது என்று நினைத்தவாறே, "உங்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரிந்தது?" என்று வியப்புடன் கேட்டேன்.

"இரவு பகலாக அவர் உங்களைக் கவனித்து வந்தபடியால் தெரிந்தது. அதற்கு மேல் ஒன்றும் கேட்காதீர்கள். சொல்ல எனக்கு உத்தரவு இல்லை" என்று கூறி விட்டுக் காரின் வேகத்தை அதிகரித்தார் வண்டி ஓட்டியவர்.

மனம் நிம்மதியடைந்தது. எப்படிப் பட்ட இக்கட்டான நிலையிலிருந்து தப்பினோம். ஆகா! ராஜாராம் கூறியது உண்மை! என் அருமைத் தந்தை என்னைக் கண்ணும் கருத்துமாக நான்

காணமலேயே கவனித்து வருகிருர். இது அல்லவா அன்பு? அவரைப் போய், நான் அன்பில்லாதவர், கல் நெஞ்சர் என்றெல்லாம் நினைத்தேனே! என்ன மதியீனம்? இந்தச் சமயத்தில் அவர் வந்து காப்பாற்றியிரா விட்டால் சனீசுவரமூர்த்தி என்னைப் பேச்சினலேயே சித்திரவதை செய்திருப்பான். மகாபாவி! ரங்கதுரையைக் கொன்று விடுவேன், நீ சம்மதிக்கா விட்டால், என்று சொல்லியிருந்தால் என் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? நான் என்ன செய்திருக்க முடியும்? ஆனல் எப்படி அப்பா உள்ளே வந்தார்? அவசரத்தில் அந்த சனீசுவரன் கதவைச் சாத்தித் தாளிடவில்லை போல் இருக்கிறது. அம்பிகைதான் அவனுக்கு அப்படிச் செய்யத் தோன்ருமலிருக்கும்படி செய்து விட்டாள். இவ்வாறெல்லாம் எண்ண மிட்டேன்.

வீடு வந்தது. காரிலிருந்து இறங்கியதும் வண்டி ஓட்டியவரைப் பார்த்து, "நான் அவரை ஒருமுறை பார்க்க விரும்புவதாகச் சொல்லுங்கள்" என்று கூறினேன்.

"சரி" என்ருர் அவர். வண்டி வெகு வேகமாகத் திரும்பிப் பறந்தது. நான் ஓடிச் சென்று வீட்டினுள் புகுந்தேன். கார் வந்த சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தார் வள்ளியின் பாட்டி. "ஏம்மா! இத்தனை நேரம் எங்கே போயிருந்தே? அந்த ராஜாராம் இங்கே வந்து உன்னைத் தேடிவிட்டு மறுபடியும் ஸ்டுடியோவுக்குப் போய் இருக்காரே" என்ருர்.

எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அப்படியே உட்கார்ந்து விம்மி விம்மி அழுதேன். அவர் பயந்து போனர். "ராத்திரி வேளையிலே தனியாக வந்திருக்கே. ஏதோ முனி இனி பயங்காட்டி யிருக்கு. திருஷ்டி தோஷம் பட்டிருக்கும். உன்னைப் பார்த்து எத்தனை பேர் வயிற்றெரிச்சல் கொட்டிக் கொள்கிருர்களோ? உள்ளே வா. சாம்பிராணி போடறேன்" என்று ஆதரவுடன் கைகளைப் பிடித்துத் தூக்கினர். மாடியில் என்னைக் கொண்டு படுக்க வைத்து விட்டு, மறுபடியும் கீழே சென்று நெருப்பும் சாம்பிராணியும் கொண்டு வந்துபோட்டுக் கட்டிலுக்கு அடியில் வைத்தார். பிறகு விபூதி நெற்றியில் இட்டுவிட்டு, "நமசிவாய, நமசிவாய" என்று சொல்லிக் கொண்டே அவரும் படுத்துக் கொண்டார்.

பத்து நிமிடங்களில் நித்திராதேவி தன் அன்புக் கரங்களால் என்னைத் தழுவிக் கொண்டு ஆதரவளித்தாள்.

அத்தியாயம் 43

சோர்வு கொள்ளாதே மனமே!

மறு நாள் எழுந்த போது முதல் நாள் நடந்ததெல்லாம் கனவா நினைவா என்று சந்தேகமாக இருந்தது. நான் நடிக்கும் படங்களில் கூட இப்படி ஒரு விந்தை நடப்பதில்லையே? என் வாழ்க்கையும் என் அன்னையின் வாழ்க்கையும் மட்டும் ஏன் இப்படிப் பல சோதனைகளும் விந்தைகளும் நிறைந்தவையாக இருக்கின்றன?

ஆனல் கதைகளிலும், சினிமாக்களிலும் மட்டும் வாழ்க்கையில் இல்லாததையா சித்திரித்து விடுகிருர்கள்? சில சம்பவங்கள் மிகைப்படுத்திக் காட்டப்படுகின்றனவே தவிர மற்றப்படி எல்லாம் வாழ்க்கையோடு ஒட்டி வரும் உண்மைச் சம்பவம்தானே?

எழுந்த உடனே ராஜாராமைத் தேடிச் சென்றேன். முதல் நாள் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவரிடம் கூறி முடித்தேன்.

ராஜாராம் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

"நான் சீக்கிரம் வந்திருந்தால் இப்படியொன்றும் நடந்திருக்காது. என்ன முட்டாள்தனம் செய்து விட்டேன்? நல்ல வேளையாக உன் தந்தை உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிருர். என்ன ஆச்சரியம்! முன்பு சென்னை வந்தபோதே அவர் முன் ஜாக்கிரதையாக உனக்கு ஈசுவர மூர்த்தியால் அபாயம் நேரலாம் என்று சந்தேகித்து உன்னை எப்போதும் தொடர்ந்து வந்திருக்கிருர். அப்போது அதை நாம் சந்தேகித்தோம். நேற்று எவனே ஓட்டிய காரில் துளிக்கூடச் சந்தேகமில்லாமல் நீ

ஏறிப் போயிருக்கிறாய்! இவ்வளவு அஜாக்கிரதையாகவா இருப்பது? வண்டியை ஓட்டுவது யாரென்று கவனித்து விட்டு ஏற வேண்டாமா?"

"டைரக்டர் ஸ்ரீகாந்தனும் என்னோடு பேசிக் கொண்டே கார் வரையில் வந்தார். அவரும் கவனிக்கவில்லை. காரிலும் எனக்கு ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை. மேலும் ரொம்பக் களைத்துப் போயிருந்தேன். அத்தனை நேரம் ஒரே வெளிச்சத்தில் இருந்தபடியால் கண்களும் சரியாகத் தெரியவில்லை. டிரைவர் கதவைத் திறந்து நான் ஏறிய பிறகு சாத்தி விட்டுத் தான் வண்டியில் ஏறினான். எனக்குச் சிறிதேனும் சந்தேகம் அதைப்பற்றி எழுந்தால்தானே?"

"ஆமாம்! சங்கர் எங்கே?" என்று கேட்டார் ராஜாராம்.

"எங்கேயாவது போயிருப்பார். இப்போது அவரைப் பற்றி நமக்கு என்ன கவலை வந்தது?"

"அப்படிச் சொல்லாதே. கவலை இருக்கிறது. நீ சொல்வதைப் பார்த்தால் இந்த விஷயங்கள் மிகவும் முன்னேற்பாடாக நடந்திருப்பதைபோலத் தோன்றுகிறது. இதற்கு யாரேனும் உன் நடவடிக்கைகளைப் பற்றி உளவு சொல்லியிருக்க வேண்டும். சங்கர் இங்கு வந்து இறங்கிய போதே நான் சற்று சந்தேகப் பட்டேன். ஆனால் அவன் இப்படிச் செய்வானென்று அப்பொழுது நினைக்கவில்லை."

"அதெப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?"

"நேற்று மாலை என்னிடம் பேசிக் கொண்டிருந்தான். தனக்கு ஒன்றும் காரியசித்தியாக வில்லை என்றும் ஊருக்குப் போக வேண்டியது தான் என்றும் குறைப்பட்டுக் கொண்டான். பிறகு 'சினிமா பார்க்க வருகிறீர்களா?' என்று என்னைக் கேட்டான். நான் முட்டாள் தனமாக, 'இன்று எனக்கு ரொம்பக் காரியம் இருக்கிறது. வருவதற்கு ரொம்ப நேரமாகும். இரவுகூடப் போக முடியாது' என்று சொன்னேன். 'அப்படியா? அமர தாராவையும், உங்களையும் இன்று படத்துக்கு அழைத்துப் போகலாம் என்று நினைத்திருந்தேன்' என்றான். 'இன்று வர அவளுக்கும் முடியாது. ஷூட்டிங் முடிய ஒன்பது மணி ஆகுமே?' என்றேன். இதையெல்லாம் சுலபமாகத் தெரிந்து கொண்டு போய் அவன்தான் உளவு சொல்லியிருக்கிறான். இவ்வளவு சுலபமாக நான் ஏமாந்து போய் விட்டேனே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்றார் ராஜாராம்.

எனக்கும் அப்படித்தான் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இல்லா விட்டால் இவ்வளவு ஏற்பாடாகச் செய்து விட முடியுமா?

"ஆமாம்! ஸ்டுடியோவில் எப்படிச் சந்தேகமில்லாமல் புதிய கார் நுழைந்தது? ஸ்டுடியோ காரை ஸ்ரீகாந்தன் எடுக்கச் சொன்ன போது இந்தக் கார் எப்படி அங்கே வந்து நின்றது?" என்று கேட்டேன்.

"ஏன் இந்து! ஸ்டுடியோவுக்குத் தினமும் நூறு கார்கள் வருகின்றன. எந்தக் கார் வருகிறது என்று யார் கவனிக்கிறார்கள்? வெகு நேரத்துக்கு முன்பாகவே காரை வாசலில் நிறுத்தியிருப்பான். ஸ்ரீகாந்தன் ஆள் அனுப்பியபோது இந்தக் காரைப் பார்த்து விட்டுக் கார் தயாராக இருக்கிறதென்று சொல்லியிருப்பான். அல்லது அவனிடம் எதையாவது கொடுத்து அழுக்கியிருப்பார்கள். ஈசுவர மூர்த்திக்கு இதெல்லாம் என்ன பிரமாதம்? இருந்தாலும் இந்தச் சங்கர் இங்கே இனிமேல் வந்தால் காலை ஒடித்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்கப்போகிறேன்" என்று அளவற்ற கோபத்துடன் கூறினார்.

"இப்படியெல்லாம் ஒன்றும் செய்து வைக்காதீர்கள். மேலும் ஈசுவர மூர்த்தியின் துவேஷம் வளரும்."







'அனஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளது.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினா : ஜுரத்தடுப்பு குணமும், பலவீருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெறவெப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.





லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

"இனிமேல் வளர்வதற்கே இடமில்லையே. நேற்று நீ தப்பி வந்ததன் பிறகு அவருடைய குரோதம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும். இனிமேல் நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கொஞ்ச நாட்களுக்கு நான் கூட ரங்கதுரையைத் தேடாமல் இருப்பது நல்லது. ரங்கதுரையைத் தேடுகிறோமா, இல்லையா என்று ஈசுவரமூர்த்தி கவனித்துக் கொண்டே இருக்கலாம். நான் சந்தித்தால் கூட அவருடைய ஆத்திரம் கிளம்பி விடும். நீ இனிமேல் நான், கவுண்டர் இருவரும் வந்தால் தான் வெளியில் கிளம்பலாம்" என்று எச்சரித்தார் ராஜாராம்.

அதற்குப் பிறகு நான் மிக ஜாக்கிரதையாக இருந்து வந்தேன்.

என்னை அங்கு வந்து சமயத்தில் காப்பாற்றிய என் அன்புத் தந்தையை மட்டும் பார்த்துப் பேசாமல் போய் விட்டோமே என்று வருத்தமாக இருந்தது. அப்போது அவர் தான் என்று தெரிந்திருந்தால் சரியாகப் பார்க்கவாவது செய்திருப்பேனே? அந்தச் சமயத்தில் எப்படியாவது வெளியில் ஓடி விட்டால் போதுமென்று தான் தோன்றியதே தவிர யார் நமக்கு உதவி செய்கிறார்கள் என்று கூடச் சிந்தித்துப் பார்க்கத் தோன்றவில்லை.



அவர் எப்படி யிருப்பார்? புகைப் படத்தில் இருப்பது போலவே இருப்பாரா? அல்லது ரொம்ப மாறிப் போயிருப்பாரா? அவரைப் பற்றிப் படம் கூட எடுக்கப் போகிறார்கள். ஆனால் அவர் எப்படி இருப்பார் என்று கூட எனக்குத் தெரியாது. என் வாழ்க்கைதான் எவ்வளவு விநோதமானது?

என்ன துர்ப்பாக்கியமான சம்பவம்? இப்போது நான் சென்னைக்கு வந்தும் பயனில்லாமல் அல்லவா போய் விட்டது? ஈசுவரமூர்த்தியிடம் சிக்கிக் கொண்டதிலிருந்து தப்பித்த போதிலும் ரங்கதுரையைத் தேட முடியாமல் போய் விட்டதே. வீட்டில் அடைந்து கிடக்கவும் முடியவில்லை. எங்கும் போகவும் முடியவில்லையே. ரங்கதுரை எங்காவது கண்ணில் படமாட்டாரா என்று ஆவலாக இருக்கிறது. 'ஆனால் பட்டும் தான் என்ன பயன்? அவருடன் பேசினால் தான் அந்தப் பாவி......சிவ சிவா! இது நினைவு வரும் போது ஏன் இப்படி உடம்பெல்லாம் நடுங்குகிறது? கடவுளே! கடைசியில் இதற்குத்தானா நான் பெண்ணாய்ப் பிறந்தேன்? வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்தது போல் இது என்ன பாவம்? அவரைக் கண்டு பிடித்து விடுவோம் என்ற நம்பிக்கையோடு நான் சென்னைக்கு வந்தேனே. இப்போது இப்படியாகி விட்டதே. ஆனால் இந்த ஈசுவரமூர்த்தி மட்டும் அப்படியே சிரஞ்சீவியாக இருந்து விடப் போகிறாரோ!' இப்படி மனம் புண்ணாயிற்று. நெஞ்சு நொந்ததே தவிர வழி எதுவும் புலப்பட வில்லை. படம் முடியாதா என்று ஆகி விட்டது.

இந்தப் படம் முக்கால்வாசி முடிவடைந்து விட்டது. அதற்குள் கோவையிலிருந்து நான் எழுதிய கதையை ஆரம்பிப்பதற்கு நாள் குறிப்பிட்டு எழுதி யிருந்தார் டைரக்டர் பாஸ்கரன். அதற்காகக் கோவைக்

குச் சென்றேன். அதன் பிறகு நான்கு மாதங்கள் இரண்டு படங்களில் நடிக்க வேண்டி யிருந்தது. சென்னையில் ஸ்ரீகாந்தன் எடுத்த படம் முடி வடைந்த பிறகு தான் எனக்கு மூச்சு விட நேரம் கிடைத்தது. அந்த நான்கு மாதத்தில் சென்னைக்கும், கோவைக் கும் சுமார் இருபது தடவைகள் போய் விட்டு வந்தேன்.

ஸ்ரீகாந்தன் எடுத்த படம் மறுபடி யும் அமோகமான வெற்றி பெற்றது. மறுபடியும் பத்திரிகைகளெல்லாம் அமரதாரர்வைப் பற்றிப் புகழ்ந்து எழுதின. எனக்கு அவைகளைப் பார்த்த போது ஒரே கசப்பாக இருந்தது.

அந்தப் படத்துக்காக ஐம்பதினாயி ரம் ரூபாய் கொடுத்தார்கள். ராஜா ராம் ஒரு யோசனை சொன்னார். அந்தப் பணத்தைக் கொண்டு சென்னையில் ஒரு வீடு வாங்கி விடலாமென்றார். நான் வேண்டாமென்றேன். கவுண்ட ரும் ராஜாராம் கட்சி பேசினார்.

"ஒரு வீடு உன் பெயரில் இருந்தால் நல்லது தானே அம்மா? அதை யாரா லும் மோசம் செய்ய முடியாது. உனக் கும் சென்னைக்குப் போனால் தங்கச் சௌகரியமாகச் சொந்த வீடு இருக் கும். அப்படி உனக்கு வேண்டா மென்றாலும் வாடகை நிரந்தரமாக வரும்" என்றார் கவுண்டர்.

எனக்கும் உண்மை என்று பட்டது. நான் வெகு நாட்கள் நடிக்கப் போவ தில்லை. ரங்கதுரையை இனிமேல் நான் மணந்து கொண்டு ஆனந்த மய மான வாழ்க்கை நடத்தப் போவ தில்லை. ஈசுவரமூர்த்திதான் நான் அவரைச் சந்தித்தால்என்னைப் போலீ ஸில் பிடித்துக் கொடுத்து விடுவதாகச் சொல்லி யிருக்கிறார். ஆகையால் நான் ரங்கதுரையைச் சந்திக்காமலிருப்பதே நல்லது. அவருக்கு, நான் அவரை நினைத்துக் கொண்டு உருகுவது தெரிய வேண்டாம். அவருடைய வாழ்க்கை யும் அதனால் பாதிக்கப்படும். அவர் சுலோசனாவையே மணந்து கொண்டு சௌக்கியமாக இருக்கட்டும்.

நான் படங்களில் நடிப்பதை நிறுத் திய பிறகு கவுண்டருடன் வீரத்தான் பட்டிக்குப் போய் இருந்து விடலாம் என்று எண்ணினேன். அப்போது ஒரு வீடு எனக்குச் சொந்தமாக இருந் தால் ஏதோ வாடகை வரும். அதை வைத்துக் கொண்டு காலம் கடத்தி விடலாம் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு வீடு வாங்கச் சம்மதித்தேன்.

ராஜாராம் நினைத்ததை உடனே செய்து முடிப்பவராயிற்றே. நான் சம்மதித்த மறுநாளே சென்னைக்குச் சென்று ஒரு நல்ல வீட்டை விலை பேசி முடித்து விட்டார். வீடு இந்து மதி என்னும் பெயரில் பதிவு செய்யப் பட்டது. அதனால் ஏற்பட்ட சம்பவங் கள் நிஜமாகவே ஆச்சரியமானவை.

என் அன்னை சந்திரமணியின் கதை திரைப் படத்தில் உருவாகி வந்தது. ராஜாராமின் உத்தியோகம் இப் போது உயர்ந்தது. அவருக்கு வெற்றி வேல் ப்ரொடக்ஷன்ஸில் இந்தப் படத்துக்காக உதவி டைரக்டர் வேலை கிடைத்தது. ராஜாராம் மிகத் திறமை யுடன் தம் காரியத்தைச் செய்து வந் தார். உண்மையில் இந்தக் கதையை டைரக்ட் செய்தது அவர்தான் என்று சொல்ல வேண்டும்.

என் அன்னையின் பாகத்தை ஏற்று நான் மிகவும் சிரமப்பட்டு நடித்தேன். காசிலிங்கத்தின் பாகத்தை ஏற்று நடிக்கக் கூடியவராக ஒரு புதிய நடி கரைத் தேடிப் பிடித்திருந்தார்கள். அவர் ஏற்கெனவே ஒரு சர்க்கஸ் கம்பெனியில் வேலையாக இருந்தவ ராம். அவரைப் பற்றி எனக்கு அவ் வளவாகத் திருப்தி யில்லை. வித்தை யெல்லாம் பிரமாதமாகச் செய்தார். ஆனால் நடிப்பு விஷயம் அவ்வளவாகத் தெரிய வில்லை. ஆனாலும் பரவா யில்லை என்று சொல்லுமளவுக்குப் போகப் போக அவர் நடிப்பில் விருத்தி செய்து கொண்டார்.

என் அன்னையின் பாகத்தை ஏற்று நடிப்பதில் எனக்கு மிகுந்த ஆறுதல் கிடைத்தது. அவளுக்கு நான் ஒருவித சிசுருஷையும் செய்ததில்லை. அவள் திடீரென்று இறந்து போனதால் எனக்கு அவளுக்குச் சேவை செய்யும் பாக்கியம் கிடைக்கவே இல்லை. அதை நினைத்துப் பல சமயம் நான் வருந்திய துண்டு. 'சில நாட்கள் படுத்துக் கொண்டாவது இருந்திருந்தால் அவ ளுக்குச் சேவை செய்யும் பாக்கிய மாவது கிடைத்திருக்குமே? நான் அன் போடு செய்வதைக் கண்டு அவள் மனம் மகிழ்ந்திருக்குமே? அதற்குக் கூட கொடுத்து வைக்காமல் போய்


SANFORIZED
இந்த லேபிளைக் கவனியுங்கள்

விட்டேனே' என்று நான் மனங் கசிந்து வருந்தியதுண்டு.

இப்போது அவளுடைய பாகத்தை ஏற்று நான் நடிப்பது, அவளுக்கு ஏதோ சேவை செய்வது போன்ற திருப்தியை எனக்கு அளித்தது.

படத்தில் அவள் பாடுவதாக ஒரு அழகிய பாடலை நான் பாட வேண்டி இருந்தது. காசிலிங்கம் அவளை விட்டுப் போன பிறகு அவள் மனமுருகிப் பாடுகிறாள். பிரிவுத் துன்பம் தாங்காமல் வேதனை சூழும் போதெல்லாம், உற்சாகப்படுத்திக் கொள்ள ஒரு பாடலை அவள் பாடுகிறாள். 'தேஷ்' ராகத்தில் அந்தப் பாடல் மனத்தை மிகவும் உருக்குவதாக அமைந் திருந்தது. மூன்று இடங்களில் இதே பாடலை அவள் பாடுவதாகப் படத்தில் காட்டுகிறார்கள்.

சோர்வு கொள்ளாதே மனமே—உன்
ஆர்வ மெல்லாம் ஒருநாள் பூரணமாகும்.

காரிருள் சூழ்ந்த நீளிரவின் பின்
காலை மலர்தல் கண்டலை அன்றோ ?
தாரணி உயிர்க்கும் தாமரை சிரிக்கும்.
அளிகுலம் களிக்கும் அருணனும்உதிப்பான்.


அகத்திருள் நீங்கவும் அருளொளி ஓங்கவும்
அன்பு தழைக்கவும் துன்பங்கள் தீர்க்கவும்
அம்பிகை பாலன் வள்ளி மணாளன்
அன்புடன் வருவான் இன்னருள் புரிவான்.

படம் வெளியான பிறகு இந்தப் பாடல் தெருவுக்குத் தெரு முழங்கியது. அந்தப் பாடலை நான் பாடி நடித்தபோதெல்லாம் என் மனம் சில சமயம் மிகவும் சோர்ந்து போயிற்று. சில சமயம் அதிக உற்சாகம் கொண்டு விடப் பார்த்தது.

'என் அன்னையின் தாபம் நிராசையிலேயே அவள் இறந்து போனதுபோல் நானும் என் ஆவல் நிராசையிலேயே அல்லவா இறந்து போக நேரும்போல் இருக்கிறது? அவளுடைய வாழ்க்கையைக் கதையாக எழுதி அதிலாவது அவள் மனோரதத்தைப் பூர்த்தி செய்ய அவளுக்கு ஒரு மகள் இருக்கிறாள். ஆனால் எனக்கு யார் இருக்கிறார்கள்?' என்றுசோர்ந்துபோவேன்.

சிலசமயம், 'உலகத்தில் எத்தனையோ ஆச்சரியமான காரியங்கள் நடக்கின்றன. ஒரு நாள் ஏதேனும் ஒரு அற்புதம் நிகழலாம். அதன் மூலம் நானும் ரங்கதுரையும் ஒன்று சேரும் காலம் வரலாம். ஆனால் அதற்குள் அவர் சுலோசனாவை மணந்து கொண்டு விட்டால்? ... ராஜாராம் என்னமோ அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறார், ரங்கதுரை மற்றவர்களைக் கண்களால்கூடப் பார்க்க மாட்டாரென்று. ஆனால் அப்படி மணந்து கொண்டால் கொள்ளட்டுமே. அவரைப் பார்த்துப்பேசும் பாக்கியமாவது கிடைக்கும். அது போதுமே' என்று உற்சாகப்படுத்திக் கொள்வேன்.

ஏதோ ஒரு அற்புதத்தால் நான் ரங்கதுரையுடன் ஒன்று சேர முடியலாம் என்ற நூலிழை போன்ற ஒரு நம்பிக்கையினால் என்னால் உயிர் வாழ்வதைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள முடிந்தது. (தொடரும்)



தமிழ் நாட்டின் பிரபலமான மோட்டார் தொழில் ஸ்தாபனமான டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ் மோட்டார் கம்பெனியின் தலைவர் திரு டி. வி. சுந்தரம் ஐயங்கார் பௌத்திரியும், திரு டி. எஸ். துரைசாமியின் புதல்வியுமான செல்வி வத்ஸலாவுக்கும், ஓய்வு பெற்ற மராமத்து இலாகா தலைமை இன்ஜினியர் திரு ஏ. ஆர். வெங்கடாச்சாரி அவர்களின் குமாரன் செல்வன் ஏ. வி. ராமன் (பி. ஈ. ஆனர்ஸ்) அவர்களுக்கும் ஜூலை பதினோராந் தேதி சென்னை ஆழ்வார்பேட்டையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின் போது நண்பர்களும், உறவினர்களும், பிரமுகர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு நல்ஆசி கூறி வாழ்த்தினர். அன்று மாலை நடந்த வரவேற்பு வைபவத்துக்கும், அதையொட்டி நிகழ்ந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரிக்கும் சென்னை நகரப் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் எல்லோரும் வந்திருந்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்! வாழ்க பல்லாண்டு!



குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்

ரம்மிய மணம் கொண்ட ப்ரோடெக்ஸ் உயர்ந்தரக சர்வ பிரயோக வாசனைப் பௌடர்; மிக மிகக் குறைந்த விலையில் மிக மிகப் பெரிய டப்பா! இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ப்ரோடெக்ஸ் டால்கம் பௌடரைவிரும்புகின்றன—அதன் வசீகரமான வாசனையினாலும் எல்லாவற்றிற்கும் உபயோகப்படும் பரிமள டால்கம் பௌடர் என்பதனாலும்......

இன்று ப்ரோடெக்ஸ் உபயோகித்தீர்களா?

குணம் உத்தரவாதம்
கால்கேட் பாமாலிவ்
அளிக்கிறது




ப்ரோடெக்ஸ்

சர்வப்பிரயோக

வாசனைப்பௌடர்

PTP/6/3



மழையிலும் வெய்யிலிலும்

உங்களுக்குப் பாதுகாப்பளிப்பது

Firestone

பயர்ஸ்டோன்

அவைகள்

சூபர் கம்-டிப்பிடு டயர்கள்



பாதுகாப்பு! சூபர் கம்-டிப்பிங் முறையினால் மிக்க உறுதி பெற்ற டயர்கள் வெடிப்புகள் ஏற்படாமல் தடுத்து அதிக பாதுகாப்பு அளிக்கிறது.

சறுக்காது! பயர்ஸ்டோன் டயரில் அமைக்கப்பட்டுள்ள சறுக்குதலைத் தடுக்கும் 5620 வளைவுகள், மிகுந்த பாதுகாப்பு அளிப்பதுடன் துரிதமாகவும் ஜாக்கிரதையாகவும் வண்டியை நிறுத்த உதவுகிறது.

நீங்கள் பயர்ஸ்டோனையே சிறந்ததாகக் கருதி வாங்குவதற்குக் காரணம் அதன் நீடித்த உழைப்பும் மிகுந்த பாதுகாப்புமே.

இன்று சிறந்தது—நாளை இதைவிடச் சிறந்தோங்குவது

ஞாபகமிருக்கட்டும்! ஒவ்வொரு புது டயருக்கும் ஒரு புது பயர்ஸ்டோன் டியூபும் தேவை!



ஒன்று கோல்

சா. அ. ராமன்

கோயமுத்தூர் ஜங்ஷனில் 'கொச்சி எக்ஸ்பிரஸ்' வந்து நின்றபோது இரவு மணி பத்தாகி விட்டது. வழக்கமாக ஒன்பதரை மணிக்கு வரவேண்டிய வண்டி அன்று ஏனோ அரை மணி நேரம் தாமதமாகவே வந்தது.

அந்த வண்டியில்தான் நான் கொச்சியி லிருந்து சென்னைக்குப் போய்க் கொண்டிருந் தேன். ஏற்கெனவே நீண்ட தூரம் பிரயாணம் செய்திருந்ததால், உடல் முழுதும் சொல்ல முடியாத சோர்வு ஏற்பட்டிருந்தது. சோர்ந் திருந்த உடலுக்குச் சற்றுத் தெம்பு உண்டாவ தற்காகச் சூடாக ஒரு கப் காப்பி தருவித்துச் சாப்பிட்டேன்.

ஜன்னலோரமாக அமர்ந்தவன் பிளாட் பாரத்தில் அங்கும் இங்கும் போய்க் கொண் டிருந்த பலதரப்பட்ட ஜனங்களின் கலகலப் பைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

"கார்டு" ஊதலை ஊதிப் பச்சை விளக்கைக் காட்டினார். நான் ஜன்னலை மூடினேன். மேல் பலகையில் விரிக்கப்பட்டிருந்த என் படுக்கை யில் உடல் ஆயாசம் தீரக் கால் நீட்டிப் படுத் தேன். அது இரண்டாம் வகுப்புப் பெட்டி. என்னைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை.

என்ஜின் ஒரு முறை 'ஊ'காரமிட்டு இரைந் தது. பிறகு 'உஸ்ஸ்' என்று நாராசமாகப் பெருமூச்சு விட்ட வண்ணம் புகையைக் கக்கிக் கொண்டு நகர ஆரம்பித்தது.

அப்போதுதான் இரண்டு பேர் என்னுடைய பெட்டியில் அவசரம் அவசரமாக ஏறினர்.

ரயில் விளக்கின் மங்கலான ஒளியில் அவர்கள் முகத்தைத் தெளிவாக என்னால் பார்க்க முடியவில்லை. இரண்டுபேரும் கிட்டத்தட்ட ஒரே வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் என் பது அவர்களுடைய பேச்சிலிருந்து தெரிந்தது.

இரண்டு பேரும் காலியாக இருந்த இரண்டு பலகையிலும் அவரவர் படுக்கையை விரித்துக் கொண்டு படுத்தனர்.

சட்டென்று யாரோ விம்மும் சப்தம் கேட்டது. திடுக்கிட்டேன். எனக்குக் கீழ்ப் பலகையில் படுத்திருந்த இளைஞனிடமிருந்து தான் சப்தம் வந்தது. என்னால் அவனைச் சரி யாகப் பார்க்க முடியவில்லை.

எதிர்ப் பலகையில் படுத்திருந்த இளைஞன் இப்போது விழித்துக் கொண்டு, துக்கத்தால் விம்மிய தனது நண்பனைத் தேற்ற ஆரம்பித் தான். அவர்கள் பேச்சில் என் மனம் லயித்தது.

"அசடு மாதிரி இப்படி அழுகிறாயே, ராமு! எவ்வளவுதான் அழுதாலும், கஷ்டம் தீர்ந்து விடவா போகிறது!"

எனக்கு எதிர்ப் பலகையில் படுத்திருந்த இளைஞன் பேசியது இது.

ராமு என்று அழைக்கப்பட்ட இளைஞன் இதற்குப் பதில் சொல்லவில்லை. அவனிட மிருந்து மீண்டும் சொல்ல முடியாத ஒரு வேதனையின் விம்மல்தான் வெளி வந்தது.

"ராமு! நான் சொல்வதைக் கேள். நாம் எவ்வளவுதான் முயன்றாலும், துக்கித்தாலும் காலம் வராமல் எதுவும் நடந்துவிடுமா! பாருவுக்கு இன்னும் வேளைவரவில்லை, ராமு!"

"வேளையாவது, மண்ணாங்கட்டியாவது! இதுவரை ஆயிரம் ஜாதகம் பார்த்தாகி விட் டது, சந்தானம். ஒரு வரனும் குதிரவில்லை. சொத்ஜியும், பத்ஜியும் இன்றுவிட்டுப் போகும் ஒவ்வொரு பிள்ளையும் 'பெண்ணுக்குக் கால் ஊனம், கால் ஊனம்' என்று திரும்பத் திரும்ப ரேடியோமாதிரி பாடிக்கொண்டே யிருந்தால், பாருவுக்கு என்றுதான் வேளை வரும்!"

அவனுடைய குரலில் துக்கம் இப்போது வெறியாக மாறியிருந்தது.

மீண்டும் அவன் பேசினான்.

"சந்தானம்! கூடிய சீக்கிரம் என்னுடைய வேதனைகளுக் கெல்லாம் ஒரு முழுக்குப் போட்டு விட்டுச் சந்நியாசியாகப் போய்விடப் போகிறேன்." — இந்தக் குரலில் மாற்ற முடி யாத பிடிவாதம் தொனித்தது.

"ஏன், ராமு! உன்னுடைய அண்ணனும் துறவியாகத்தானே போனான்!"

"அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள். எனக்கு அப்போது பன்னிரண்டு வயது. விவரம் ஒன்றும் தெரியாது. பின்னால் என் அன்னை சொல்லித்தான் அந்த விவரமெல் லாம் எனக்குத் தெரியும்."

"ஆமாம். அவனுக்கு ஏன் திடீரென்று புத்தி அப்படிப் போயிற்று!"

"அதுதான் இன்று வரை எனக்கும் தெரி யாது. சாகும் வரை என் அன்னையாலும் அறிய முடிய வில்லை. அவன் மாத்திரம் இன்று இருந்தால் நான் இவ்வளவு துயருக்கு உள் ளாகியிருப்பேனா! நான் குழந்தையாக இருந்த போது என்மீது அவன் உயிராக இருந்தானாம்."

தாளமுடியாத துக்கமும், ஏக்கமும் தொனித்தது அந்த இளைஞனின் குரலில். இதற்கு மேல் அவர்கள் பேச்சைக் கேட்க என் மனம் மறுத்தது. ஏனென்றால், அந்த இளைஞனின் ஏக்கம் என் இதயத்தில் பேரிரைச்சலுடன் எதிரொலித்தது. இலை மறைவு காய் மறைவாய்த் தெரிந்த அவன் துயரத்தை என்னால் இப்போது உணர முடிந்தது. என்னுள்ளே பனிக்கட்டியாக உறைந்திருந்த வேதனை சிறிது சிறிதாக உருகி வாழ்க்கையின் பயணக் கோட்டை நோக்கி ஓடிற்று.

வேடப்பட்டி கர்ணம் சிவராம அய்யரின் ஒரே அருமைப் பிள்ளையாகப் பன்னிரண்டு வயது வரை நான் வளர்ந்த பிறகுதான் எனக்கும் ஒரு அருமைத் தம்பி பிறந்தான். என்னுடைய பெற்றோருக்கு நாங்கள் இரண்டு பேர்தான் குழந்தைகளாக இருக்க முடிந்தது.

அப்பாவும் அம்மாவும் எங்கள் மீது அன்பைச் சொரிந்தார்கள். எனக்கோ என் ஒரே அருமைத் தம்பியிடம் உயிர்.

ஒரு குறைவும் இன்றிச் சீரும் சிறப்புமாக இருந்த குடும்பத்தின் மீது இடி விழுந்தாற் போல், என் தந்தை திடீரென்று காலமானார். அப்போதுதான் மெட்ரிகுலேஷன் பாஸ் செய்திருந்தேன். நிர்க்கதியாகிவிட்ட குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தேன். இங்கு கிடைத்த வருமானம் அன்னையையும், தம்பியையும் போஷிக்கப் போதுமானதாக இருந்தது.

நாட்கள் ஓடின. எனக்கு அப்போது வயது இருபத்திரண்டு. வாழ்க்கையின் ஆசாபாசங்கள் என்னுள்ளே புகுந்து, என்னை ஒரு இதயத்துக்கு அடிமையாக்கி யிருந்தன. எங்கள் தெருவிலேயே கடைசியில் குடியிருந்த ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அந்தப் பெண்!

இரட்டைப் பின்னலுடன், இளமை மிடுக்கும் துடிப்புமாக அவள் தெருவில் போய் வருவதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். அவள் மேனியின் மினுப்போ, கண்களின் அழகோ, அல்லது முகத்தின் குறுகுறுப்போ என்னவோ, ஏதோ ஒன்று என்னைப் பித்தனாக்கி விட்டது. அவளுடைய அந்தஸ்தையும், என் நிலைமையையும் கருதாமல், நெஞ்சை அவள் வசமாக்கினேன். இராப் பகல் அவள் சிந்தனையில் என்னை மறந்து, இனிய கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்.

என் வாழ்க்கையில் அவள்தான் மனைவியாக இருக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டேன்.

ஆனால்! விளக்கை நாடிய விட்டிலின் கதிதான் எனக்கு ஏற்பட்டது.

ஒருநாள் மாலை காரியாலயத்திலிருந்து வீடு திரும்பியவன், 'என்னுடையவ'ளின் வீட்டில் முகூர்த்தக் கால் நடப்பட்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டேன்.

என் அன்னையிடம் ஓடோடியும் வந்து, "அந்த வீட்டில் என்னம் விசேஷம்!" என்று நாத் தழுதழுக்கக் கேட்டேன்.

அன்னை கூறிய பதில் என் தலையில் பேரிடியாக விழுந்தது. என்னுடைய துக்கத்தை அவளுக்குக் காட்டாமல் என் அறைக்கு ஓடி, கண்ணீர் விட்டுக் கதறினேன்.

யாருக்கு என் உடல், பொருள், ஆவி அவ்வளவையும் அர்ப்பணித்திருந்தேனோ அவளுக்குக் கல்யாணம்! அதுவும் சொந்த மாமா பையனே அவள் கணவன்!

அன்றுதான் என் இதயம் சுக்கு நூறாக உடைந்தது. என் எதிர்கால வாழ்க்கைத் திட்டமெல்லாம் தகர்ந்து தூளாயிற்று.

சூனியமாகிவிட்ட வாழ்க்கையை வெறுத்து அப்போதுதான் துறவறம் நாடி ஓடினேன். உத்தியோகம் செய்து வந்த நாட்களில் சிறுகச் சிறுகச் சேகரித்து வைத்திருந்த கொஞ்சம் பொருளை என் அன்னையின் பெயருக்கு எழுதி வைத்து விட்டு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு நாள் கண் மறைந்தேன்.

எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கடைசியாகக் காசியில் ஒரு மடத்தில் ஊழியனாகப் புகுந்தேன். காஷாயம் தரித்து, சந்நியாசியாக மாறவில்லை. ஆனால் துறவியின் உள்ளத்தோடு வாழ்க்கை நடத்தினேன். காலடைவில் அந்த மடத்திலிருந்து வெளியாகும் வேதாந்த, தத்துவ நூல்களின் பிரயாண விற்பனையாளனாக நான் நியமிக்கப்பட்டேன். இந்தியா பூராவும் பல இடங்களுக்கும் சென்று அந்த நூல்களை விற்பனை செய்வதுதான் என் வேலை. சம்பளம் கிடையாது. தினமும் எனக்கு வேண்டிய இரண்டு வேளைச் சாப்பாட்டுக்கு மாத்திரம் ஊதியம் எடுத்துக் கொள்வேன்.



இந்த வாழ்க்கையில் சில ஆண்டுகள் ஓடி விட்டன. ஒரோரு சமயம் அருமை அன்னையையும் தம்பி மூர்த்தியையும் நினைத்துக் கண்ணீர் விடுவேன். அவர்கள் எங்கு எப்படி வாழ்கிறார்களோ என்று தினமும் எண்ணி எண்ணி மனம் உருகுவேன். கேவலம், ஒரு சுயநல நேசத்தில் ஏற்பட்ட தோல்விக்காக, பெற்ற அன்னையையும், அருமைச் சகோதரனையும் நிராதரவாக விட்டு வந்ததை நினைத்து நானே சில சமயம் வெட்கமடைவேன்.

ஆனால், எந்த முகத்தோடு இனி அவர்களைப் பார்ப்பது என்ற கேள்வியால் அதற்கும் துணியாமல் இருந்தேன்.

வேதாந்த நூல்களை ஊர் ஊராகச் சென்று விற்கும் அதே நாடோடி வாழ்க்கையில்தான் இன்றும் நான் உழன்று கொண்டிருக்கிறேன்.

சட்டென்று ரயில் நின்றதால் ஏற்பட்ட ஒரு மோதல் என்னை உலுப்பி எழுப்பிற்று. திடுக்கிட்டுக் கண் விழித்தேன். பலபல வென்று பொழுது விடிந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் அந்த இளைஞர்கள் இருவரும் ரயிலிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர். அது அரக்கோணம் ஜங்ஷன்.

ரயிலின் கதவுக்கு வெளியே வந்து நின்ற நான், தூரத்தே போய்க் கொண்டிருந்த இரண்டு இளைஞர்களையும் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த ராமுவின் முகத்தைப் பார்க்க என் மனம் துடித்தது. அவன் முகம், பேச்சு, அவன் நடை......

அப்படியும் இருக்குமா!

திரும்பினேன்.

கீழே ஒரு டைரி கிடந்தது. திடுக்கிட்டேன். இளைஞர்களில் ஒருவருடையதாகத்தான் அது இருக்க வேண்டும்.

சொல்ல முடியாத ஆதுரத்துடன் அதை அவசரம் அவசரமாக எடுத்துப் புரட்டினேன்.

முதல் பக்கத்தில் எஸ். ராமமூர்த்தி என்று எழுதப்பட்டிருந்த பெயரை வாசித்தவுடனேயே என் இதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. அடுத்த பக்கத்தைத் திருப்பினேன். அதில் ஒரு புகைப்படம் ஒட்டப்பட்டிருந்தது.

அடுத்த கணம் என் உடலெங்கும் குப்பென்று வியர்த்தது. மெய் சிலிர்த்து உடல் நடுங்கிற்று.

"ஐயோ! மூர்த்தி, நீயா!" என்று என்னையும் அறியாமல் கதறினேன்.

எவ்வளவோ வருடங்களுக்கு முன்பு அம்மா, அப்பா, மூர்த்தி, நான் ஆகிய நால்வரும் எடுத்துக் கொண்ட புகைப்படம் அது.

டைரியை மூடினேன். 'ஹோல்டாலை' அள்ளிச் சுற்றிக் கொண்டு, ரயிலிலிருந்து மளமளவென்று இறங்கினேன்.

"மூர்த்தி, மூர்த்தி!" என்று வெறி பிடித்துக் கதறிய வண்ணம் பிளாட்பாரத்தில் ஓடினேன்.

என்னுடைய கதறலுக்குப் பதில் இல்லை.

நிலை குலைந்தவனாய், 'வெயிட்டிங் ரூமி'ல் நுழைந்தவன், அங்கிருந்த ஆசனம் ஒன்றில் பொத்தென்று உட்கார்ந்தேன். இருதயத்தின் துடிதுடிப்பு விநாடிக்கு விநாடி பெருகிக் கொண்டு வந்தது.

ஏதோ ஆவல் உந்த, அந்த டைரியை ஆர்வத்துடன் புரட்டினேன்.

* * *

ஜனவரி 18: பாங்கி ஹெட் கிளார்க் பசுபதி அய்யருக்குத்தான் என் பேரில் எவ்வளவு பிரியம்! அவர் வீட்டுக்கு வரும்படி தினமும் என்னைக் கட்டாயப் படுத்துகிறார். நாளைக்காவது போகத்தான் வேண்டும்.

ஜனவரி 19: இன்று மாலை பசுபதியின் வீட்டுக்குப் போனேன். என்னை அன்புடன் வரவேற்று உபசரித்தார். நீண்ட நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். நடுவே எனக்குக் காப்பி கொண்டு வந்து வைத்தாள் ஒரு அழகிய யுவதி.

"மிஸ்டர் ராமமூர்த்தி! இவள்தான் என் பெண் சாரு" என்று எனக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தார். இப்போது அவளை நன்றாகப் பார்த்தேன்.

பாவாடையும் தாவணியுமாக, அன்று பூத்த மலரென அழகு சொட்ட நின்றாள்.

பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

அதனால்தானோ என்னவோ, நயனத்தின் இமைகள் படபடவென்று அடிக்க, மறக்க முடியாத ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு அடுத்த கிமிடமே அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

உடல் முழுதும் ஏற்பட்ட ஒரு இன்பப் புல்லரிப்புடன் அறைக்குத் திரும்பினேன்.

ஜனவரி 22: வழக்கமாக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பொழுதைப் போக்கச் சினிமா கொட்டகையை நாடும் என் உள்ளம் இன்று ஏனோ பசுபதி அய்யரின் வீட்டை நாடிற்று.

நான் சென்ற போது வீட்டில் அவர் இருக்கவில்லை. அவள்தான் என்னை வரவேற்று விசாரித்தாள். அப்பப்பா! என்னுடன் பேசத்தான் அவள் எப்படி நாணுகிறாள்! இல்லை. அந்த நாணத்தில் தான் அவள் அழகு எப்படி மிளிர்கிறது, தெரியுமா!

திரும்ப மனமில்லாமல் நான் திரும்பினேன்.

பிப்ரவரி 10: பசுபதி அய்யரின் வீட்டில் இன்று எனக்கு விருந்து. அவருடைய கட்டாயத்துக்காக மட்டும் அல்லாமல், சாருவின் அன்புக் கட்டளைக்காகவும் விருந்து சாப்பிட ஒப்புக் கொண்டேன்.

விருந்தெல்லாம் முடிந்த பிறகு நானும் அவளும் சிரிக்கச் சிரிக்கப் பல விஷயங்கள் பேசினோம். அவளுக்குத்தான் என்னிடம் எவ்வளவு ஆசை!

பிப்ரவரி 15: என் அருமை அன்னை காலமாகி இன்றோடு இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. அவளுடைய அன்பிலும், ஆசியிலும் தானே இன்று நான் மனிதனாக வாழ முடிகிறது! அவளுடைய புனித நினைவு என்றைக்கும் என் நெஞ்சில் இருக்குமாக!...

(என் கையிலிருந்த டைரி கீழே விழுந்தது. கண்களில் நீர் ஆறாகப் பெருகி வழிந்தது. என்னை ஆளாக்கிய அன்னை காலமாகிவிட்டாள். ஐயோ! அவள் கண் மூடும் போது, அருகிலிருக்கும் பாக்கியம் இந்தப் பாவிக்குக் கிடைக்கவில்லையே!

இரண்டு வருடமாக அழுது வடிக்க வேண்டிய கண்ணீரெல்லாம் இப்போது தாரை தாரையாகக் கொட்டிற்று)...

பிப்ரவரி 17: பசுபதி அய்யரின் வீட்டில் இன்று நான் நுழையும்போதே, முன்பின் கேட்டிராத ஒரு புதிய பெண் குரல் என்னைத் திகைக்கச் செய்தது. 'பாரு, பாரு' என்று அடிக்கொருதடவை சாரு அவளை அன்பு கனியக் கூப்பிட்டாள்.

என்னுடைய வியப்பைப் போக்க அடுத்த கணமே சாரு எனக்குப் புதியவளை அறிமுகம் செய்து வைத்தாள்.

பார்வதி என்று அவளுக்குப் பெயர். பசுபதி அய்யரின் ஒரே அக்காள் பெண். சாருவைவிட அவள் மூன்று அல்லது நான்கு வயது பெரியவளாயிருக்கலாம்.

அவளுக்கு அழகு இருந்தது; அறிவும் இருந்தது. அதிர்ஷ்டம்தான் இருக்கவில்லை!

பார்வதிக்கு ஐந்து வயதிருக்கும் போதே அவளுடைய தந்தை ரயில் விபத்து ஒன்றில் காலமாகி விட்டார். தாய் மீனு, குழந்தை பார்வதியுடன் பசுபதியை அடைக்கலம் நாடினுள்.

சாருவும் பாருவும் பால்யத்திலிருந்தே உயிர்த் தோழிகள். ஒன்ருகப் படித்து ஒன்ருக உண்டு வளர்ந்தார்கள்.

ஒருநாள் இரண்டு பேரும் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தனர். சுவாரஸ்யமான பேச்சில் ஈடுபட்டிருந்த இருவரும் பின்னல் வந்து கொண்டிருந்த ராணுவ லாரியைக் கவனிக்க வில்லை.

திடீரென்று லாரியின் ஹாரன் சப்தம் கேட்ட பாரு, ரோட்டைக் கடந்து வலது பக்கத்துக்கு வேகமாக ஓடினுள். லாரி அவள் மீது மோதியது. இவ்வளவும் ஒரு கணத்தில் நடந்து விட்டது.

பாருவை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனுர்கள். அவள் உயிர் பிழைத்து விட்டது. ஆனல் ஊனமாகி விட்டாள்.

ஒரு வருஷ காலம் மிகவும் சிரத்தையாகச் சிகிச்சை செய்ததில் பாரு பூரணசுகம் அடைந்தாள். இழந்த காலை மீண்டும் பெற்று விட்டாள். ஆனல் அவள் சற்று விந்தி விந்தித்தான் நடக்க முடிந்தது.

இன்றைக்குத்தான் கிராமத்திலிருந்து வந்திருக்கிறேன். பாவம்! இந்தக் கிளியின் கால் இப்படியா ஆக வேண்டும்!

சாரு சொல்லித்தான் இவ்வளவும் எனக்குத் தெரிந்தது.

பிப்ரவரி 20: சாருவுக்கும் எனக்குமிடையே வளர்ந்திருந்த அன்பு உறவைப் பசுபதி அய்யர் பூரணமாக அறிந்துதான் இருந்தார்.

"சாருவை உனக்குக் கொடுப்பதில் எனக்குப் பூரண சம்மதம்தான், ராமு. ஆனல் அவளை விடப் பெரியவளான பாருவுக்கு மணமாக வேண்டாமா!" என்று அவர் சொன்ன போது, அந்தக் குரலில்தான் எவ்வளவு பரிவும், பச்சாத்தாபமும் தொனித்தன!

பிப்ரவரி 26: 'பாருவுக்குக் கல்யாணம் ஆகுமா, ராமு' என்று சாரு கதறுகிருள் என்னிடம். பாருவுக்கு வரன் தேடி நானும் எங்கெல்லாமோ அலைகிறேன். எங்கு போனுலும் பெண்ணுக்குக் கால் ஊனம், கால் ஊனம் என்ற பல்லவிதான். இதற்கு விமோசனமே யில்லையா! ஊனமாகி விட்ட அவள் வாழ்க்கைக்கு ஊன்றுகோலே கிடையாதா!

மார்ச் 10: வேதனை என் நெஞ்சைப் பொசுக்கி விட்டது. பாருவின் ஏக்கம், துயரம் என்னைப் பைத்தியமாக்கி விட்டது. இன்னும் எவ்வளவு காலந்தான் இப்படியே வெந்து கொண்டிருப்பது! வேறு மார்க்கமே யில்லையா!

ஏன் இல்லை! அண்ணுவைப் போல நானும் ஏன் எங்காவது கண்காணுத இடத்துக்கு ஓடி விடக் கூடாது!

ஐயோ! சாருவால் இதைத் தாள முடியுமா! பாருவுக்குத்தான் விமோசனம் ஏற்பட்டு விடுமா! பாவம்! பசுபதி அய்யர்தான் எப்படித் தவித்துப் போவார்!

மார்ச்—15: பாருவுக்கு வரன் ஒன்று பார்த்து வருவதற்காக இன்று கோயமுத்

ஊருக்குப் போகிறேன். நண்பன் சந்தானமும் என்கூட வருகிறான்.

மார்ச்—17: என்னத்தைச் சொல்ல! வழக்கமான தோல்வியுடன், கோவையிலிருந்து திரும்புகிறேன். நானிக்குப் பாருவையும், சாருவையும் எந்த முகத்தோடு பார்ப்பேன்!

இன்றையத் தேதி வரை டைரியில் இவ்வளவு தான் எழுதி யிருந்தது. ரயிலில் நடந்த சம்பாஷணையையும், இதையும் இணைத்து, என் அருமைத் தம்பியின் பரிதாப நிலைமையை அறிந்து கொண்டேன்.

இப்போது என்னுள்ளே புயலாக வீசிற்று, சிந்தனை அலைகள். சொல்லித் தீர்க்க முடியாத ஒரு துயரமும் என் உடலின் ஒவ்வொரு மூலையிலும் முட்டி மோதி இதயத்தை அணு அணுவாக நோகச் செய்தது.

பார்வதி பாவம்! அவளுக்கு வாழ்வில் விடிவே இல்லையா! கால் ஊனமாகி விட்டதால், அவள் வாழ்க்கையும் ஊனமாகிவிடத் தான் வேண்டுமா! கூடாது! கூடவே கூடாது!

பார்க்கப் போனால் என்னுடைய வாழ்க்கையும் ஒருவிதத்தில் ஊனமானதுதானே! உள்ளமிருந்தும், வலுவான உடலிருந்தும், வாழ்க்கையில் ஊன்றுகோலில்லாத நானும் ஒரு ஊனன்மந்தானே!

என்னுள்ளே இருந்து ஏதுவோ ஒன்று கடகட வென்று சிரித்தது!

"நீயும் நொண்டி! பார்வதியும் நொண்டி!... நொண்டிக்கு நொண்டியே துணை!"

"உன்னுடைய ஒரே அன்பு சகோதரனின் நல்வாழ்வுக்காக, உன்னையே நீ அர்ப்பணித்துக் கொள்ள அருமையான சந்தர்ப்பம் உனக்கு வாய்த்திருக்கிறது. இதை நீ ஏன் கைவிட வேண்டும்! 'ஊன'மாகிவிட்ட உன் வாழ்க்கைக்கு, இப்போது நீ ஏன் ஒரு ஊன்றுகோலைத் தேடிக் கொள்ளக் கூடாது!"

நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்!

ராமுவுக்காக நான் என் இதயத்தை மறுமலர்ச்சி அடையச் செய்ய வேண்டும்—

பார்வதிக்காக நான் என் வாழ்க்கையில் புது அத்தியாயத்தைத் தொடங்க வேண்டும்—

சாருவின் காதல் கனவு நனவாக நான் இந்தத் துறவுக் கோலத்தையே துறந்துவிட வேண்டும்!—

ராமு, பார்வதி, சாரதா - என் அன்புக்குப் பாத்திரமான இந்த ஜீவன்களுக்காக நான் பாருவுக்கு ஊன்றுகோலாக வேண்டும்!

டைரியிலிருந்த ராமுவின் விலாசத்தை என் கண்கள் ஆவலோடு தேடின.

* * *

இந்த வரலாற்றில் நான் சொல்ல வேண்டியது இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கி.

தை மாதத்தில் நல்ல முகூர்த்தத்திலே ஒரு நாள் வான வெளியிலே பகலவன் தன் நித்திய பவனிக்குக் கிளம்பிய சமயம் வடபழனி முருகன் சந்நிதானத்தில் எனக்கும், என் சகோதரன் ராமுவுக்கும், பாருவையும், சாருவையும் முறையாகத் துணை கொண்ட புதிய வாழ்க்கை அருணோதயமாயிற்று!

அப்போது முழங்கிய கோவிலின் ஆலாட்சி மணி, எங்களுக்கு நல்லாசி கூறித்தான் ஒலித்திருக்க வேண்டும்.

நிரூபணம்!



சாதாரணமான எளிய
பரீக்ஷைகளிலும் கூட

புதிய

'ஆஸ்ப்ரோ'

வலி, ஜுரம் இவற்றினின்று

துரிதமாயும், அபாயமின்றியும் நிவாரணம் அளிக்கின்றது

என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது

சிறந்தபாக்கிங்-நிறைந்தபாதுகாப்பு

புதிய 'ஆஸ்ப்ரோ'வுடன் கூடிய காகிதத் துண்டை ஜலத்திலிட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் வைத்திருங்கள். பிறகு அத்துண்டைப் பிரித்து வில்லைகளைப் பரிசோதியுங்கள்—அவைகள் கெடாமலும், சுத்தமாயும், ஈரமில்லாமலும் இருக்கக் காண்பீர்கள்.



ஒவ்வொரு புதிய 'ஆஸ்ப்ரோ'வும், காற்று மற்றும் ஈரம் படாமல் தனித் தனியே ஸீல் செய்யப்பட்டிருப்பதனால், உதிரி வில்லைகளால் ஏற்படும் வயிற்றைப் பாதிக்கும் அமிலங்கள் சேர்வதினின்றும் பாதுகாக்கிறது.

துரிதமான வேலை - அதி சீக்கிர நிவாரணம்

இரண்டு புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை ஒரு கிளாஸ் ஜலத்திலிடவும். அவை நொடியில் ஜலத்தில் கரைந்து மென்மையான தூளாய் விடுகின்றன. இச்சிறந்த செய்முறை வழிக்கு எமது நன்றி. இதே மாதிரிதான் புதிய 'ஆஸ்ப்ரோ'வும் உங்கள் தேகத்திற்குள் க்ஷணத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது.



புதிய 'ஆஸ்ப்ரோ' அதைப்போலுள்ள மற்றெவ்விதமான வில்லைகளைக் காட்டிலும் வேகமாகக் கரைகிறது, என்பதை ரசாயனசாலைப் பரீக்ஷைகள் நிரூபித்துள்ளன. புதிய 'ஆஸ்ப்ரோ'வில் துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்துகள் எதுவும் சேர்க்கப்படவில்லை, அன்றியும் அது இருதயத்தையோ வயிற்றையோ பாதிக்காது.



கைக்கடக்கமான மூன்று வில்லைகளடங்கிய
பாக்கெட் விலை 2 அணா
30 வில்லைகள் கொண்ட குடும்ப சைஸ் ரூ. 1/2

279

விநியோகஸ்தர்கள்: முல்லர் அண்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்,
பம்பாய், கல்கத்தா, மதராஸ், டில்லி.



ஒன்றிய உள்ளம்

இதயவாசி

முன் பனிக்காலம். பனி கலந்த குளிர் காற்று சில்லென்று அடித்தது. வெளியே இருள் மலையாகக் குவிந்திருந்தது. தன் கழுத்தைச் சுற்றி இறுக அணைத்திருந்த சின்னஞ் சிறு கையை மெள்ளக் கழற்றி விட்டாள் கமலா. "நம் அப்பா இன்றைக்கு வந்துவிடுவாரா, அம்மா!" என்று தூக்கத்தில் பிதற்றிக்கொண்டே புரண்டு படுத்தாள் குழந்தை ரோகிணி.

'எப்பொழுதும் இதே ஞாபகம்தானா?' என்று முணுமுணுத்த கமலா குழந்தையின் முகத்திலே பார்வையைப் பதித்தாள். மின்சார ஒளியில் பளிச்சிட்ட ரோகிணியின் முகம் அவளுடைய மனத்திலே பல எண்ண அலைகளை எழுப்பியது. அவருடைய சாயல் ஒவ்வொரு அங்கத்திலும் பொங்கி வழிகிறதே! பேச்சு, நடை, குணம் எல்லாவற்றுக்கும் அப்பாவை ஒத்திருக்கிறாள். இந்தக் குழந்தையைப் பொய் சொல்லி எத்தனை நாட்கள்தான் ஏமாற்றுவது? உள்ளத்தில் எழுந்த எண்ணச் சுமைகள் அவளுடைய மன வேதனையைப் பெருக்கின.

"டிங்! டிங்!" கடிகாரம் எட்டு முறை ஒலித்து ஓய்ந்தது. "மணி எட்டாகி விட்டதா? வேலை வேறு நிறையக் குவிந்து கிடக்கிறதே!" என்று சொல்லிக் கொண்டே தையல் மிஷின் முன்னால் வந்து உட்கார்ந்தாள் கமலா. கைகள் பரபரவென்று வேலையில் துரிதம் காட்டின. கடகடவென்று ஓடும் தையல் மிஷினுக்கு இணையாக உள்ளத்திலும் சிந்தனை சுருதி சேர்ந்து கொண்டது.

ஜானகிராமய்யரின் இரண்டாவது பெண் கமலா. நல்ல அழகியான அவள் ஏழை வக்கீல் குமாஸ்தாவின் வீட்டில் பிறந்தாள். முதல் பெண்ணைக் கொஞ்சம் சுமாரான இடத்தில் எப்படியோ கொடுத்து விட்டார் ஜானகிராமய்யர். கமலாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க அவரிடம் காலணா காசுகூட இல்லை. அவருடைய வருமானம் குடும்பம் நடத்தத்தான் போதுமானதாக இருந்தது.

மிகவும் சிரமப்பட்டு எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படிக்க வைத்து விட்டார். ஏதாவது வேலையில் புகுந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும் என்ற நினைவு அவர் நெஞ்சிலே நிறைந்து விட்டது. ஆனால் விதி வேறு விதமாக விளையாடப் போகிறது என்பதை அவர் அறியவில்லை.

வக்கீலின் வீட்டுப் பின் பக்கத்து போர்ஷனிலேயே குடியிருந்தார் ஜானகிராமய்யர். ஒரு நாள் காலை பரீட்சை முடிவு வந்திருக்கும் என்ற எண்ணத்துடன் செய்தித் தாளைத் தேடிக் கொண்டு வக்கீலின் வீட்டுக்கு வந்தாள் கமலா. தினம் வக்கீல் சுந்தரமய்யர் பார்த்தபின் தினத்தாள் ஊஞ்சலின் மேல் கிடக்கும். அன்று அங்கே காணவில்லை.

"மாமி, பத்திரிகை எங்கே? இன்னும் வரவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே சுவாதீனத்துடன் உள்ளே வேகமாக நுழைந்தாள் கமலா.

உள்ளே ஓரடி எடுத்து வைத்த அவள் அப்படியே திகைத்து நின்று விட்டாள். நின்ற இடத்திலிருந்து அவள் கால்கள்

நகர மறுத்தன. கையில் பத்திரிகையுடன் நின்றிருந்த வாலிபன் அவளையே திகைப்புடன் உற்றுப் பார்த்தான்.

"வா, கமலா! உன் பரீக்ஷை முடிவு இன்று வந்திருக்கிறது!" என்று கூறிய மாமி அவர்களுடைய மௌனத்தையும் திகைப்பையும் கலைத்தாள்.

"அப்படியானால் பத்திரிகையைக் கொஞ்சம் கொடுக்கச் சொல்லுங்கள். பார்த்து விட்டுத் தருகிறேன்" என்ற கமலா ஆவலுடன் கையை நீட்டினாள். மனத்தின் பரபரப்பு வார்த்தைகளிலே பின்னியிருந்தது.

"என்ன நம்பர், சொல்லுங்கள். நான் பார்த்துச் சொல்லுகிறேன்" என்றான் வாலிபன். அதைக் கேட்ட அவளுக்குத் திக்கென்றது. ஒரு வேளை பத்திரிகையில் அவள் எண் இல்லாவிட்டால் அவன் என்ன நினைப்பான்? இதை நினைக்கும்போது கமலாவின் நெஞ்சு படபடத்தது.

"வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் கமலா.

"ஏன்?" என்னும் பாவனையில் அவளைப் பார்த்தான் அவன்.

"நீ பார்க்க வேண்டாம், ஸ்ரீதரா! அவளிடமே கொடுத்து விடு!" என்ற மாமியின் சொல்லைத் தட்டவில்லை அவன்.

பத்திரிகையை வாங்கிப் புரட்டிய கமலாவின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. "நான் பரீட்சையில் தேறி விட்டேன், மாமி!" என்று கூறிய கமலா ஸ்ரீதரனிடம் பத்திரிகையைக் கொடுத்தாள்.

"ரொம்ப சந்தோஷம், கமலா! அப்பா பட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடைத்து விட்டது!" என்றாள் மாமி.

அவளையுமறியாமல் கமலாவின் பார்வை ஸ்ரீதரனை நாடியது. அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். இருவர் பார்வையும் கலப்பதை மாமி கவனிக்கத் தவறுவாளா, என்ன?

"நான் போய் வருகிறேன்!" என்று அவள் விடைபெறும்பொழுது ஸ்ரீதரன் தெரிந்தோ தெரியாமலோ 'உம்' என்று தலையசைத்தான். அவன் செய்கை கமலாவின் நெஞ்சில் ஆழப் பதிந்தது. சிறிது தூரம் நடந்த அவளுக்கு மறுபடியும் அவனைப் பார்க்க வேண்டும்போல இருந்தது. திரும்பிப் பார்த்தாள். அவன் அசையாமல் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தான். கமலாவின் முகத்தில் இன்பம் நிறைந்த புன்னகை மலர்ந்தது.

அதற்குப் பின் கமலாவை அடிக்கடி சந்தித்தான் ஸ்ரீதரன். சுந்தரமய்யரின் அண்ணா பிள்ளை ஸ்ரீதரன். சினிமா டைரக்டராக இருந்த அவன் ஒரு வார லீவில் சித்தப்பா வீட்டுக்கு வந்திருந்தான். கமலாவைப் பார்த்த பிறகு ஒரு வார லீவு ஒரு மாதமாகி விட்டது.

சுந்தரமய்யர் மிகவும் நல்ல மனிதர். ஸ்ரீதரன் - கமலாவின் இதய பரிவர்த்தனையை அறிந்து கொண்ட அவர் ஒரு நாள் ஸ்ரீதரனைக் கூப்பிட்டு, "கமலாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?" என்று கேட்டார்.

கரும்பு தின்னக் கூலியா? வெட்கத்தால் முகம் சிவக்க, "ஆகட்டும், சித்தப்பா!" என்றான் அவன்.

"பிறகு அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று சொல்லக் கூடாது. ஏதோ முடிந்த வரைதான் செய்வார்கள். தெரியுமா?" என்றார் அவர்.

"எனக்கு அவர்கள் எதுவும் செய்ய வேண்டாம், சித்தப்பா! கமலாவைக் கல்யாணம் செய்து கொடுத்தால் போதும்!" என்றான் ஸ்ரீதரன் நிறைந்த உள்ளத்துடன்.

சுந்தரமய்யரின் முயற்சியால் ஒரு மாதத்தில் கமலா - ஸ்ரீதரனின் திருமணம் விமரிசையாக நடந்தது.

* * *

கல்யாணம் நடந்த இரண்டு நாட்களுக்கெல்லாம் கமலாவையும் அழைத்துக் கொண்டு பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டான் ஸ்ரீதரன். தனிப் பங்களா, கார் எல்லா சௌகரியங்களும் அமைந்த வாழ்க்கை கமலாவுக்கு இனிப்பாக இருந்தது. அவளிடம் புடவைகளும், நகைகளும் குவிந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீதரனின் அன்பு அவளுக்கு ஈடு இணையற்ற பொக்கிஷமாகத் தோன்றியது. 'அப்பா சொன்னதுபோல வேலைக்குப் போயிருந்தால் இத்தனை இன்பமும் அனுபவிக்க முடியாமல் வீணாகத்தானே போயிருக்கும்?' என்ற நினைவு கமலாவின் மனத்தில் அடிக்கடி தோன்றியது.

இன்பத்தின் பிடியில் கட்டுண்ட காலம் தான் எத்தனை வேகமாக ஓடி விடுகிறது! கமலாவுக்கு விவாகமாகி மூன்று வருஷங்கள் ஓடி விட்டன.

பட உலகில் மிகவும் முன்னேறியிருந்தான் ஸ்ரீதரன். அவன் டைரக்ட் செய்த படங்களுக்குப் புகழ் பொங்கியது; பணம் குவிந்தது. கமலா வந்த வேளை என்று கூறிக் கொண்டான் ஸ்ரீதரன்.

ஒரு நாள் மாலை. ரேடியோ சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் கமலா. அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்த ஸ்ரீதரனும் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"கமலா, உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். அதனால்தான் இன்று சீக்கிரமாக வீட்டுக்கு வந்து விட்டேன்!"

இவ்விதம் கூறிய ஸ்ரீதரன் அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

"என்ன?" என்று கேட்ட கமலா ரேடியோவை மூடிவிட்டு அவன் சொல்வதைக் கேட்கத் தயாரானாள்.

"நான் சொந்தமாக ஒரு படம் எடுக்கப் போகிறேன். அதற்கு உன் உதவி தேவை!" என்றான் ஸ்ரீதரன்.

"என் உதவியா? நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்?" என்று கேட்டாள் கமலா ஆச்சரியத்துடன்.

"நீ மனம் வைத்தால் முடியும், கமலா!" என்றான் அவன்.

"சொல்லுங்களேன்! முடிந்தால் செய்கிறேன்!" என்றாள் அவள்.

"நான் எடுக்கப் போகும் படத்துக்குத் தகுந்த நடிகை யாரும் கிடைக்கவில்லை. உனக்கு நல்ல முகவெட்டு இருக்கிறது. இந்த ஒரு படத்தில் மட்டும் நீ நடித்தால் போதும். பணத்தை வாரிக் குவித்து விடலாம். நம் புகழும் உயர்ந்து விடும்!" என்றான் ஸ்ரீதரன்.

அதைக் கேட்ட கமலா, "உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? என்னால் ஒன்றும் சினிமாவில் நடிக்க முடியாது" என்றாள் கமலா கண்டிப்பும் கோபமும் தொனிக்க.

"நீ நடித்துத்தான் ஆகவேண்டும்" என்றான் ஸ்ரீதரன் கடுமையாக.

"முடியாது. ரொம்பவும் தொந்தரவு பண்ணினால் நான் ஊருக்குப் போய் விடுவேன்!" என்ற மனைவியை அப்படியே கொன்று விடலாம் போலத் தோன்றியது ஸ்ரீதரனுக்கு. இருந்தாலும் பேசாமல் எழுந்து மாடிக்குப் போய் விட்டான்.

கமலா சோபாவில் படுத்து விம்மி விம்மி அழுதாள். சினிமாவில் நடிக்க வேண்டும் என்பதை எண்ணும்போதே அவள் உடல் கூசியது. என்னதான் உயிர் போவதாக இருந்தாலும் இதற்கு ஒத்துக் கொள்ளக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டாள் அவள்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு வாரம் வரை அவளுடன் பேசாமல் இருந்தான் அவன்.

அன்று திங்கட்கிழமை. காலை வேலைகளை முடித்து விட்டு, 'அப்பாடா!' என்று சோபாவில் சாய்ந்தாள் கமலா.

"உட்காராதே, கமலா! சீக்கிரமாக வேறு உடை மாற்றிக் கொண்டு வா. ஸ்டுடியோவுக்குப் போக வேண்டும்" என்றான் ஸ்ரீதரன், முன்பு ஒன்றுமே நடக்காததைப் போல.

கமலாவுக்கு அந்த வீடே சுற்றுவது போல் தோன்றியது. இருதயம் வேகமாகப் படபடத்தது. மெள்ளத் தன்னை சமாளித்துக் கொண்ட அவள், "என்னால் ஸ்டுடியோவுக்கு வர முடியாது" என்றாள்.

இரு குடங்கள்

கலீல் ஜிப்ரான்

பரமாத்மாவானவர் மனிதனைச் சிருஷ்டித்து இந்த உலகத்துக்கு அனுப்பும் பொழுது அவனிடம் இரண்டு குடங்களைக் கொடுத்து அனுப்பினார். ஒன்றில் உண்மை நிறைந்திருந்தது. மற்றொன்றில் இன்பம் நிரம்பி யிருந்தது.

"நீ உலகத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறாய். உயிரைக் கொடுத்தாகிலும் உண்மையைக் காப்பாற்று. உன் வலது கையில் உண்மையும், இடது கையில் இன்பமும் நிறைந்த குடங்களை வைத்திருக்கிறேன். ஜாக்கிரதை!" என்று உபதேசம் செய்தே அனுப்பினார்.

வழி நடைக் களைப்பினால் மனிதனுக்கு உறக்கம் வந்து விட்டது. துர்த் தேவதையான சாத்தானுக்கு இது போன்ற சந்தர்ப்பத்திலேதானே கண்? மனிதன் அயர்ந்திருக்கும் வேளை பார்த்து வலது கைக் குடத்தை இடது கைக்கும், இடது கைக் குடத்தை வலது கைக்குமாக மாற்றி வைத்து விட்டுப் போய் விட்டான்.

அது முதற் கொண்டு மனிதன் இன்பத்தை உயிரைக் கொடுத்தாகிலும் காப்பாற்ற முனைகிறான். உண்மையைத் தயவு தாட்சிண்யமின்றிக் கிள்ளுக் கீரையாக மதித்து உதறி எறிந்து வருகிறான். —ரா.வீ.

"வர முடியாதா? வந்துதான் ஆகவேண்டும். வராவிட்டால் உன்னை யார் விடப் போகிறார்கள்!" என்ற கணவனின் வார்த்தைகளைக் கேட்டுக் கமலாவுக்கு ஆத்திரமும் அழுகையும் பொங்கின.

"என்னைச் சென்னைக்கு ரயிலேற்றி விடுங்கள். நான் என் அப்பாவிடம் போய் விடுகிறேன்!" என்று கூறினாள் அவள்.

ஸ்ரீதரனுக்கு எரிச்சலாக இருந்தது. கமலாவின் அழகை உபயோகப்படுத்திக் கொண்டு ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதித்து விடலாம் என்று மனக்கோட்டை கட்டிய அவனுக்கு அவளுடைய செய்கை எல்லையில்லாத கோபத்தைக் கொடுத்தது.

"அப்பாவிடம் போனால் அங்கேயே இருக்க வேண்டியதுதான்!"

"சம்மதம்!" என்றாள் கமலா.

ஏமாற்றத்தினூடே எழுந்த ஆத்திரம் அடங்குமுன்னே மனைவியை ரயிலேற்றி விட்டான் ஸ்ரீதரன்.

சென்னைக்கு வந்து சேர்ந்ததும், அவள் தகப்பனாரிடம் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி அழுதாள்.

"அழாதே, கமலா! நம்முடைய போதாத காலம்!" என்று கூறி மகளைச்

சமாதானம் செய்தார் தந்தை. சுந்தரமய்யரும் ஏதோ ஆறுதல் கூறினார். ஸ்ரீதரனுக்கு அவனுடைய தவறை எடுத்துக் காட்டி, அவர் எழுதிய கடிதம் அவரிடமே திரும்ப வந்து விட்டது. பம்பாயிலிருந்து வரும்பொழுது கமலா நான்கு மாதக் கர்ப்பிணி! அவள் நிலையை விளக்கி எழுதிய ஜானகிராமய்யரின் கடிதமும் அவருக்கே திரும்பி விட்டது.

பிறகு, கமலா தன் நினைவை எல்லாம் வாழ்க்கையைச் செப்பனிடுவதில் திருப்பினாள். தையல், பாட்டு, இவைகளைப் படித்தாள். இதன் நடுவே ரோகிணி பிறந்தாள். குழந்தையின் முகத்தில் தன் கவலையை மறந்து வாழ்ந்தாள் கமலா.

நான்கு வருஷங்கள் ஓடி விட்டன. குழந்தைக்கு நினைவு தெரிய ஆரம்பித்த பிறகுதான் கமலாவின் பாடு திண்டாட்டமாகி விட்டது. அந்த வருஷ விடுமுறைக்கு அவள் அக்கா குடும்பத்தினர் வந்திருந்தனர். அவள் குழந்தைகள், "அப்பா, அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டு வளைய வருவதைப் பார்த்த ரோகிணியின் பிஞ்சு உள்ளத்திலும் கேள்வி எழுந்தது. நேரே கமலாவிடம் போய், "என் அப்பா எங்கே அம்மா?" என்று கேட்டாள்.

மனத்தில் அடைத்து வைத்திருந்த துக்கம் முழுவதும் உடைப்பு எடுத்துக் கொண்டு பெருகியது. குழந்தையை அணைத்துக் கொண்டு வெகு நேரம் வரை அழுதாள் கமலா. பிறகு, "உன் அப்பா ஊரில் இருக்கிறார், அம்மா! ஒரு நாள் வருவார், போய் விளையாடு!" என்றாள்.

"நாளைக்கு வந்து விடுவாரா, அம்மா?"

"நிச்சயம் வந்து விடுவார் கண்ணு!" என்று சமாதானம் சொன்னாள் கமலா.

அதிலிருந்து தினமும் படுக்கப் போகு முன், "நாளைக்கு நான் எழுந்திருக்கும் போது அப்பா வந்து விடுவாரா, அம்மா?" என்று கேட்க ஆரம்பித்தாள் ரோகிணி. உருவத்தில் ஸ்ரீதரனைப் போலிருந்த அவளைப் பார்த்து மனம் மருகினாள் கமலா.

• • •

தடதட வென்று வாசற் கதவை இடிக்கும் சப்தம் கேட்ட கமலா, சிந்தனை கலைந்து தையல் மிஷினை நிறுத்தினாள். வீட்டில் அப்பாவும் அம்மாவும் தூங்கி விட்டார்கள். இந்த நேரத்தில் யார் வந்திருப்பார்கள் என்ற எண்ணம் மனத்திலே சுழ வாசற்கதவைப் போய்த் திறந்தாள் கமலா. வாசற்படியில் நின்றிருந்த மனிதரைப் பார்த்த கமலாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. "நீங்களா?" என்று கேட்டாள் தடுமாற்றத்துடன்.

"ஆமாம் கமலா, நான்தான்! உன்னிடம் விவேகமில்லாது கோபித்துக் கொண்டதற்கு மிகவும் வருந்துகிறேன். நீ போன மறு நாளே படம் எடுக்க வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வெளிநாட்டுப் பிரயாணம் கிளம்பி விட்டேன். ஊர் ஊராகச் சுற்றிய நான் பல அனுபவங்களைப் பெற்று விட்டேன். ஒரு மாதத்துக்கு முன்புதான் பம்பாய்க்கு வந்தேன்.

"நீ இல்லாமல் வீடு தூசியடைந்து கிடக்கிறது. வீட்டில் உள்ள ஒவ்வொரு சாமானும் உன் பிரிவைச் சொல்லுகிறது. நீ இல்லாமல் வாழ முடியாது என்று தோன்றியது, வந்து விட்டேன்" என்று ஒரே மூச்சில் விஷயம் முழுவதும் கூறி முடித்தான் ஸ்ரீதரன்.

கமலா பதில் பேசவில்லை. உள்ளே வந்த அவளை ஸ்ரீதரனும் பின் தொடர்ந்தான்.

"இன்னமும் கோபமா, கமலி?" என்ற ஸ்ரீதரன் அவள் கைகளைப் பிடித்தான்.

"எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. உங்கள்......!" இடையில் நிறுத்திய கமலா குழந்தையைப் பார்த்தாள். அப்பொழுதுதான் குழந்தையைக் கவனித்த ஸ்ரீதரனின் முகம் வியப்பால் விரிந்தது.

"இதைப் பற்றி என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே, கமலா?"

"சொல்ல வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்குள்தான் சண்டை வந்துவிட்டதே!"

இவர்கள் பேச்சுக் குரலைக் கேட்ட ரோகிணி வாரிச் சுருட்டிக் கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். அவளை அப்படியே வாரி அணைத்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

"இது நம்ம அப்பா தானே, அம்மா!" என்றாள் குழந்தை.

"ஆமாம்" என்பதைப் போல் கடிகாரத்தில் மணி பத்து அடித்தது.

நன்றிக்கடன்



சாஸன்

'மூத்தம்மாள்' என்ற பெயரைக் கேட்கும் போது என் மனம் பழைய எண்ணங்களிலே சுழல ஆரம்பிக்கிறது. உலகத்திலே எத்தனையோ மூத்தம்மாக்கள் இருக்கலாம். ஆனால், எனக்கு அந்தப் பெயர் எத்தனை உயர்வாயிருந்தது!

ஆம். நான் யாருடைய உதவியினால் இன்று இந்த வசதியான நிலையில் வாழ்கிறேனோ, யார் என்னை அன்பினால் கட்டுப்படுத்தி, தாயினும் மேன்மையாகப் போற்றி உருவாக்கினாளோ, அவள் பெயரே மூத்தம்மாள்.

மூத்தம்மாள் குழந்தையில்லாதவள்; நான் தாயைச் சிறு வயதிலேயே பறி கொடுத்தவன். ஆண்டவன் எனக்கும் மூத்தம்மாளுக்கும் இடையே தாய்க்கும் சேய்க்கும் உள்ள பாசத்தையும் பிணைப்பையும் உண்டாக்கி விட்டான்.

தங்களுக்கென்று ஒரு குழந்தை இல்லாத தாபம் மூத்தம்மாளின் கணவர் சுவாமிநாதனுக்கு நிறைய உண்டு. அவருக்கு மட்டும் தானா! மூத்தம்மாளுக்குந்தான். ஆனால் இருவருக்கும் இடையே உள்ள வித்தியாசம் இதுதான். பிறர் குழந்தைகளைத் தன்னுடையதாகப் பாவித்துப் போற்றும் பண்பு மூத்தம்மாளிடம் இருந்தது. அது சுவாமிநாதனிடம் இடம் பெறவில்லை.

என்னைக் கல்லூரியில் சேர்க்க விரும்பிய போது சுவாமிநாதன் முட்டுக்கட்டை போட்டார். மூத்தம்மாளுக்குத் தெரியும், பணம் ஏராளமாகப் பிடிக்குமே என்றுதான் தம் கணவர் தடை விதிக்கிறார் என்று.

"இதோ இந்த நகைகள் என் பிறந்தகத்துச் சொத்து. இதை விற்றுக் குழந்தையைப் படிக்க வைக்க நீங்கள் தடை செய்ய முடியாது" என்று கூறியதைக் கேட்ட போது 'சிவனே' என்று பேசாமலிருந்து விட்டார் சுவாமிநாதன்.

என் விஷயமாக மூத்தம்மாள் தன் நெருங்கிய உறவினர்களுடைய மனத்தாங்கல்களையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. யாரோ சம்பந்தமற்ற ஒரு குழந்தைக்காக அவள் உடலாலும் பொருளாலும் உதவி புரிவதை அவர்கள் எப்படி விரும்ப முடியும்!

ஆனால் மூத்தம்மாள் யாருடைய வெறுப்பையும் பொருட்படுத்தவில்லை. என்னிடம் அவ்வளவுக்கு அவ்வளவு அன்பு காட்டினாள். என்னிடம் கோபம் கொள்ள வேண்டிய தருணத்தில்கூட மூத்தம்மா என்னைக் கோபித்துக் கொண்டதேயில்லை.

ஒரு விஷயத்தை இங்கே நான் குறிப்பிடத்தான் வேண்டும். ஒரு சமயம் (எனக்குப் பத்து வயதிருக்கும் அப்போது) வீட்டிலே நான் விளையாடிக் கொண்டிருந்த போது, என் பந்து தவறி அலமாரியில் உள்ள எண்ணெய்ப் புட்டியில் பட்டு, புட்டி கீழே விழுந்து சுக்குநூறாக உடைந்து விட்டது. சப்தம் கேட்டு அங்கு வந்த மூத்தம்மாள் விஷயத்தை ஒரு நொடியில் உணர்ந்தாள். நான் உண்மையில் நடுங்கி விட்டேன். ஏன்! நானே பல நண்பர்களுடைய வீட்டில் பார்த்திருக்கிறேனே! இம்மாதிரி விஷமங்கள் பையன்கள் செய்தால், அவர்களுடைய பெற்றோர் அந்தச் சமயம் எழும் கோபம் காரணமாக நன்றாய் அடித்து விடுவார்கள். அம்மாதிரி எனக்கும் நல்ல உதை கிடைக்கப் போகிறது என்று பயந்து விட்டேன். என் முக பாவத்தைக் கண்ட மூத்தம்மாள் என்ன சொன்னாள், தெரியுமா! "போனால் போகிறதடா, சஞ்சீவி! இனி இங்கே ஆடாதே பந்தாட்டம். வாசலில் ஆடு!" என்று என்னை அன்புடன் அணைத்துக் கூறினாள். அந்த அன்புச் செயலை இப்போது எண்ணிப் பார்த்தாலும் என் உள்ளம் நெகிழ்கிறது. பெற்ற தாய்க்கு ஏற்படக் கூடிய சாதாரணக் கோப உணர்ச்சிகூட என்னை வளர்த்த மூத்தம்மாவிடம் காணவில்லையல்லவா!

என் கல்லூரிப் படிப்பு முடிந்ததும், எனக்கு வேலை கிடைத்தது. நான் பெறும் சம்பளத்தை மூத்தம்மாளிடம் கொடுத்தேன். ஆசையுடன் அதைப் பெற்றுக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

"இந்தப் பணம் உன்னுடையதுதான். உன் பெயரில் பாங்கியில் போட ஏற்பாடு செய்கிறேன். நாளைக்கே உனக்குக் கல்யாணம் ஆகும். அப்போது உதவ வேண்டும், பார்!" என்றாள் மூத்தம்மாள் ஆனந்தம் தாங்காமல்.

மூத்தம்மாளின் முயற்சியில் எனக்குக் கல்யாணமும் ஆயிற்று. பெண் மூத்தம்மாளுக்கு மட்டும் பிடித்தவளாயிராமல், எனக்கும் பிடித்தவளாக இருந்தாள்.

கல்யாணம் ஆன பிறகு, திடீரென்று என்னை உத்தரப் பிரதேசத்துக்கு மாற்றிவிட்டார்கள். நான் மட்டும் சென்றேன். மூத்தம்மாள், பிறகு நான் அங்கு குடும்பம் போட்டவுடன் வருவதாய்ச் சொன்னாள்.

சில மாதங்களுக்குப் பின்பு, நான் என் புது மனைவியை அழைத்துப் போகச் சென்னை வந்த போது, மூத்தம்மாவைக் காணச் சென்றேன். ஏமாற்றம் அடைந்தேன். மூத்தம்மாவைக் காணவில்லை. வீடே பூட்டிக் கிடந்தது. விசாரித்ததில், சுவாமிநாதன் குடும்பத்தைக் காலி செய்து கொண்டு வெளியூர் சென்றுவிட்டார் என்று தெரிந்தது. தகவல்கள் யாதும் அவர்களைப் பற்றிச் சரிவரக் கிடைக்கவில்லை.

ஏமாற்றத்துடன் நான் என் மனைவியை அழைத்துக் கொண்டு, உத்தரப் பிரதேசம் சென்று குடும்பம் வைத்தேன்.

ஐந்து வருஷங்கள் கடந்துவிட்டன. நான் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டேன். உத்தரப் பிரதேச மாகாணத்திலே, பல ஊர்களிலே என் உத்தியோகம் மாறிக் கொண்டிருந்தது.

நான் இருந்த ஊரிலே எனக்கு ஒரு தமிழ் நாட்டு நண்பர் ஏற்பட்டார். அவருக்கு மற்

ஒரு காரியாலயத்தில் வேலை. விடுமுறை நாட்களில் நானும் அவரும் சேர்ந்திருந்து நேரத்தைக் கழிப்பது வழக்கம்.

ஒருநாள் விடுமுறையின்போது, நான் என் நண்பர் வீட்டுக்குச் சென்றபோது, நண்பர் வீட்டில் இல்லை. அவருடைய அறையில் உட்கார்ந்தேன். மேஜைமேல் அன்று வந்திருந்த ஒரு கடிதம் பிரிக்கப்பட்டிருந்தது. கையெழுத்தைப் பார்த்ததும், எனக்குப் பழக்கப்பட்டதாக இருந்தது. என்னையுமறியாமல் அதை எடுத்துக் கீழே கையெழுத்துதாரரின் பெயரைக் கண்ணுற்றேன். என் ஆச்சரியம் எல்லை கடந்து போயிற்று. "சுவாமிநாதன்" என்று இருக்கவே, தவறையும் மறந்து, துடிப்புடன் கடிதத்தை வாசித்து விட்டேன்.

"நாராயணனுக்கு ஆசீர்வாதம்,

முத்தம்மாவுக்குச் சில தினங்களாக உடம்பு சரியில்லை. இது பிரஸவ மாதம் என்று தெரிகிறது. கையில் பணமில்லை. எனவே உனக்கு அனுப்பவேண்டும் என்றிருந்த பணம் மூந்நூறு ரூபாயை இப்போது அனுப்ப முடியவில்லை. தவிர, முத்தம்மாவும் சொன்னாள், நாராயணன் ஒன்றும் வித்தியாசமாய் எண்ண மாட்டான் என்று. ஒரு வருந்தத்தக்க விஷயத்தையும் எழுத வேண்டியிருக்கிறது. வீட்டின்பேரில் கடன் வாங்கியிருந்த பணம் வட்டியும் முதலுமாக ஏகப்பட்டதாகிவிட்டது. கோர்ட்டுக்குப் போய் விடுவான் போலிருக்கிறது. என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. பகவான் விட்ட வழியாகிறது. சாமிநாதன்"

என் மனம் படபடத்தது. முத்தம்மாள் இப்போது கர்ப்பவதியா! அவள் பங்கிலும் ஆண்டவன் அனுக்கிரகம் செய்தானா!

என் மனம் வேகமாய் 'வேலை செய்தது. கடிதத்திலிருந்து சுவாமிநாதனின் விலாசத்தை அறிந்துகொண்டேன். நண்பர் வரும் வரையில் நான் காத்திராமல், உடனே வீட்டுக்கு விரைந்து வந்தேன்.

என் மனைவி வசந்தாவை ஜாக்கிரதையுடன் இருக்கச் சொல்லிவிட்டு, அன்றே சென்னைக்குக் கிளம்பினேன்.

ரயில் சென்னைக்கு வந்ததும், அடுத்த ரயிலிலேயே கும்பகோணம் புறப்பட்டேன். நான் கும்பகோணத்தை அடைந்து, சுவாமிநாதனின் வீட்டைக் கண்டுபிடித்தேன்.

உள்ளே நுழைந்தேன். சுவாமிநாதனைக் காணோம். யாரோ ஒரு கிழவி மட்டும் இருந்தாள். "முத்தம்மாவின் வீடு இதுதானே!" என்றேன் துடிப்புடன்.

"ஆம். நீ யார்!"

"நான்...அது சரி! பிரசவம் ஆகிவிட்டதா!" என்று மேலும் தொடர்ந்தேன்.

"அம்மா! யார் அங்கே!" என்று கேட்டுக் கொண்டே ஒரு பெண்மணி உள்ளிருந்து அங்கு வந்தாள். அவளுக்குச் சுமார் இருபத்துமூன்று வயதிருக்கும். பூரண கர்ப்பவதியாகத்தான் இருந்தாள் அவள்.

"முத்தம்மா! இது யாரோ தெரியவில்லை. உன்னை விசாரிக்கிறார்" என்றாள் கிழவி.

இந்தச் சொற்கள் என் காதில் விழவும், என் தலை சுழன்றது. ஆ! என் முத்தம்மாளுக்குப் பதில் என் எதிரில் வேறொரு முத்தம்மாளல்லவா நிற்கிறாள்! இவள் யார்! என் முத்தம்மா எங்கே! பைத்தியம் பிடித்தவன் போல நான் விழிக்கும்போது, என் பின்னால் சந்தடி கேட்டது. சுவாமிநாதன் நின்றுகொண்டிருந்தார். என்னைக் கண்டு அவரும் அயர்ந்து விட்டார்.

"சஞ்சீவி! நீயா!"

"மாமா! என் முத்தம்மா எங்கே!"

சுவாமிநாதன் என் கேள்விக்குப் பதில் அளிக்காமல் விம்மினார்.

என் உள்ளத்தை யாரோ கசக்கிப் பிழிவதைப் போலிருந்தது. ஏன்! அவர் புலம்பும் காரணம் எனக்குப் புரிந்து விட்டது.

"மாமா! என் முத்தம்மா இல்லையா! எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை, மாமா! என்னைப் பெற்ற தாயினும் மேன்மையாகப் போற்றிய முத்தம்மா போய் விட்டாளா! அவள் உடல் நிலையைப் பற்றிய செய்தியைக்கூட அறியக் கூடாத பாவியா நான்!"

"சஞ்சீவி! நான்தான் அதற்குக் காரணம். அவள் உன்னைக் காண வேண்டும் என்றுதான் சொன்னாள். நான்தான் தெரிவிக்கவில்லை. காரணம் பொறாமைதான். உன்னை அவள் அன்புடன் ஆதரித்ததை நான் வெறுத்தது தான் காரணம். அவள் சாபம் தானோ என்னவோ, நான் இப்போது தவிக்கிறேன்."

"மாமா! ஒரு போதுமில்லை. சபிக்கும் உள்ளம் அல்ல என் முத்தம்மாவினுடையது. பரிவு காட்டும் பண்பில் உயர்ந்த உள்ளம். உங்களுக்கு ஏதாவது கஷ்டம் வந்தாலும், என் முத்தம்மாவின் பெயரே அதை விரட்டும். இல்லாவிட்டால், நீங்கள் இப்போது மணந்து கொண்ட மனைவிக்கும் அதே பெயர் வாய்த்திருக்காது" என்றேன் உணர்ச்சியுடன்.

சுவாமிநாதன் தம் தவறை உணர்ந்தார். அதற்காக வருந்தவும் செய்தார். எனினும் எனக்கு அங்கு நிற்க மனம் ஒவ்வவில்லை. என் உள்ளக் கோயிலில் புனிதமாக வீற்றிருக்கும் என் முத்தம்மாவை எண்ணியபடியே, "மாமா! நான் வருகிறேன். இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள்" என்று ஒரு கவரை அவர் முன் நீட்டினேன். என் நன்றிக் கடனை ஏதாவது ஒரு முறையில் முத்தம்மாவின் குடும்பத்துக்குச் செலுத்த வேண்டும் என்று கருதினேன்.

"பணமா! எதற்கு! அதுவும் உன்னிடமிருந்தா! வேண்டாமப்பா. உன் முத்தம்மாவின் கட்டளையை நான் மீறியதாகும், உன் பணத்தைப் பெற்றுக் கொண்டால்!"

"என்ன! முத்தம்மாளின் கட்டளையா! அது என்ன மாமா!" என்றேன் துடிப்புடன்.

"'நம் சஞ்சீவி தன் நன்றிக் கடனைத் தீர்க்க ஏதாவது பண உதவி செய்தால் மறுத்து விடுங்கள். அவன் நன்றிக் கடனைத் தீர்த்து விட்டால், நான் அவனுக்குச் செய்திருக்கும் உதவிக்குக் கூலி பெற்றதாய்த்தான் ஆகும். அவனிடமிருந்து எதையும் எதிர்பார்த்து நான் அவனை ஆதரிக்கவில்லை. என் அன்பு காரணமாகத்தான் ஆதரித்தேன். ஆகையால் என் விருப்பத்துக்கு மாறாக நடந்து விடாதீர்கள்.' இவ்விதம் கூறிவிட்டுக் கண்ணை மூடினாள். சஞ்சீவி! அவளுடைய கட்டளையை நான் மீற மாட்டேன்" என்று உறுதியுடன் கூறினார் சுவாமிநாதன்.

என்னுடைய கையிலிருந்த கவர் என்னையும் அறியாமல் நழுவிக் கீழே விழுந்தது!

நான்தான் டீ

என்னை உலகெங்கும் அறிவர்...



என் கீர்த்தியைக் கண்டு
உலகப் பிரமுகர்கள் கூட பொறு
மைப் படுவர். ஆண்டு தோறும்
45 கோடி ராத்தலுக்குக்
குறையாத அளவு நான்
வெளியே அனுப்பப் பட்ட போதிலும்,
ஜனங்கள் இன்னும் அதிகமாக என்னைக்
காண விரும்புகின்றனர். என்னுடன்
பரிச்சியமாகுபவர்களின்
பாஷையை எல்லாம் நான்
அறிந்து கொண்டால்,
அநேகமாய் எல்லா நாடு
களின் பாஷையையும்
நான் பேசமுடியும் என்று
துணிந்து கூறலாம். இப்
போது கூட உலகதேவையில்
பாதியை என் பூர்த்தி செய்கிறேன். ரஷியா, சீனா,
பார்மோஸா, ஜப்பான் நீங்கலாக உள்ள உலகின்
வருஷத்தேவை 120 கோடி ராத்தல். பிரிட்டன் தான்
பெரிய வாடிக்கை நாடு. சென்ற வருஷம் அது மாத்திரம்
3270 லட்சம் ராத்தலை வாங்கியது. வருஷம் 4 கோடி ராத்த
லுக்கு மேல் வாங்கும் யு. எஸ். 2-வது ஸ்தானத்தை வகிக்கிறது.
மற்றும் அயர்லாந்துக்காரர், கானடாக்காரர், எகிப்தியர்,
ஐரோப்பியர் என பல உபாஸகர்கள் என்னைக்
கொண்டாடுகிறார்கள். பல நாடுகளின்
மக்களுக்கு ஒரு வாழ்க்கை முறை
யாகி விட்டேன். அங்கு தேநீர் வழங்கு
வது பரம்பரை விருந்தோம்பல் பாணி.
கோடானுகோடி உலக மக்களை இணைக்
கும் நேசப்பாலமாகிய என்னைப்பற்றி—
இந்திய மலைப் பற்றி—பெருமிதமடை
கிறீர்கள் அல்லவா?

நான்தான் டீ — உலக நட்புறவின் சின்னம்

மகத்தான விலைக் குறைவு

மிகவும் நவீனமான
1955 ஸ்பெஷல் மாடல்கள்


நேர்த்தியான உயர் ரக மிஷின் & டிசைன் : ஒவ்வொன்றும் 3 வருஷ உத்தரவாதம்

இனாம் : ஏதாவது மூன்று கடிகாரங்கள் வாங்குபவருக்கு ஒரு கைக்கடிகாரமும் இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு பாக்கெட் கெடிகாரமும் ஒரு கடிகார ஆர்டருக்கு ஒரு கோல்டு கேப் பவுண்டன் பேனாவும் இலவசம்



No. 1181 **10½ Size**
WATERPROOF

15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	36
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		40
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		54
21 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		56
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		64



No. 1183 7¾ Size Curved Shape

15 ஜுவல்ஸ் பிரைட்-க்ரோம்	ரூ.	32
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		38
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு (லீவர்)		63



No 1185 10½ Size Flat Shape

5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ.	18
5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு C/S		21
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		28
17 ஜுவல்ஸ் க்ரோம் கேஸ்		37
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		42




No. 1186 5¼ Size Ladies

15 ஜுவல்ஸ் பின் லீவர் ரோ.கோ.	ரூ.	45
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		48
17 ஜுவல்ஸ் ரோ. கோ. (20 மைக்.)		65
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		68




No. 1182 **8¾ Size**

15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	40
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		44
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		54
21 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		58
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		68



No. 1184 7½ Size Tonneau

15 ஜுவல்ஸ் பிரைட்-க்ரோம்	ரூ.	34
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		40
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு (லீவர்)		65




அலாரம் டைம் பீஸ்	ரூ.	13
உயர் ரக டைம் பீஸ்		15

பாக்கெட் கடிகாரம்

சாதா டயல்	ரூ.	9
ரேடியம்		11
15 ஜுவல்ஸ்		27
15 ஜுவல்ஸ் லீவர்...		32

PIONEER WATCH CO. PO. BOX No. 11428, CALCUTTA-6



பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

7. பேனாவைக் காணோம்!

மறுநாள் அதிகாலையில் மதுரநாயகம் எழுந்தார். உடனே, ரமணி வழக்கமாகப் படுக்கும் வெளித் திண்ணைக்கு வந்து பார்த்தார். அங்கே அவன் இல்லை! 'என்ன! இரவு சாப்பிட வரவில்லை. படுக்கவும் வரவில்லையே! அவன் ரோஷக்காரனாயிற்றே! ஒரு வேளை, தற்கொலை......' இதற்குமேல் அவரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மனக் கலக்கத்துடனே காலை வேலைகளை முடித்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தார். அரைகுறையாகச் சாப்பிட்டு விட்டு அறைக்குள்ளே சென்றார். அவசரம் அவசரமாகச் சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டார். மேஜை அருகே சென்றார். மேஜை மேலிருந்த கடிகாரத்தை எடுத்தார்; கையிலே கட்டிக் கொண்டார். மணிபர்ஸை எடுத்தார்; சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார். இன்னும் ஏதோ ஒன்றை அவர் எடுக்கப் போனார். ஆனால், அதை அங்கே காணவில்லை! உடனே சட்டைப் பையைத் தடவிப் பார்த்தார். அங்கும் இல்லை. ஜன்னல், மேஜை அறை, அலமாரி எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்து விட்டார். அந்த அறை முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. உடனே அவர் அளவற்ற ஆச்சரியத்துடன், "எங்கே போய் விட்டது என் பேனா? தங்கமூடி போட்ட 'எவர் ஷார்ப்' பேனாவைக் காணோமே!" என்று இரைந்து கூறினார்.

சத்தத்தைக் கேட்டதும், அவர் மனைவி கமலாதேவி அங்கே ஓடி வந்தாள். விஷயத்தை அறிந்தாள். உடனே, "நல்ல பையனும் நல்ல பையன்! அந்த நாசமாய்ப் போனவன்தான் இதையும் எடுத்துக் கொண்டு தொலைந்திருப்பான். நேற்றுச் சாயங்காலம் நீங்கள் இல்லாத சமயம் பார்த்து வந்தானே, இதைத் திருடிக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறான்! ஐயோ! பேனாவை மட்டும்தான் எடுத்தானா? இன்னும் என்ன என்ன சாமான்களையெல்லாம் எடுத்திருக்கிறானோ!" என்று திட்டிக் கொண்டே அறையிலிருந்த சாமான்களையெல்லாம் சரிபார்க்க ஆரம்பித்து விட்டாள்!

'பேனாவைக் காணோம்!' என்றதுமே மதுரநாயகம் அதிர்ச்சி யடைந்தார். 'ரமணிதான் அதைத் திருடியிருக்க வேண்டும்' என்று கமலா தேவி சொன்னதும், அவருடைய அதிர்ச்சி இன்னும் அதிகமாகியது!

"ரமணியா பேனாவைத் திருடியிருப்பான்?" என்றார் தாழ்ந்த குரலில்.

"பின்னே, கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு அயலூரிலிருந்தா திருடன் வருவான்? இவனைத் தவிர வேறு யார் எடுத்திருப்பார்கள்? சம்பளம் கொடுத்த சபாவிலே பட்டுத் துணியைத் திருடினான்; சாப்பாடு போட்ட வீட்டிலே தங்கப் பேனாவைத் திருடினான்! அந்தப் பட்டுத் துணிகூட முப்பது நாற்பது ரூபாய்க்குள்ளேதான் இருக்கும். இந்தப் பேனா கிட்டத்தட்ட நூறு ரூபாய் இருக்காதா? அட பாவிப் பையா! அன்னம் இட்ட வீட்டிலேயா கன்னம் வைப்பது?" என்று இரைந்து பேசினாள் கமலா தேவி.

மதுரநாயகத்துக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பேசாமல் தலையை விரல்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டு அவர் நாற்காலியில் உட்கார்ந்து விட்டார்.

"நாயைக் கொண்டு வந்து நடுவீட்டிலே வைத்துச் சாப்பாடு போடச் சொன்னீர்களே! வளர்த்த கடா மார்பிலே பாய்வதுபோல், நம்மிடமே அவன் கைவரிசையைக் காட்டி விட்டானே!" என்று கமலா தேவி மேலும் பேசினாள்.

மதுரநாயகம் ஏதாவது பதில் சொல்லுவார் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால், அவர் எதுவுமே சொல்லவில்லை. மௌனமாகவே உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"நேற்று ராத்திரி நீங்கள் என்ன சொன்னீர்கள்? 'நான் மேஜை மேல் பேனாவை வைக்கிறேன்; கடிகாரத்தை வைக்கிறேன்; மணிபர்ஸை வைக்கிறேன். அவன் எதையாவது எடுத்திருக்கிறானா?' என்று கேட்டீர்களே, இப்போது என்ன சொல்லுகிறீர்கள்? சரி, அதெல்லாம் போகட்டும். இனிமேல், நடக்க வேண்டியதைப் பார்க்க வேண்டாமா? இப்படியே சும்மா உட்கார்ந்திருந்தால், உங்கள் முன்னால் அந்தப் பேனா தானாக வந்து நிற்குமா? எப்படியாவது அவனைத் தேடிப் பிடித்துப் பேனாவை வாங்கிக் கொண்டு, ஆத்திரம் தீர அவனுக்கு முதுகிலே நாலு வைக்க வேண்டாமா? எங்கேயிருந்தாலும் விடாப்பிடியாகத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்துவிட வேண்டும்."

கமலா தேவி இப்படிக் கூறிக்கொண்டிருக்கும் போது, அங்கே வந்தார் பக்கத்து வீட்டுப் பாஸ்கரன். 'ஒசி'யில் பத்திரிகை படிக்கத் தினமும் காலையில் தவறாது அவர் அங்கு வந்து விடுவார்! கமலாதேவி சொன்ன கடைசி வாக்கியம் மட்டுமே அவர் காதில் விழுந்தது போலிருக்கிறது. உடனே அவர், "தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமா? எதை? உங்கள் நாய்க்குட்டி 'ஜிம்மி' காணாமல் போய் விட்டதா?" என்று அநுதாபத்துடன் கேட்டார்.

"அந்த நாய்க்குட்டிக்கு இருக்கும் விசுவாசம்கூட ஆறு மாதமாக இந்த வீட்டிலே வேளா வேளைக்குத் தின்று வளர்ந்த ரமணிக்குக் கிடையாதே! அவன் செய்த வேலையைக் கேளுங்கள். நேற்று சபாவிலே இருந்த பட்டுத் துணியைத் திருடப் பார்த்து அகப்பட்டுக் கொண்டு விட்டான். ஆனால், அவன் திருடியிருக்கவே மாட்டான் என்று இவர் முதலாளியிடம் சொன்னாராம். முதலாளி என்ன, சாமானியப்பட்டவரா? அவர் ரமணிதான் திருடியிருக்க வேண்டும் என்று முடிவு கட்டி, உடனேயே அவன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விட்டார். பிறகு அவன் இவர் இல்லாத சமயம் பார்த்து இங்கே வந்து, மேஜை மேல் இருந்த தங்கப் பேனாவுடன் ஓடிப் போய் விட்டான்... ஐயோ! அது எவ்வளவு நல்ல பேனா!" என்று பாஸ்கரனிடம் பரிதாபத்துடன் சொன்னாள் கமலா தேவி.

உடனே பாஸ்கரன், "சரிதான். நான் அவன் இந்த வீட்டுக்கு வந்தவுடனே சந்தேகப்பட்டேன். நான் நினைக்கிறது எப்போதுமே சரியாகத்தான் இருக்கும். இந்தக் காலத்தில் எல்லாம் அளவோடு தான் இருக்க வேண்டும். கொஞ்சம் இடம் கொடுத்தால் ஆபத்துத்தான்!" என்று கூறிக் கமலாதேவியின் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

பாஸ்கரனுக்கு ரமணி என்றாலே பிடிக்காது. ஏன்? அவர் தின்கிற சோற்றிலே ரமணி மண்ணை வாரிப் போட்டானா? இல்லை. ஆனாலும், காரணம் இருக்கிறது. ஒரு நாள் பாஸ்கரன் கடைக்குப் போய் 'சிகரெட்' வாங்கி வரும்படி ரமணியிடம் கூறினாராம். அதற்கு அவன், "சார், நீங்கள் என்ன வேலை வேண்டுமானாலும் சொல்லுங்கள்; செய்யத் தயார். ஆனால், தயவு செய்து 'சிகரெட்' வாங்க மட்டும் என்னை அனுப்பாதீர்கள். இந்தக் கெட்ட பழக்கத்துக்கு நான் உதவ மாட்டேன்" என்று சொல்லி விட்டான். உடனே பாஸ்கரனுக்குக் கோபம் வந்து விட்டது. "சுத்த அதி




கேச விருத்திக்கும் முக
மலர்ச்சிக்கும்
ஸ்வஸ்திக்
வாஸலீன் கேஸ்டர் ஆயில்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் தயாரிப்பு.
S.O.M. 243 Tam



பர்மாவில்
மாண்டலே
பௌண்டன் பேனாக்களில்
ஓர் புகழ் பெற்ற பெயர்...
FIRST WITH THE
FINEST IN
FOUNTAIN PENS
Mercury
ரூ. 6/-
தயாரிப்பாளர்கள் :
பிரகாஷ் பேட்டன்ட் ஒர்க்ஸ், பம்பாய்-4

சிறுவர்கள் சித்திரப்போட்டி



ரூபாய் ஐந்து பரிசு பெற்றவர்கள்: *1. என். ராதா, வயது 9½, மாதுங்கா, பம்பாய்—19; 2. எஸ். வி. ஹரிகிருஷ்ணன், வயது 11, மதுரை; 3. ப. சௌந்தரராஜன், வயது 11, பாமினி, திருத்துறைப்பூண்டி ;*

கப் பிரசங்கி!" என்று திட்டி விட்டு, மதுரநாயகத்திடம் விஷயத்தைக் கூறினார். அதற்கு மதுரநாயகம், "பாஸ்கர், என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். சிகரெட் பிடிக்க மாட்டேன். பொடி, புகையிலை போட மாட்டேன். காப்பி கூடக்குடிக்க மாட்டேன். என்னிடம் பழகியவன் எப்படி யிருப்பான்?" என்று சிரித்துக் கொண்டே வேடிக்கையாகக் கூறினார். ஆனால், பாஸ்கரன் சிரிக்கவில்லை. 'சமயம் வரும், அப்போது இந்தப் பொடியனை ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்' என்று கருவினார். அந்தச் சமயம் இப்போது வந்திருக்கிறதே! அவர் சும்மா இருப்பாரா?

"எவ்வளவு செல்லமாக வளர்த்தோம். இப்படி மோசம் செய்து விட்டானே பாவிப் பையன்!" என்று அங்கலாய்த்தாள் கமலாதேவி.

"ஒன்றும் கவலைப்பட வேண்டாம். நான் சொல்கிறபடி செய்தால் சீக்கிரம் பேனா கிடைத்து விடும். உடனே பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டியது. ஒரு 'ரிப்போர்ட்' கொடுக்க வேண்டியது. எங்கிருந்தாலும் அந்தப் பயலைச் சின்னடைப் பிடித்துக் கொண்டு வந்து விடுவார்கள். மதுரநாயகம்! ஏன் இப்படிப் பிடித்து வைத்த பிள்ளை யார்போல் இருக்கிறாய்? உடனே எழுந்திரு. 'ரிப்போர்ட்' கொடுத்து விட்டு வரலாம்" என்றார் பாஸ்கரன்.

இதைக் கேட்டதும், இதுவரை மௌனமாயிருந்த மதுரநாயகம், "என்ன! போலீஸிலே ரிப்போர்ட் கொடுக்கிறதா?" என்று கேட்டார்.

"பின்னே, பொட்டுக் கடைக்காரனிடமா 'ரிப்போர்ட்' கொடுப்பது? என்னப்பா யோசிக்கிறாய்? எழுந்திரு. எனக்கு இந்த 'டிவிஷன்' போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரைத் தெரியும். ரிப்போர்ட் கொடுத்ததும், அவர் நாலாபக்கமும் ஆட்களை அனுப்பி அவனை உடனே பிடித்து வரச் சொல்லுவார். அவன் எங்கே போவான்? இந்தப் பட்டணத்தில் தானே அந்தப் பேனாவை விற்க வேணும்?" என்றார் பாஸ்கரன். (தொடரும்)

மூவர் ஒற்றுமை!

ரஜனி

இலங்கைத் தமிழ் மக்களுக்கு நல்ல காலம் வந்து விட்டதென்று நினைக்க நம்பிக்கையான சில அறிகுறிகள் இப்பொழுது தென்பட ஆரம்பித்திருக்கின்றன. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட காலத்தில் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் தமிழ் மக்கள் ஒரு கட்டுப்பாடு மிக்க கோஷ்டியாக விளங்கினர். அப்பொழுது எதற்கும் அஞ்சாத ஸ்ரீ டி.எஸ். சேனநாயகாவே தமிழ் காங்கிரஸின் பலத்தைக் கண்டு அஞ்சினார். தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி சிறுபான்மை வகுப்பினர் அனைவருடைய சார்பிலும் பேசும் பிரதிநிதித்துவமும் பலமும் பொருந்திய ஸ்தாபனமாகத் திகழ்ந்தது. ஸ்ரீ பொன்னம்பலம் மந்திரி பதவியை ஏற்றுச் சர்க்கார் கட்சியில் சேர்ந்தவுடன் தமிழ்ச் சமூகம் பிளவுபட்டுப் பலம் இழந்து வீழ்ச்சியுறத் தலைப்பட்டதெனலாம்.

காங்கிரஸின் கொள்கையை ஆட்சேபித்துத் தமிழ் அரசுக் கட்சி உதயமாயிற்று. சில சுயேச்சைவாதிகளும் தனியாகத் துண்டித்துக் கொண்டு நின்றார்கள். இவர்களுக்கிடையில் நடைபெற்ற கட்சிப் பிரதி கட்சி விவாதங்கள் தமிழ் மக்களுக்குக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரியிருந்தது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது என்பதைப் போல இந்த நிலைமையைச் சர்க்கார் கட்சி நன்கு பயன்படுத்தித் தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் நசுக்க அடுத்தடுத்துப் பல நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தார்கள்.

அபாயங்கள் சூழ்ந்த இந்தக் கடைசி நேரத்தில் தமிழ் மக்களின் மூன்று முக்கிய தலைவர்களான தமிழரசுக் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ். வன்னிய சிங்கம், தமிழ் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம், சுயேச்சைவாதி ஸ்ரீ எஸ். சுந்திரலிங்கம் ஆகிய மூவரும் கொள்கையளவில் ஒற்றுமைப் பட்டிருப்பது வரவேற்கத் தகுந்த செய்தி.


* * *

சர்க்காருடன் ஒத்துழைக்கும் கொள்கை நல்லதா என்பதைப் பற்றித் தமிழ் அரசுக்கட்சியுடன் பகிரங்க மேடையில் விவாதிக்கத் தாம் தயாராயிருப்பதாயும் தைரியமிருந்தால், இவ்வித பகிரங்க விவாதம் நடத்தத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் முன் வரட்டுமென்றும் வெளி நாட்டுப் பாதுகாப்பு இலாகா பார்லிமென்டரிக் காரியதரிசி ஸ்ரீ வி. நல்லையா சென்ற வாரம் சவால் விடுத்திருந்தார். இந்தச் சவாலைத் தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ் அரசுக் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ். வன்னிய சிங்கம் இவ் வாரம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது சர்க்காருடன் ஒத்துழைக்கும் தமிழ்த் தலைவர்களோடு எந்தப் பகிரங்கக் கூட்டத்திலும் விவாதிக்கத் தயாராயிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் உதவி நிதி மந்திரியான ஸ்ரீ வி. குமாரஸ்வாமி யாழ்ப்பாண தீபகற்பத்தில் சர்க்கார் கட்சியின் கிளை ஸ்தாபனங்களை ஒவ்வொரு ஊர்களிலும் நிறுவிச் சர்க்காருடன் 'ஒத்துழைப்பதைப் பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்த வண்ணமிருக்கிறார்.

* * *

கோவா பிரச்னையில் இந்தியாவின் கட்சியை ஆதரித்தும் போர்ச்சுகீஸிய வெறியர்களின் மிலேச்சத்தனத்தைப் பலமாகக் கண்டித்தும் இலங்கைப் பத்திரிகைகளெல்லாம் தலையங்கம் எழுதியிருக்கின்றன. குடியேற்ற நாட்டு ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று பாண்டுங் மகாநாட்டில் செய்த தீர்மானத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர இது ஒரு அருமையான சந்தர்ப்பமென்றும் கோவாவிலிருந்து போர்ச்சுகீஸிய வெறியர்களை வெளியேற்றக் கொழும்பு மகாநாட்டு அரசுகள் இப்பொழுது கட்டுப்பாடான நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்றும் இலங்கைப் பத்திரிகைகள் வற்புறுத்தியிருக்கின்றன.



ஆசியாவிலேயே முதன்மையான கோதுமை மாவுமில் ஒன்று சென்னைக்கு அருகில் உள்ள பெரம்பூரில் இருக்கிறது. "ஸெஞ்சுரி மாவுமில்" என்ற பிரசித்தி பெற்ற இந்த மில்லுக்கு கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா சென்ற எட்டாந் தேதி விஜயம் செய்தார். மேற்படி மில்லின் மானேஜிங் டைரக்டர் திரு பெ. மருதைப் பிள்ளை கவர்னருக்கு ஜரிகை மாலை சூட்டிக் கைகுலுக்கி வரவேற்பதையும், அவருக்கு அருகில் மலர்ந்த முகத்துடன் அந்த மில்லின் டைரக்டர்களில் ஒருவரான டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.



கண்ணாடியில் உங்கள் உருவம்

உங்கள் சருமமும் மேனியும் ரக்ஷித்து போஷிக்கப்பட வேண்டியது அவசியம். சருமத்தை போஷிப்பதற்கு மார்க்கம் ஒன்றே என்று புத்திசாலியான பெண்கள் அறிவார்கள். தினம்தோறும் இவர்கள் ''ஹாஸலீன்' ஸ்னோ'' வை '' 'HAZELINE' SNOW'' தங்களுடைய மிருதுவான சருமத்தில் உபயோகித்து நெகிழச் செய்கிறார்கள். இது சருமத்தில் இயல்பாகப் பொருந்தி சருமத்திற்கு மிருதுத்தன்மை வெண்மை, காந்தி இவைகளை அளிக்கின்றது.



"'HAZELINE' SNOW"

(TRADE MARK)

"'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்)

பர்ரோஸ் வெல்கம் அண்ட் கம்பெனி (இந்தியா) லிமிடெட், பம்பாய்.



20. மலைப் பளிஞர்

மலைக்குள் மலை நடுவே
மலையான தேசமப்பா
மலையான தேசம் விட்டு
மயிலேறி வருவாயப்போ
அரகரா அரகரா அரோகரா!

ஏருத மலை ஏறி
எருது ரெண்டும் தத்தளிக்க
பாராமல் கை கொடுப்பாய்
பழநிமலை வேலவனே
அரகரா அரகரா அரோகரா!

என்று பாடிக் கொண்டே ஐந்தாறு பரதேசிகள் பாபநாசத்து மலையிலே கல்யாண தீர்த்தத்தைத் தாண்டி நடந்து கொண்டிருந்தார்கள்.

"என்ன பழனிப் பண்டாரம்! கால் கடுக்குதோ!" என்று பழனிப் பண்டாரத்தைக் கேட்டுக் கொண்டே சட்டிப் பரதேசி அந்த மலைப் பாதையிலே நின்று விட்டார். சற்றும் தயங்காமல் வேகமாகப் படர்ந்து கொண்டிருந்த பழனிப் பண்டாரத்துக்கோ கால் வலிப்பதாகவே தெரியவில்லை! விறுவிறு என்று மேலே நடந்து மலைப் பாதையிலே மறு பக்கம் திரும்பி மறைந்து விட்டார்.

"என்ன சட்டிப் பரதேசி! யாருக்குக் கால்கடுக்குதோஎன்று சொல்லுது!பழனிப் பண்டாரத்துக்கா! கேட்ட கேள்வியைக் கூடக் காதிலே வாங்கிக் கொள்ளாமல் அது போயிட்டுதே தொலை தூரம்!" என்றுசொல்லிக் கொண்டே பாறையிலே சட்டிப் பரதேசிக்கு அருகில் வந்து உட்கார்ந்து காலைச் கடக்குப் போட்டுக் கொண்டது இலஞ்சிப் பரதேசி.

"கால் கடுத்தது பழனிப் பண்டாரத்துக்கு இல்லை, சாமி! சட்டிப் பரதேசிக்குத்தான் கால் கடுக்குது! அதைப் பழனிப் பண்டாரத்தோட காலிலே ஏற்றிச் சொல்லுது! சட்டிப் பரதேசி இலக்கணம் படிச்சருக்குதுல்லே!" என்று சொல்லிக் கொண்டே தென்காசிச் சாமி இலஞ்சிச் சாமிக்குப் பக்கத்திலே வந்து நன்றாகச் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டது!
கடக்குப் போடுவதற்குக் கூட இயலாத படி அத்தனை வலி அதன் கால்களில்!

பின்னால் வந்த வாழைப் பழச் சாமி சிரித்துக் கொண்டே தென்காசிக்கும் இலஞ்சிக்கும் மத்தியிலே வந்து பத்மாசனம் போட்டு உட்கார்ந்தது. இவர்களுக்குப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த இன்னும் இரண்டு சாமியார்களும் இப்பொழுது அங்கே வந்து, சொல்லி வைத்தாற்போல் 'டக்' என்று உட்கார்ந்து கொண்டார்கள். எல்லாருக்குமே கால் நன்றாகக் கடுத்தது!

"பழனிப் பண்டாரம் வெகு தொலை போயிட்டுது போலிருக்கே! கண்ணுக்கு எட்டின தூரம் வரைக்கும் அந்தக் கட்டையைக் காணுமே!" என்று இழுத்தது சட்டிப் பரதேசி.

"சாமி! அந்தக் கமன ஓடியைக் கொஞ்சம் இப்படிக் கசக்கிக் கொடுக்கட்டும்!" என்று சொல்லிக் கொண்டே இலஞ்சிச் சாமி தென்காசிப் பரதேசியைப் பார்த்துக் கையை நீட்டியது.

"பழனிப் பண்டாரத்துக்கு மலையிலே நடந்து நடந்து பழகிப் போச்சு! திரும்பிக் கூடப் பார்க்காமல் அல்லவா அது பாட்டுக்கு நடக்குது! இரண்டு காலுமே அதுக்கு இரும்புக் கால்தான்!" என்று சொல்லியவாறு தோளில் தொங்கிக் கொண்டு கிடந்த காவிப் பையைக் கீழே பாறையின் மேலே வைத்து அதிலிருந்த கஞ்சா இலைகளை வெளியே எடுத்துக் கசக்கிற்று தென்காசிப் பரதேசி.

இதற்குள் கொஞ்ச தூரம் மலைமேலே நடந்து சென்றுவிட்ட பழனிப் பண்டாரம், சகாக்களைக் காணாமல் அதே பழைய வேகத்தோடு பின் திரும்பி வந்தது.

"அடடே! பழனியா! வாலிபக் கட்டையல்லவா அந்தச் சரீரம்! விறு விறு என்று நடக்குது! இந்தச் சடலங்களாலே அப்படி

முடியுமா! இப்படி வரட்டும் பழனிப் பண்டாரம்! உட்காரட்டும் பாறையிலே!" என்று பண்டாரத்தை உபசரித்து மலைப் பாறையிலே ஆசனம் வழங்கியது சட்டிப் பரதேசி.—எப்படியும் அது கொஞ்சம் உட்கார்ந்தால் போதும் என்ற நினைப்பிலே!

இப்பொழுது அந்த ஆறு சாமியார்களுமே பொதிகை மலையின் பாறையிலே உட்கார்ந்துகொண்டு, 'கமன ஓடி' என்று புனிதமாக அவர்களால் நாமகரணம் சூட்டப்பட்ட அந்தக் கஞ்சா இலையைக் கசக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது பழனிப் பண்டாரம் சொல்லிற்று: "என்ன தென்காசிச் சாமி! வர வர அந்தச் சடலத்துக்கு ரொம்பச் சிக்கனம் ஏற்பட்டு விட்டது போலிருக்கிறதே! ஏஞ்சாமி, இன்னும் பத்து மைல் நடந்து போனால், சொக்கப்பன் புண்ணியத்திலே செடி செடியாப் பறிக்கலாமே சாமி கமன ஓடியை! இதற்கு ஏன் இத்தனை தரித்திரம் இப்போ! கூடத்தான் ஒரு ஏழெட்டு இலையைச் சேர்த்து வைத்துக் கசக்கட்டுமே!"

சாமியார்கள் இப்படி அஃறிணைப் பாவையிலே பேசிக்கொண்டே கஞ்சாக் குடிக்க ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது அந்த இடத்தை நோக்கி வேகமாக ஒரு வாலிபன் நடந்து வந்துகொண்டிருந்தான்.

"சாமி! வேற்று ஆள் வாடை அடிக்குது போலிருக்கிறதே! குழாயைத் தட்டிப் பைக்குள்ளே போட்டு விடட்டுமா?" என்று கொஞ்சம் மெதுவாகக் கேட்டது தென்காசிச் சாமி.

"சிவோகம்! முருகானந்தம்! சச்சிதானந்தம்! இங்கே கொடுக்கட்டும் குழாயை! உங்களுக்குப் பயமாக இருந்தால், வேற்று ஆளையும் அன்னிய மனிதனையும் இந்தக் கட்டை ஒரு கை பார்த்துக் கொள்ளும்! அஞ்சேல்!" என்று தீர்மானத்தோடு சொல்லிற்று இலஞ்சிப் பரதேசி. கஞ்சாவின் புகை அத்தனை வேலை செய்துவிட்டது அதற்குள்ளே!

இதற்குள் அந்த வாலிபன் சாமியார்களின் கூட்டத்துக்குப் பக்கத்திலேயே வந்து விட்டான்.

"தம்பீ! யாரப்பா நீ?" என்று கம்பீரமாகக் கேட்டது இலஞ்சிப் பரதேசி. கஞ்சாவின் போதை, குரலிலே மிடுக்கேற்றி விட்டிருந்தது. ஒரு கிறக்கம், ஒரு மயக்கம், அதில் ஒரு உறக்கம்—அப்படியிருந்தது பண்டாரத்தின் போதையான பேச்சு!

வந்து நின்ற வாலிபன் சாமியார்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு விட்டான்.

"எனக்கு இந்தப் பக்கம்தான் சாமிகளே! தெற்கு மலைக்குப் போகிறேன்" என்றான் வாலிபன்.



"தெற்கு மலைக்கா? நீலகண்டன் கசத்தையும் தாண்டியா?" என்று கேட்டது தென்காசிச் சாமி.


"ஆமா சாமி. கஞ்சாத் தோப்பையும் தாண்டிப் பளிஞர் குடியிருப்புக்குப் போகிறேன்!" என்றான் அந்த வாலிபன்.

"ஓ! அப்படியா! சொக்கி குடியா?" என்று கேட்டது இலஞ்சிப் பரதேசி.

"அடே! சொக்கி குடி தெரியுமா சாமிக்கு?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் வாலிபன்.

இலஞ்சிச் சாமியைப் பார்த்துக் கேட்ட இந்தக் கேள்விக்குச் சட்டிப் பரதேசி பெருமையோடு பதில் சொல்லிற்று. "தம்பீ, நம்ப சாமிக்கு இலஞ்சிதான் ஊரு தம்பி! இந்த வட்டகையெல்லாம் தலைகீழ்ப் பாடம் அதுக்கு!"

இலஞ்சிச் சாமிக்கு முகம் முட்டச் சிரிப்பு வந்தது. கஞ்சாவின் புகை மண்டைக்குள்ளே போய்க் கண் வழியாக வெளியே வருவது போல இரண்டு கண்



களும் 'ஜிவு ஜிவு' என்று இருந்தன. இப்பொழுது சிரிப்பும் சேர்ந்து கொள்ளவே வார்த்தைகள் ஒரு தனியான ஆனந்தத்தோடு புறப்பட்டு வந்தன.

"தம்பி! இந்தக் கட்டைக்குச் சொக்கி குடியும் தெரியும். அதுக்கு நாயகனை சொக்கப்பனையும் தெரியும்! அதிகம் சொல்லுவானேன்! அவன் புண்ணியத்திலேதான் தம்பீ இந்த நமனை ஓடி நிரந்தரமாக நம்மைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது. ஒரு குறையுமில்லை முருகானந்தம்! ஷண்முகா! ஞான பண்டிதா!" என்றது இலஞ்சிச் சாமி.

"சாமிகள்! இப்போ இந்தப் பக்கமாக எங்கே புறப்பட்டது?" என்று தானும் அந்த அஃறிணைப் பேச்சை ஆரம்பித்தான் வாலிபன்.

"மூலிகை 'ஸ்டாக்' தீருகிற சமயம். சொக்கப்பனைப் பார்த்து விட்டு வரலாம் என்று இப்படி ஒரு கோஷ்டியாகக் கிளம்பியிருக்கிறோம்!" என்றது இலஞ்சி.

"நானும் சொக்கி குடிக்குத்தான், சொக்கப்பனிடந்தான், போகிறேன்!" என்றான் வாலிபன்.

"முருகானந்தம்! சச்சிதானந்தம்! சிவோகம்! தம்பீ! நீயும் நம்முடைய கோஷ்டியிலே சேர்ந்தாச்சா! சபாஷ் முருகையான்னுன்! அப்போ நாம் புறப்படுவோமா பழனிப் பண்டாரம்?" என்று கேட்டுக் கொண்டே குமாயைத் தட்டிப் பைக்குள்ளேபோட்டது தென்காசிச் சாமி.

காலகளை மறந்து விட்டு, கோஷ்டி மறுபடியும் யாத்திரையைத் தொடங்கிற்று. வாலிபனும் சாமியார்கள் கூட்டத்தில் சேர்ந்து சொக்கிகுடியை நோக்கி வழி நடக்க ஆரம்பித்தான்.

*   *   *

பொதிகை மலைச் சாரலில், அகத்திய முனிவரும் நவகோடி சித்தர்களும் நடமாடிப் புனிதம் விளைந்த பாபநாச நிரத்தில், மலையும் காடுகளும் அருவிகளுமாக அழகுக் காட்சி தரும் இயற்கையின் சுந்தரச் சூழ்நிலையில் கல்யாண தீர்த்தத்திலிருந்து பத்து மைல்களுக்கு அப்பால் மலைக்குள்ளே பளிஞர்களின் குடியிருப்பு இருந்தது. 'பளிஞர்' என்றும் 'புளிஞர்' என்றும் 'பளியர்' என்றும் அழைக்கப்படுகிற மலைஜாதியினரின் குடியிருப்பு அது. அதன் தலைவன்தான் சொக்கப்பன். அவனுடைய வட்டகையில் ஏராளமாக வளர்ந்து நின்ற கஞ்சாச் செடிகளுக்கு ஆசைப்பட்டுத்தான் சாமியார்கள் இவ்வளவு சிரத்தையோடு இப்பொழுது மலைப் பாதையிலே நடந்தார்கள்.

சொக்கப்பனுடைய வட்டகையில் கஞ்சாவின் போதையைவிட அதிகமாகப் போதை தரும் ஒரு பூங்கொடி வளர்ந்திருந்தது. அந்தப் பூங்கொடிக்குச் சொக்கி என்று பெயர்.

நாகரிகம் என்ற பெயரில் இயற்கையான எழிலைப் பூச்சுக்களாலும் பொடிகளாலும் போர்த்தி மூடிவிட்டுச் செயற்கை அழகு என்ற போர்வையிலே வளைய வரும் பெண்ணில்லை அவள். செயற்கை அலங்காரமும் வெளிப் போர்வைகளும் இல்லாத ஒரு கோயிலின் சிற்பக் கன்னியைப் போல அந்த மலைக் காட்டிலே ஒய்யாரமாக வளையவரும் வனதேவதை அவள். சங்கு வளையல்களும், புலித் தோலும், பாம்புச் சட்டையும், மானினுடைய மேனி மூடாக்குமாக அவள் மான்களோடு மானாகவும், பெண் புலியோடு பெண் புலியாகவும், சில சமயங்களில் மயில்களோடு மயிலாகவும் உலாவி வருவாள்.



மதம் பிடித்துத் திரியும் யானைகளும்கூட அவளுடைய குரலிலே கிறங்கி நிற்கும். படம் எடுத்தாடும் பாம்பு அவளுடைய ஸ்பரிசம் பட்டால் தாம்புக் கயிறாகக் கீழே படுத்து விடும். சீறுகிற புலிகள் எல்லாம் அவளைக் கண்டால் நாய்க் குட்டியைப் போல வாலைக் குழைத்து நிற்கும். மான்கள் எல்லாம் அவளுடைய தெம்மாங்குப் பாடலைக் கேட்டுப் புல்லாங்குழலின் ஓசையிலே கவரப்பட்டு வருகிற ஆட்டு மந்தையைப் போல அவளைச் சுற்றிக் கூடும். அவளுடைய நடை சில சமயங்களில் பாறைகளிலே தத்தித் தத்தி ஓடும் சிற்றோடையைப் போல் துள்ளிச் செல்லும். சில சமயங்களில் காட்டுத் தண்ணீரிலே மிதந்து செல்லும் வனவாத்தைப் போல மிதப்பு நடை போடும்! மற்றும் சில சமயங்களில் அவள் நடந்து செல்வதைப் பார்த்தால், புள்ளி மான் குதிப்பது போலவும், புலி பாய்வது போலவும், காட்டு யானை வேகமாகப் படர்வது போலவும் இருக்கும். அவளுடைய உள்ளமோ ஒரு வானவில். அதன் வர்ண ஜாலங்கள் எல்லாம் அவளுடைய நடையிலும், பேச்சிலும், மேனியின் மெய்ப்பாட்டிலும் பிரதிபலிக்கும். பளிஞர்கள் எல்லாரும் வள்ளியம்மையே தங்கள் தலைவனுக்குக் கருணை கூர்ந்து செல்வமகளாக வந்து பிறந்திருக்கிறாள் என்று சொல்லுவார்கள்.

இப்படிப்பட்ட கன்னி சொக்கி பௌர்ணமி அன்று மாலையிலே மலை நீரோடையின் கரை வழியாகப் பெரிய ஆண் யானை ஒன்றை அதன் கொம்பைப் பிடித்து நடத்திக் கொண்டு குடியிருப்பிலிருந்து சற்றுத் தொலையிலே உள்ள நிலாக் காட்டுக்குச் சென்று கொண்டிருந்தாள். அப்போது, திடீரென்று கொம்பு ஊதும் சத்தம் கேட்டது. பளிஞர் குடியிருப்பிலிருந்துதான் வந்தது அந்தக் கொம்பின் ஒலி. ஐந்து ஐந்து தடவையாக மூன்று தரம் கேட்டது அந்த ஓசை.

சொக்கி திகைத்து நின்றாள். அவளைப் போலவே யானையும் திகைத்து நின்றது. ஏனென்றால் கொம்பின் பாஷை சொக்கியைப் போலவே அவளுடைய கொம்பன் யானைக்கும் தெரியும்.

பௌர்ணமி இரவுகளில் பளிஞருடைய குல வழக்கப்படி நிலாக் காட்டை நோக்கிக் கன்னிப்பெண்கள் செல்வார்கள். மலையருவி ஒன்று அங்கே 'கல கல' வென்ற இனிய ஒலியோடு விழுந்து, ஒரு சிற்றோடையாக ஓடுகிறது. அதன் கரையில் செண்பகக் காடு அடர்ந்திருக்கும். அதிலிருந்து வருகிற மணம் அந்த ஓடைப் பிராந்தியம் முழுதும் கம கம என்று இதயத்தை நிரப்பி வாசம் கமழச் செய்யும். இந்தப் பிரதேசத்திலேதான் உயரமான 'நிலவுப் பாறை' ஓடையின் தண்ணீருக்குள் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறது. இதன்மேல் அமர்ந்துதான் பளிஞர் குலத்தின் கன்னிப் பெண்கள் தங்களுடைய எதிர் காலக் கணவர்கள் நல்ல வீரர்களாக விளங்க வேண்டும் என்று பௌர்ணமி இரவுகளிலே பாட்டுப் பாடிப் பிரார்த்தனை செய்வார்கள். இந்த வைபவம் ஒவ்வொரு பௌர்ணமியிலும் நடைபெறும். ஆடவர்கள் யாரும் இதில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. சொக்கிகுடி என்ற குடியிருப்பு ஒன்றிலேதான் இந்த விநோதமான பழக்கம் இருந்து வந்தது.

இந்தப் பழக்கம் தொடர்ந்து தவறாமல் நடந்து வந்ததற்கு முக்கிய காரணம் சொக்கி இந்த விழாவிலே உற்சாகமாகக் கலந்து கொண்டதுதான். பௌர்ணமியில் சந்திரன் உதிக்கத் தவறினாலும் சொக்கி 'நிலாப் பாறை'க்குச் செல்லத் தவறுவதில்லை. அத்தனை கண்டிப்பு அவளுக்கு!



இந்த நிலையிலே தான் இப்படி எதிர்பாராத விதமாக அந்தக் கொம்பொலி இப்பொழுது கேட்டது! சொக்கிக்கு ஆச்சரியத்தை விடத் தன் தகப்பனிடம் கோபமே உண்டாயிற்று. ஏனென்றால், ஐந்து ஐந்து ஒலியாக விட்டு விட்டு மூன்று முறை அந்தக் கொம்பு ஒலிக்குமேயானால், சொக்கி குடியின் பளிஞர்கள் — ஆண்கள் பெண்கள் — எல்லாருமே உடனே எங்கிருந்தாலும் ஓடோடிச் சென்று தலைவனுடைய குடிசைக்கு முன்னால் கூடிவிட வேண்டும். அத்தனை கண்டிப்பான கட்டளை—ஒலி அது! அப்படிப் பட்ட ஒலி இன்று நிலவு விழாவுக்கு இடையூறாக ஒலித்தது என்றால் எப்படியிருக்கும் சொக்கிக்கு!

கோபம் உண்டானபோதிலும், சொக்கி அந்தக் கொம்பொலியை அலட்சியம் செய்ய விரும்பவில்லை. தானே அதற்கு மதிப்புக் கொடுக்கவில்லையென்றால் அது எத்தனை பிசகு! இவ்வாறு எண்ணியவளாகச் சொக்கி தனது கோபத்தை அடக்கிக் கொண்டு யானையின் கொம்பைப் பிடித்தவாறு, 'கதி கரும் கபு' என்றாள். ஏற்கனவே நடந்து செல்வதை நிறுத்தி உத்தரவுக்காகக் காத்திருந்த அந்த மாபெரும் யானை இப்பொழுது வந்த வழியாகத் திரும்பி நின்று கொண்டது. உடனே சொக்கி அதைப் பார்த்து "கதூ கக் கரு" என்றாள். உடனே அந்த யானை தனது முன் காலைத் தூக்கிப் பாதத்தை வளைத்தது. அப்படியே சொக்கி ஒரு துள்ளுத் துள்ளி ஏதோ படியிலே ஏறிச் செல்வது போல அந்த யானையின் பாதத்தில் ஒரு மிதி மிதித்து அடுத்த துள்ளிலே அதன் முதுகிலே போய் உட்கார்ந்து கொண்டாள். "கவே கக கமா கபோ" என்றாள் சொக்கி. அவ்வளவுதான். இது யானையா அல்லது ஆகாய விமானமா என்று அதிசயிக்கும்படியாக அந்த யானை காற்றாகப் பறந்தது!

சொக்கப்பனுடைய தலைமைக் குடிசைக்கு முன்பாக ஒரே கூட்டம். பளிஞர் குலத்தின் ஆண்களும் பெண்களும் தேனீக்களாக மொய்த்து நின்றார்கள். அந்தக் கூட்டத்தைக் கண்டதும் யானை ஒருதரம் பிளிறிற்று. அப்படியே கூட்டம் இரண்டு கூறாகப் பிரிந்து நின்று கொண்டு, சொக்கிக்கு வழி விட்டது.

தன்னுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தகப்பனைக் கண்டதும் சொக்கி அப்படியே யானையின் மேலிருந்து ஒரு குதி குதித்து வந்து உடம்பை வளைத்து மண்டியிட்டுத் தரையை ஒருதரம் வலது உள்ளங்கையினால் தொட்டுவிட்டு எழுந்து நின்றாள். முகத்தில் மட்டும் கோபக் குறி தெரிந்தது. சொக்கப்பன் தன் மகளுடைய கோபத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டு சிரித்தவாறு குடிசைக்கு வலதுபுறம் கையைக் காட்டினான். அங்கே ஐந்தாறு சாமியார்களும் ஒரு வாலிபனும் நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த வாலிபனைப் பார்த்ததும் சொக்கிக்கு விஷயம் புரிந்து விட்டது. மாதத்துக்கு ஒருமுறை திருச்சியில் தனது அத்தான் கந்தப்பனிடமிருந்து செய்தி கொண்டு வருகிற ஆள் அவன்!

சொக்கிக்கு இப்போது கோபம் எல்லாம் மறைந்து முகத்திலே கோபத்துக்குப் பதிலாகப் பெரிய துக்கம் படர்ந்தது. அத்தானிடமிருந்து ஏதோ செய்தி வந்து அதன் நிமித்தமாக அல்லவா இப்பொழுது இத்தனை அவசரமாக எல்லாரையும் கூட்டியிருக்கிறான் தன்னுடைய தகப்பன் என்று புரிந்து கொண்டதும், சொக்கிக்கு என்னவோ ஏதோ என்று கண் கலங்கியது. அந்த வாலிபனை என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிந்து கொள்வதற்காக ஆவலோடு பார்த்தாள். அவன் சொன்னான்.


"கந்தப்பன் சுகமாக இருக்குது அம்மா!"

இதைக் கேட்டதுந்தான் சொக்கி ஒரு பெருமூச்சு விட்டுக் காலைக் கீழே நன்றாகப் பாவிக் கொண்டாள். வாலிபன் தொடர்ந்து பேசினான்:

“கந்தப்பன் சுகமாக இருக்குது. ஆனால் அது தற்செயலாக ஒரு வீட்டுக்குள்ளே நுழையப் போக அங்கே யிருந்த நல்ல பாம்பு அதைக் கடித்து விட்டது!” என்றான் அவன்.

“பாம்பா!” என்று சொல்லிக் கொண்டே அநுதாபத்தோடு “உச் உச்” என்றாள் சொக்கி. அநுதாபம் பாம்பினிடத்திலேதான் என்பது அவளுடைய முகக் குறியில் தெரிந்தது.

“பாம்பு இறந்து போய் விட்டதால் இந்தச் சொக்கிகுடியின் வழக்கப்படி நாகருக்குப் பௌர்ணமி பூஜை போடும்படி கந்தப்பன் சொல்லி அனுப்பியிருக்குது!” என்றான் வாலிபன்.



சொக்கிக்கு மட்டுமில்லை, அங்கு கூடியிருந்தவர்கள் அனைவருக்குமே இப்பொழுது பயமும் பக்தியும் உண்டாகி விட்டன.

“சரி, சரி!” என்று பல நூறு குரல்கள் ஏக காலத்தில் கோஷமிட்டன.

“சொக்கி, நீ போய் உடனே முழுகிட்டு வரணுமாக்கும்!” என்றான் சொக்கப்பன். அவனுடைய குரலிலும் பேச்சிலும் இழைந்த மழலை ஒலியில் ஏதோ ஒரு விவரிக்க முடியாத கவர்ச்சி இருந்ததைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே சாமியார்களின் மத்தியிலே நின்ற சட்டிப் பரதேசி, இரண்டு அடி முன்னால் நடந்து வந்தார்.

“என்ன சட்டிப் பரதேசி! இலக்கணம் படிச்சிருக்குது அந்தக் கட்டை! இவர்களுடைய பாஷையை ஆராய்கிறதாக்கும்?” என்று ஒரு வேடிக்கையை வீசிக் கொண்டே தென்காசிச் சாமியும் இரண்டு அடி முன்னால் வந்து நின்று கொண்டது.

“தமிழ்தான் பேசுவார்கள் இந்தப் பளிஞர்கள். ஆனால் மலையாளம் போல் இருக்கும். அத்தோடு அங்கங்கே வருகிற கொச்சைச் சொற்களில் ஒரு கவர்ச்சியான மழலை ஒலிக்கும்!” என்று விளக்கம் கொடுத்துக் கொண்டே பழனிப் பண்டாரம் முன்னேறினார்.

“நம்ப ஆளுகளா! இப்பம் பூசைக்கு எல்லாரும் கூடேணுமாக்கும்!” என்றான் சொக்கப்பன்.

இந்தக் கட்டளை வந்த மறு விநாடி அந்தப் பளிஞர் கூட்டம் நீலவட்டியைக் கொண்டு கலைத்த தேனீக்களைப் போல இரைந்து கொண்டே கலைந்தது.

“என்ன சட்டி! ராத்திரி பூஜைக்குப் பிறகு நம்முடைய சொக்கப்பனுடைய தயவிலே மூலிகை ஏராளமாகக் கிடைக்கும். கவலைப்பட வேண்டாம், தெரிகிறதா!” என்று சொல்லிக் கொண்டே இலஞ்சிப் பரதேசி, சட்டியின் முதுகிலே ஒரு தட்டுத் தட்டியது. விஷயத்தைப் புரிந்து கொண்ட சொக்கப்பனும் சிரித்துக் கொண்டான்.

சொக்கிகுடியிலே உள்ள நாகர் பீடத்துக்கு முன்னால் பௌர்ணமி பூஜைக்காக ஒரே அமர்க்களமாக ஏற்பாடுகள் ஆரம்பமாயின. சொக்கி சிற்றோடைக்குப் போய்க் குளித்து விட்டு வருவதற்குள், பீடத்துக்கு முன்னால் பளிஞர்கள் எல்லாரும் கூடி விட்டார்கள்.

தாரையும் தப்பட்டமும் ஒலித்தன. கொம்புகள் ‘கும்கும்’ என்று இயம்பின. சல்லரிகள் முழங்கின. கொட்டு ‘டும் டும்’ என்றது. சொக்கிகுடியின் ஆஸ்தான வித்வான்கள் என்று சொல்லும்படியான குழலர்கள் சொக்கி குழலை உதட்டிலே பொருத்திக் கொண்டு வன மோகினிகள் எல்லாம் சொக்கும்படியான ஒரு குறிஞ்சிப் பண்ணை வாசிக்க ஆரம்பித்தார்கள். தலைவனும் சட்டியைக் கொண்டு வந்து நாகர் பீடத்துக்கு முன்னால் நட்டு விட்டான். எதிரேயிருந்த தூபக் குழியிலே சந்தனச் சீவல்களையும் தூவி ஆயிற்று. சொக்கியும் மூங்கிற் குழலிலே தேனை எடுத்து நாகரிலே கொண்டு கொட்டுவதற்கு ஆயத்தமானாள். அந்த நேரத்திலே “ஓ” என்று ஒரு ஆவேசக் குரல் கேட்டது. எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். ‘அருள்’ என்றும், ‘பேருணர்வு’ என்றும் பண்பட்ட மொழிகளிலே ஞானிகள் சொல்கிறார்களே, அப்படிப்பட்ட ஒரு சன்னதமா அது! யாரும் எதிர்பார்க்கவில்லை. கூட்டத்துக்குள்ளே நின்று கொண்டிருந்த ‘அகவல் மகளு’க்கு ஆவேசம் வந்து அவள் குறி சொல்லத் தொடங்கினாள்.

(தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram


அவள் ஒரு கவலையுற்ற தாயாராக யிருந்தாள் — இது அவளுடைய முதல் குழந்தை — அவனோ எப்பொழுதும் அசௌகரியத்துடன் கதறிய வண்ண மிருந்தான் — அவனுடைய எடையில் மாறுதலே இல்லை — வளர்ச்சியே கிடையாது.
ஒரு நாள், சந்தோஷமாயும், திடமாயுமுள்ள தன் குழந்தையுடனிருக்கும் தன் சிநேகிதியை விசாரித்தாள். விசேஷ மென்னவென்றால் சிநேகிதியின் குழந்தையும் அவளுடைய குழந்தையும் ஒரு வயதுக் குழந்தைகள்!
சிநேகிதி சொன்னாள் "என் குழந்தைக்கு 'க்ளாக்ஸோ' கொடுக்கிறேன்". 'க்ளாக்ஸோ' சுத்தமான புஷ்டியூட்டும் பால்-உணவு. குழந்தைகளின் எலும்புகளும், பற்களும் உறுதியாக வளர 'விடமின் டி'யும் ரத்தம் வளம் பெற இரும்பு சத்தும் சேர்க்கப்பட்டுள்ளன.
SUNSHINE
Glaxo
அந்தத்தாயார் அன்றைக்கே 'க்ளாக்ஸோ' கொண்டு வந்தாள். இப்பொழுது குழந்தையைப் பாருங்கள். அவன் குதூகலத்துக்கு அளவில்லை. அயர்ந்து தூங்கவும் செய்கிறான்! எடையும் நிதானமாக அதிகரித்துக்கொண்டு வருகிறது. 'க்ளாக்ஸோ'வுக்கு நன்றி.
Glaxo
'க்ளாக்ஸோ'-குழந்தைகளின் மிகச் சுத்தமான பால்-உணவு
D. 34

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

